www.padippakam.com

# புதிய கலாச்சாரம்





மாஸ்கோ : மே நாள் பேரணி



மானங்கெட்டவர்களின் பானம் கோக் - பெப்சி



இங்கிலாந்து :
தொழிலாளர்களுக்கு செங்கொடி
முதலாளிகளுக்கோ
போலிசு கவசப்படை.



ஹூண்டாய் நிறுவனத்தின் சொத்துக்களுக்கு தீ வைத்தார்கள். வேலை நீக்கம் செய்யப்பட்ட ஹூண்டாய் தொழிலாளர்கள்.

## உலகைக் குலுக்கிய

# மே நாள்



லண்டன் :
உலக வங்கி, பன்னாட்டு நிறுவனங்கள் முற்றுகை

படிப்பகம்

www.padippakam.com

# செயற்கரிய செய்வர் சிறுவர்

## மறுகாலனியாதிக்க எதிர்ப்பு மாநாட்டு பிரச்சார இயக்கத்தில் பங்கு பெற்ற இளம் தோழர்களின் அனுபவம்

"படிக்கின்ற பருவம் எந்தவிதக் கவலையும் கடமையும் இல்லாமல் துள்ளித் திரிகின்ற பருவம். அது ஒரு வசந்த காலம்" என்று 'பேரறிஞர் அண்ணா' முதல் பெயர் தெரியாத கனவான்கள் வரை பேசுவதை நீங்கள் கேட்டிருக்கலாம்.

ஆனால் நாடே அன்னியக் கம்பெனிகளின் கைக்கு போய்க் கொண்டிருக்கிறதே என்ற கவலையோடும், எப்பாடுபட்டாவது நமது நாட்டை மீட்க வேண்டும் என்ற பொறுப்புணர்வோடும் பதினேழு பேர்களைக் கொண்ட ஒரு மாணவரணி, "இது பொறுப்பில்லாமல் சுற்றித் திரிகிற பருவமல்ல, கடமையுணர்வோடு நாட்டுக்காக செயல்பட வேண்டிய பருவம்", என்பதை நிரூபித்து விட்டது. "மறுகாலனியாதிக்க எதிர்ப்பு மாநாட்டிற்கு வாருங்கள்!" என்று கோவை மாநகரை தமது நாட்டுப்பற்று மிக்க பிரச்சார இயக்கத்தால் பாடல் பெற்ற தலமாக்கி விட்டது அந்தச் சிறுவர் பட்டாளம்.

"பிள்ளைகளே! பள்ளிக் கூட விடுமுறையாயிற்றே, உல்லாசமாய் பொழுதைப் போக்க கிஷ்கிந்தாவுக்கு வாருங்கள், பிளாக்தண்டருக்கு வாருங்கள்," என்று முதலாளிகள் பிரச்சாரம் செய்யும் நேரத்தில் "பெரியோர்களே! நமது ஆலைகள், விவசாயம், அரசுத் துறை அனைத்துமே அன்னிய வல்லரசுகளுக்கு அடிமையாக்கப்படும் இந்தத் தருணத்தில் நாம் எதிர்த்துப் பேசாமல் பொழுதைக் கழிக்கலாமா? போராட வாருங்கள்" என்று சிறுவர்கள் முழங்கிய போது பொது இடங்களில் அதிசயித்துப் போனவர்கள் பலர். ஆர்வமுடன் செவிமடுத்தவர்கள் சிலர். அலட்சியப்படுத்தியவர்களும் உண்டு.

ஜெயலலிதா கொள்ளையடித்ததைப் பற்றி பேசினால் உடன்பிறப்புகள் ரசிப்பார்கள்; கருணாநிதி கொள்ளையடிப்பதைப் பற்றி பேசினால் ரத்தத்தின் ரத்தங்கள் ரசிப்பார்கள். "ஓட்டுக் கட்சிகள் அனைத்துமே நாட்டைக் கொள்ளையடிக்கும் வல்லரசுகளுக்கு கையாட்கள், அனைவரையுமே புறக்கணியுங்கள்! போராட வாருங்கள்!" என்று பேசுவதற்கு வீரம் மட்டுமல்ல, விவேகமும் வேண்டும். பரீட்சைகளை எழுதி முடித்து விட்டு விடுமுறையில் அரசியல் பிரச்சாரம் செய்ய வந்த அந்தச் சிறுவர்கள் மக்களின் பல கேள்விகளுக்கு விடைதர வேண்டியிருந்தது.

"ஏம்ப்பா இப்பிடிப் பிரச்சாரம் பண்ணி வசூல் பண்றீங்களே, ஒரு நாளைக்கு எவ்வளவு சம்பளம்?" இப்படி ஒருவர். "சோறு போடுவாங்களா?" இப்படிச் சிலர். ஆதாயம் இல்லாமல் ஒரு அணுவும் அசையாது என பிழைப்புவாதம் புரையோடிப் போயிருக்கும் இந்தச் சமுதாயத்தின் கேள்விகளுககு "இல்லீங்க நாட்டுக்காகப் பிரச்சாரம் பண்றோம். மக்களுக்காகப் பிரச்சாரம் பண்றோம். கூலிக்காக இல்லை" என்று சிறுவர்கள் கூறியபோது, ஈசனே பிட்டுக்காக பிரம்படி வாங்கிய இந்த நாட்டில் எந்த ஆதாயமும் இல்லாமல் சொல்லடிகளை எதிர்கொள்ளும் இளம் தோழர்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டவர்கள் பலர்.

ஆலோசனை கூறுவதாக நாட்டுப் பற்றே இல்லாமல் நழுவிக் கொள்ளப் பார்த்த அதிமேதாவிகளும் உண்டு. விடுவார்களா தேசப்பற்றின் பிடிவாதக்காரர்கள். எட்டாவது படிக்கும் இளம் தோழர் தமிழ்ச் செல்வனின் அனுபவம் இது. "படிக்கிற வயசுல இப்படி உண்டியலை ஏந்திக்கிட்டு பஸ் ஸ்டாண்டுல சுத்துறீங்களே படிச்சு முன்னேறப் பாருங்கப்பா" இது ஒருவரது உபதேசம்.

"நாங்க படிச்சிப் பரீட்சையெல்லாம் எழுதிட்டுத்தான் மக்களுக்காகப் பிரச்சாரம் பண்ண வந்துருக்கோம், நீங்க மாநாட்டுக்காவது வாங்க" என்று தமிழ்ச் செல்வன் பொறுப்பாகப் பதில் சொன்ன போது "ஊம், பார்க்கலாம்" என்று அலட்சியமாகத் தலையாட்டினாராம் அவர். தனக்காக அல்ல, எதிர்காலத்தில் இந்த நாட்டு மக்கள் உண்டியலேந்தி பிச்சை எடுக்கும் நிலைக்கு வந்துவிடக் கூடாதே என்ற நாட்டுப்பற்றுடன் உண்டியலேந்தி தெருவில் இறங்கிப் பிரச்சாரம் செய்யும் தமிழ்ச் செல்வனின் தேசப் பற்றும் பொறுப்புணர்வும் இந்த நாட்டுப் பிரதமரிடமோ, முதலமைச்சரிடமோ தேடினாலும் கிடைக்காத ஒன்று.




ஆறாம் வகுப்புப் படிக்கும் மாணிக்கம் என்ற சிறுவனின் கருத்து இது: "பெரியவங்களுக்கு நாட்டுப் பற்றே இல்லை, நாங்க போய்ப் பிரச்சாரம் பண்ணா, நீங்க முன்னேற வழியைப் பாருங்கன்னு சுயநலமாச் சொல்றாங்க, நாட்டுக்காகத் தானும் போராடாம, எங்களையும் போராடவேணாம்னு புத்தி சொல்றாங்க."

இந்த நாட்டு மக்களின், குறிப்பாக

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• புதிய கலாச்சாரம்

• மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

• போர்: **18**
• குரல்: **10-12**
• மே - 2001

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
அசோக் நகர்,
சென்னை - 600 083.

# உலகமயமாக்கத்திற்கெதிராக உலகத் தொழிலாளிகளின் போர்!

"எட்டு மணிநேர வேலை" என்ற முழக்கத்தை முன் வைத்து அன்று போராடினார்கள் அமெரிக்கத் தொழிலாளர்கள். 115 ஆண்டுகள் கடந்த பின் இன்னும் நாம் அதே நிலையில்தான் இருக்கிறோம். பல்பொருள் அங்காடிகளில் வேலை செய்யும் ஊழியர்கள் ஒரு நாளைக்கு 12 மணி நேரம் உழைக்கிறார்கள். 15 நிமிடம்தான் இடைவேளை. சிறுநீர் கழிக்கக்கூட அவர்கள் எழுந்து செல்ல அனுமதி இல்லை" என்று மே தின அறிக்கையில் தங்கள் வேலை நிலைமையை விளக்குகிறார்கள் போலந்து தொழிலாளர்கள்.

சொல்பவர்கள் பீகாரின் கொத்தடிமைகள் அல்லர்; போலி சோசலிசம் வீழ்ந்து **உண்மையான** முதலாளித்துவம் நிலைநாட்டப்பட்ட ஒரு கிழக்கு ஐரோப்பிய நாட்டின் தொழிலாளர்கள். ரசியாவிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் போலி சோசலிசம் தோல்வியடைந்து முதலாளித்துவ அரசுகள் நிலைநாட்டப்பட்டவுடனே, "வரலாற்றின் முடிவு, சித்தாந்தத்தின் முடிவு, கம்யூனிசத்தின் முடிவு" என்று விதவிதமான முடிவுகளை முன் மொழிந்தார்கள் முதலாளித்துவ எழுத்தாளர்கள். ஆனால் 'இது முடிவல்ல தொடக்கம்' என்று கட்டியம் சொல்கின்றன இந்த ஆண்டு மே நாளன்று உலகம் முழுவதிலும் நடந்துள்ள தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்கள்.

பொருளாதார வாதம் — நாடாளுமன்ற நாற்காலி அரசியல் என்ற குட்டைக்குள் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் இந்திய போலி கம்யூனிஸ்டுகளும் ரசிய - கிழக்கு ஐரோப்பிய வீழ்ச்சிக்குப் பின் கதி கலங்கிப் போனார்கள். பெயரளவிலான கம்யூனிஸ்டு அரசியலையும் கைவிட்டு, "மனிதாபிமான சோசலிசம், ஜனநாயகபூர்வமான சோசலிசம்" என்று ஈனச் சுரத்தில் முனகத் தொடங்கினார்கள். தனியார்மயம் - தாராளமயம் - உலகமயத்தை ஒழிப்போம் என்று முழங்குவதற்குப் பதிலாக, உலக வர்த்தகக் கழகத்தின் ஆட்சியின்கீழ் தொழிலாளிகளின் வேலையை, கூலியை, போனசைப் பாதுகாப்பதையே மே நாள் சபதமாக்கினார்கள். ஆனால் உலகெங்கும் இந்த மே நாளன்று தொழிலாளர்கள் எழுப்பியுள்ள அரசியல் முழக்கங்கள் போலி கம்யூனிஸ்டுகளை செவுளில் அறைகின்றன. "உலக வங்கி - உலக வர்த்தகக் கழகத்தைக் கலை! ஏழை நாடுகளின் கடனை ரத்து செய்! முதலாளித்துவம் ஒழிக!" என்ற முழக்கங்கள் கனடா முதல் ஆஸ்திரேலியா வரை எதிரொலித்திருக்கின்றன.

அமைதியான ஊர்வலம், ஆர்க்கெஸ்ட்ரா, அன்னதானம் என்று மே தினத்தை இன்னொரு ஆயுத பூசையாக்கி, அதன் உச்சகட்டமாக புரட்சித்தலைவியை ஆட்சியில் அமர்த்துவதையே இன்றைய மே தினக் கடமையாக்கியிருக்கிறார்கள் போலி கம்யூனிஸ்டுகள். இன்னொருபுறம், போலீசுடன் தெருச்சண்டை, நாஜிகளுடன் மோதல், பன்னாட்டு நிறுவனங்கள் மீது தாக்குதல், பங்குச் சந்தை முற்றுகை என்று போர்க்குணத்துடன் முன்னேறியிருக்கிறது பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் மே தினப் போராட்டம்! உலக முதலாளித்துவத்தின் வெற்றியை இறுதி வெற்றியாக எண்ணிக் களித்திருக்கும் ஆளும் வர்க்கத்தினர் முதல் போலிக் கம்யூனிசத்தின் தோல்வியை கம்யூனிசத்தின் தோல்வியாக எண்ணித் துவண்டிருக்கும் தொழிலாளி வர்க்கத்தினர் வரை அனைவரையும் நிமிர்ந்து பார்க்க வைத்திருக்கும் இவ்வாண்டின் மே தினப் போராட்டம் பற்றிய செய்திகளைத் தொகுத்துத் தருகிறோம்.

"இதுவரை காணாத அளவுக்கு வன்முறை தலைவிரித்தாடும் முதலாளித்துவ எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை லண்டன் சந்திக்கவிருக்கிறது" என்று தினமலர் பாணியில் ஆள்காட்டி வேலை செய்தது லண்டனின் டைம் நாளேடு. மே தினத்துக்கு எதிராக சுமார் 200 கட்டுரைகள் மற்றும் செய்திகள் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியாகியிருந்தன. ஒரு தொழிலாளிக்கு இரண்டு போலீசு என்ற கணக்கில் ஆயுத போலீசு குவிக்கப்பட்டிருந்தது. பன்னாட்டு நிறுவனங்களின் கடைகளுக்கும் அலுவலகங்களுக்கும் பலத்த போலீசு பாதுகாப்பு வேறு.

உலகைச் சூறையாடும் பன்னாட்டு நிறுவனங்களின் பெயர், அலுவலக முகவரி ஆகியவற்றை வெளியிட்டு அங்கெல்லாம் ஆர்ப்பாட்டம் நடத்துமாறு அறைகூவல் விட்டிருந்தார்கள் தொழிலாளர்கள். நைக், மெக்டொனால்ட் போன்ற நிறுவனங்கள் தங்கள் கண்ணாடி முகப்புகள் மீது பிளைவுட் அடித்து பாதுகாத்துக் கொண்டன.

எனினும் அனைத்தையும் மீறி அந்தக் கடைகள் தொழிலாளர்களால் நொறுக்கப்பட்டன. உலக வங்கி முற்றுகையிடப்பட்டது. சைக்கிள்கள் நுழைய அனுமதிக்கப்படாத லண்டன் நகரின் மையப் பகுதிக்குள் நூற்றுக்கணக்கான சைக்கிள்களை ஓட்டி வந்து போக்குவரத்தை நிலைகுலையச் செய்தார்கள் தொழிலாளிகள். ஆர்ப்பாட்டத்தை

படிப்பகம்

www.padippakam.com

வீடியோ படமெடுத்த போலீசின் வீடியோ காமெராக்கள் மீது கற்களையும், பெயிண்ட் குண்டுகளையும் வீசி செயலிழக்கச் செய்தார்கள். ஆர்ப்பாட்டக்காரர்களை போலீசு சுற்றி வளைத்தது. போலீசை தொழிலாளர்கள் சுற்றி வளைத்தார்கள். கொட்டும் மழையில் நான்கு மணி நேரம் நீடித்தது இந்த முற்றுகை..

ஜெர்மன் அரசோ தொழிலாளர்களின் மே தினப் போராட்டத்திற்குத் தடை விதித்து நாஜிகளின் ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி அளித்தது. தடையை மீறி ஜெர்மனியெங்கும் 5 லட்சம் தொழிலாளிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பெர்லின் நகரில் சாலைத் தடையரண்கள்; ஜெர்மனியெங்கும் நாஜிகளின் ஆர்ப்பாட்டத்துடன் மோதல்! "வன்முறை தாண்டவமாடிய மே தினம்" என்று ஜெர்மன் பத்திரிகைகள் குமுறின.

பல ஐரோப்பிய நாடுகளிலும் மே தின எழுச்சியைக் கண்டஞ்சி நாஜிகளைத் தொழிலாளர்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டு கலகத்தை உருவாக்க முனைந்தது போலீசு. போலந்து, இத்தாலி, பிரான்சு என எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். டப்ளின் நகரத்தின் பங்குச் சந்தையை இழுத்து மூடினார்கள் ஐரிஷ் தொழிலாளர்கள். பாலஸ்தீன விடுதலைக்கு குரல் கொடுத்தார்கள் ஸ்காட்லாந்து தொழிலாளர்கள். ஆயுத ஏற்றுமதிக் கம்பெனிகளையும், பன்னாட்டு நிதிக் கம்பெனிகளையும் முற்றுகையிட்டார்கள் ஹாலந்து தொழிலாளர்கள். ஸ்விட்சர்லாந்தின் சூரிச் நகரில் மே தின ஆர்ப்பாட்டம் தொழிலாளர்கள் - போலீசு மோதலாக வெடித்தது. துருக்கியில் 20,000 தொழிலாளர்களும், வியன்னாவில் ஒரு லட்சம் தொழிலாளர்களும் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர்.

"வேலை நிறுத்தமே செய்யாத நாடு" என்று ஆளும் வர்க்கத்தால் புகழப்படும் ஜப்பானில் 13 லட்சம் தொழிலாளர்கள் மே தினத்தில் திரண்டார்கள். ஆஸ்திரேலியா - சிட்னி நகரின் பங்குச் சந்தை முற்றுகையிடப்பட்டது. "உலக வர்த்தகக் கழகத்தை மூடு; மூன்றாம் உலக நாடுகளின் கடனை ரத்து செய்; கல்வியை தனியார்மயமாக்காதே" என்ற முழக்கங்களுடன் ஆஸ்திரேலிய மாணவர்கள் தொழிலாளர்களுடன் சேர்ந்து கொண்டனர்.

சீனத்துக்கு எதிராக அமெரிக்காவால் ஊட்டி வளர்க்கப்பட்ட தைவானில் 'புதிய சீர்திருத்தக் கொள்கை'யால் வேலையிழந்த 5000 தொழிலாளிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். மே தினத்தை ஐ.எம்.எஃப் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமாக நடத்தினார்கள் இந்தோனேசியத் தொழிலாளர்கள். கொலம்பியா, அர்ஜென்டினா உள்ளிட்ட தென் அமெரிக்க நாடுகள் முதல் தென் ஆப்பிரிக்கா வரை மே தின ஆர்ப்பாட்டங்கள் நடைபெறாத நாடே இல்லை.



"மீண்டும் கம்யூனிசம்"
குடும்பத்துடன் ரசியத் தொழிலாளி

ஏழை நாடுகளின் தொழிலாளர்களை இறக்குமதி செய்து குறைந்த கூலிக்குச் சுரண்டும் பன்னாட்டு நிறுவனங்களை எதிர்த்து அமெரிக்காவிலும் கனடாவிலும் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. அமெரிக்க - கனடிய வர்த்தகக் கூட்டை ரத்து செய்யக் கோரிப் போராடினார்கள் கனடா தொழிலாளர்கள்.

தென் கொரியாவில் ஹூண்டாய் நிறுவனத்தினால் ஆட்குறைப்பு செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தெருவில் இறங்கிக் கலகம் செய்தார்கள். இருபதாயிரம் தொழிலாளர்களுக்கு 20,000 போலீசு என்று நடந்த மோதலில் சியோல் நகரமே நிலைகுலைந்தது. ஹூண்டாயின் சொத்துக்கள் தீக்கிரையாகின.

முதலாளித்துவக் கொடுங்கோன்மையின் கீழ் குமுறிக் கொண்டிருக்கும் ரசியத் தொழிலாளர்கள், கையில் செங்கொடியுடன் ஆயிரக்கணக்கில் அணி திரண்டார்கள். மாஸ்கோ நகரப் பேரணியில் லெனின், ஸ்டாலின் படங்களைக் கைகளில் ஏந்திய தொழிலாளர்கள், "முதலாளித்துவம் ஒழிக!" "மக்களுக்கு அதிகாரம்!" "உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!" என்று முழங்கினார்கள்.

உலகெங்கிலும் நடைபெற்றுள்ள இந்த மே தினப் போராட்டங்களை கட்சி சார்பற்ற தொழிற்சங்கங்கள் முதல் கம்யூனிஸ்டு புரட்சியாளர்கள் வரை பலரும் தலைமையேற்று நடத்தியிருக்கிறார்கள். எனினும் பல லட்சம் தொழிலாளர்களின் போர்க்குணமிக்க பங்கேற்பும் தென் அமெரிக்கா முதல் ஆஸ்திரேலியா வரை அனைத்து நாட்டுத் தொழிலாளர்களும் "முதலாளித்துவம் ஒழிக! உலக வர்த்தகக் கழகம் ஒழிக" என்று ஒரே குரலில் முழக்கமிட்டதும் இந்த மே தினப் போராட்டத்தின் அரசியல் முக்கியத்துவத்தைப் பறைசாற்றுகின்றன..

மலிவான கூலிக்கு ஏழை நாட்டுத் தொழிலாளிகளை இறக்குமதி செய்வது, பிறகு அந்த அந்நியர்களுக்கு எதிராக உள்நாட்டு நாஜிகளைத் தூண்டி விடுவது என்ற ஏகாதிபத்தியங்களின் நயவஞ்சகமான தந்திரமும் இம்மேதினத்தில் அம்பலமாகியிருக்கிறது. இந்தத் தந்திரத்திற்குப் பலியாகாமல் ஐரோப்பிய அமெரிக்கத் தொழிலாளிகள் நாஜிகளை எதிர்த்துப் போராடியிருப்பது சர்வதேசத் தொழிலாளர் ஒற்றுமைக்கான நம்பிக்கையை விதைத்திருக்கிறது.

மேல்நிலை வல்லரசுகள் திணிக்கும் மறுகாலனியாக்கம் ஏகாதிபத்திய எதிர்ப்பைத் தோற்றுவித்தே தீரும். ஏகாதிபத்தியங்களின் உலகமயமாக்கத்தின் எதிர்விளைவு உலகத் தொழிலாளர் ஒற்றுமை! கம்யூனிசம் எனும் பூதத்தைக் கொன்று புதைத்து விட்டதாக எதிரிகள் கண்ட கனவு இந்த மே தினத்தில் கலைந்து விட்டது!

**மேல்நிலை வல்லரசுகள் திணிக்கும் மறுகாலனியாக்கம் ஏகாதிபத்திய எதிர்ப்பைத் தோற்றுவித்தே தீரும். ஏகாதிபத்தியங்களின் உலகமயமாக்கத்தின் எதிர்விளைவு உலகத் தொழிலாளர் ஒற்றுமை! கம்யூனிசம் எனும் பூதத்தைக் கொன்று புதைத்து விட்டதாக எதிரிகள் கண்ட கனவு இந்த மே தினத்தில் கலைந்து விட்டது!**

www.padippakam.com

ஆந்திர சிவில் உரிமைப் போராளிகள்: **தோழர்கள் புருசோத்தம், அஜீஸ் அலி** கொலை!

# மரணத்திற்குப் பின்னும் வாழும் மனிதர்கள்

மரணத்திற்குப் பின்னும் வாழ்ந்திருக்கும் மனிதர்களில் ஒருவரை சமீபத்தில் கண்டேன், அவருடைய அன்பு மனைவியின் கடைசி கடிதத்தின் மூலமாக.

அதைப் படிக்கும் மனிதர்கள் எவராயினும் ஒரு கணம் அவர்கள் கண்கள் கலங்கிக் குளமாகும். மறுகணம் நெஞ்சம் கொதிக்கும் அந்தக் கொதிப்பிலே கண்ணீர் ஆவியாகும். இறுதியில் கண்களில் அனல் பறக்க அவரது இலட்சியம் இன்னும் ஆழமாகப் பதியும்.

''என் வீடு, என் மனைவி, என் மக்கள்'' என்ற குறுகிய வட்டத்திற்குள் வாழ்ந்து மடியும் மனிதர்களைப் போல புரட்சிகர இலட்சியத்திற்கும், பொதுமக்கள் நலன்களுக்கும் போராடி மடியும் புரட்சியாளர்களின் உயிர் அற்பமானதல்ல என்று அவர் கருதினார். எனவே, ''போலீசுடன் மோதல்'' என்ற பெயரில் புரட்சியாளர்களை ஆந்திர அரசு பயங்கரவாதிகள் என்று கொன்று வீசுவதைக் கண்டு கொதித்துப்போனார். உண்மையை வெளிச்சத்திற்கு கொண்டுவருவதற்காக இரத்தம் சிந்திப் போராடினார். அவர்தான் ஆந்திர மக்களிடையே மிகவும் பிரபலமான வழக்கறிஞர் டி.புருஷோத்தம். அவரது உறுதி கண்டு சகிக்க முடியாத அரசு ஏவிய கொலைகாரர்கள் ஐதராபாத் நகரில் உள்ள தில்குஷ் நகர் கொனாரக் சினிமா அரங்கின் முன்பு பட்டப்பகல் 12 மணிக்கு கடந்த நவம்பர் 23 - ம் தேதி வெட்டிக் கொன்றனர்.

ஆந்திராவில் புரட்சியாளர்கள் படுகொலை செய்வது உட்பட மனித உரிமைகளுக்காகப் போராடிய காரணத்திற்காக இப்படி கோரமான முறையில் கொல்லப்படும் ஐந்தாவது தலைவர் புருஷோத்தம். கிரிமினல் குற்றவாளிகளைக் கொண்டு ஆந்திர போலீசு கட்டியுள்ள ''பச்சைப் புலிகள்'' என்ற கொலைக் கும்பல் நடத்திய தாக்குதலுக்குப் பலியான புருஷோத்தமின் உடலை சில நிமிடங்களில் அகற்றி, மணல்தூவி, இரத்த கறையை அழித்து, சாட்சியங்களை மறைப்பதில் போலீசு அதிகாரிகளே தீவிர அக்கறை காட்டினர். ஆனால் அவரோ புரட்சிகர மக்கள் மனதில் நீங்காத, அழிக்கமுடியாத அடையாளத்தைப் பதித்துவிட்டார். தியாகியான தனது கணவருக்கு நினைவஞ்சலியாக அவரது மனைவி எழுதிய கடைசி கடிதம் இதையே காட்டுகிறது.

''அன்புள்ள உத்தம்! நீங்கள் உங்கள் இல்ட்சியங்களையும் எண்ணங்களையும் பெரும் அளவில் பகிர்ந்து கொண்ட பலப்பல மக்களுடைய இதயங்களில் வாழ்கிறீர்கள் என்று அறிந்த போது நான் பிரமித்துப் போகிறேன். நீங்கள் அரசினால் கொல்லப்பட்ட செய்தியை கேட்ட கணத்தில் நூற்றுக்கணக்கான நமது தோழர்கள் உங்களை காண குவிந்தார்கள். எனக்கு அவர்களை நேரடியாக தெரியாது. அவர்களெல்லாம் உங்கள் சேவையைப் பெற்றவர்கள். உங்கள் நண்பர்கள். உங்கள் சகப்பயணிகள். ஓஸ்மானியா மருத்துவமனையின் சவக்கிடங்கிலிருந்து உங்களின் இறுதிப் பயணம் புறப்பட்டபோது நூற்றுக்கணக்கில் இருந்த மக்கள் கூட்டம் சின்ன தண்டரப்பாடு கிராமத்தை அடைந்த போது பல ஆயிரமாக மாறியது'' என்று பிரமித்துப் போகிறார் அவருடைய இலட்சிய மனைவி ஜோதி.

''நீங்கள் கொல்லப்பட்ட செய்தி அறிந்தவுடன் அங்கு குவிந்த உங்கள் தோழர்கள் அரசின் சதிச் செயலை அம்பலப்படுத்தி முழக்கமிட்டார்கள். உங்கள் இலட்சியத்தை முன்னெடுத்து செல்வோம் என்று சம்பவம் நிகழ்ந்த இடத்தில், நீங்கள் சிந்திய பச்சை இரத்தின் மீது சபதம் செய்தார்கள். ''நாங்கள் மனித உரிமை கோரினால் கொன்று விடுவீர்களா?'' என்று கேட்கும் சுவரொட்டிகள் இரவோடு இரவாக நகரை நிரப்பின.

''நீங்கள் எடுத்துவைத்த ஒவ்வொரு அடியையும் மகபூப் நகர் நினைவுபடுத்துகிறது. அங்கே உங்கள் மரணம் பற்றி பேசும்படி நமது நண்பர்கள் கேட்டுக்கொண்டார்கள். சவக்கிடங்கில் கேட்டுக் கொண்ட போது என்னால் ஒரு வார்த்தை கூட பேச முடியவில்லை. ஆனால் மெகபூப் நகரில் உங்கள் வார்த்தைகளை மீண்டும் நினைவுபடுத்திக் கொண்டேன். அரசின் கொடூரத்தை அம்பலப்படுத்த வேண்டிய என் கடமை நினைவுக்கு வந்தது. நான் பேச முயன்றேன்.

''வாழ்வும் போராட்டமும் ஒரே பொருள்படும்படி மாறும் பொழுது குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் அந்த போராட்டத்தில் ஒரு அங்கம் ஆகிவிடுகிறோம் என்று நீங்கள் சொல்வீர்கள். அந்த திசையில் 8 ஆண்டும் நமது அருமை மகள் சுவேச்சாவை நாம் வளர்த்தது வீணாகிவிடவில்லை. அவள் 'புருஷோத்தம் தியாகியானார்' என்று முழங்கியபோது அது எனக்கு துணிவைக் கொடுத்தது.

''கடுவாலில் இருந்து அயிஜா, அங்கிருந்து சின்ன தண்டரப்பாடு என்று வழியெல்லாம் ஒரு திருவிழாவுக்குத் திரளுவது போல மக்கள் குவிந்து விட்டார்கள். ஊர்வலத்தில் கலந்து கொள்ள இயலாமல்போன மக்களில் சிலர் வீட்டுக்கூரை மீதும், சிலர் பால்கனி மீதும் முடிந்த இடங்களில் எல்லாம் நின்றும் தமது இறுதி மரியாதை செலுத்தினர். சிலர் உங்களுக்கு இறுதி வணக்கம் செலுத்தினர். சிலர் உங்கள் உடல் இருந்த வண்டியில் ஏற முயன்றனர். சின்ன தண்டரப்பாடுவில் ஏராளமானவர்கள் உங்களுக்கு மாலைபோட்டு மரியாதை செலுத்தினர். ஆயிரக்கணக்கான வெளியூர்க்காரர்கள், கிராமத்தில் வாழும் ஒவ்வொருவரும் உங்கள் இறுதிப் பயணத்தில் கலந்து கொண்டனர்.



தோழர். புருசோத்தம்

www.padippakam.com

'ஒவ்வொருவரும் என்னோடு பேச விரும்பினர்; ஒவ்வொரு பெண்ணும் என்னருகே வர முயன்றனர்; நீங்கள் அவர்களுடைய நெஞ்சுக்கு எவ்வளவு நெருக்கமானவர் என்று சொல்ல முயன்றனர். எல்லோருமே கதறினர். அவர்கள் தங்கள் அண்ணன் என்றே தங்களை அழைத்தனர். மீண்டும் அவர்களைக் காண வருவதாக நீங்கள் உறுதி கூறியதை நினைவுபடுத்தினார்கள். நீங்கள் வாக்களித்தபடி வரமாலேயே போனீர்கள் என்று சொல்லி அழுது துடித்தார்கள்.

''உங்களைக் கொன்றது யார் என்று கேட்டுக் கொண்டே இருந்தார்கள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்கள் எல்லோரும் அழுது கொண்டேயிருந்தார்கள். உங்கள் மரணச் செய்திகேட்டு அதிர்ச்சி அடைந்திருந்தபோதும், நடப்பவையெல்லாம் கண்ட உங்கள் பெற்றோர் அமைதி அடைந்தனர். 'மனித உரிமை இயக்கத்துக்கு நாங்கள் ஒரு புருஷோத்தமைக் கொடுத்தோம். ஆனால், இப்போது எங்கள் மகனுடைய இறுதிப் பயணத்தில் கலந்து கொள்வதற்கு வந்த ஆயிரக் கணக்கானவர்களில் ஒவ்வொருவரிலும் எங்கள் மகன் புருஷோத்தம் உயிர் பெற்றெழுந்து வருகிறான்' என்றனர். என் வாழ்க்கைத் துணைவர் ஒரு மனித உரிமைக்கான தலைவராக எப்படி வளர்ந்து ஏராளமான மக்கள் மனதைத் தொட்டார் என்று வியந்து போகிறேன்.''

மனித உரிமைப் போராளி புருஷோத்தமின் இறுதிப் பயணக் காட்சிகளால் வியந்து போன அவரது இலட்சிய மனைவி அவருடைய வாழ்க்கைப் பண்புகளை மீண்டும் நினைவு கூறுகிறார். அது அவரை நெகிழ்வடையச் செய்கிறது. புரட்சி எண்ணத்தில் பண்படுத்துகிறது. தான் மட்டுமல்ல தன்னைச் சூழ்ந்துள்ள மக்கள் மனதில் மின்னொளி வீசும் அவரது வாழ்க்கை பெருமிதமிக்க காவியமாகவே தெரிகிறது.

அவர் சொல்கிறார்:

''உங்களைப் பற்றி நான் என்ன பேசுவது? நமது மணநாளன்று நீங்கள் உங்கள் செயற்குழு கூட்டத்தை வைத்திருந்தது நினைவுக்கு வருகிறது. அடுத்த நாளே ஒரு உண்மை அறியும் குழுவில் சகாபாத்துக்குப் போனது நினைவுக்கு வருகிறது. ஒவ்வொரு விடயத்தையும் அரசியல் ரீதியிலேயே நீங்கள் சிந்திப்பீர்கள். நீங்களும், நமது மகளும் நானும் சின்ன தண்டரப்பாடு கிராமத்துக்குத் திருவிழாவுக்குப் போகும் போதெல்லாம் ஒரு கணம் கூட வீட்டில் தங்க மாட்டீர்கள். மதிய உணவுக்காக வீட்டுக்கு வரும்போது கூட யாராவது பாதிக்கப்பட்டவர் உங்களைத் தொடர்ந்து வருவார்கள்.

''எனக்கு இன்னொரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. ஒருமுறை தண்டரப்பாடுக்குப் போனோம். ஒரு பெண்ணிடம் ஒருவன் தகாதமுறையில் நடந்து கொண்டதை நீங்கள் அறிந்தீர்கள். தான் தகாதமுறையில் நடக்கவில்லை என்று கூறி உங்களிடம் அவன் புளுக முயன்றான். நீங்கள் கோபமடைந்து அவனை அடிக்க முயன்று உங்கள் கையை உடைத்துக் கொண்டீர்கள். அந்த முறிவு சரியாகாமல் மூன்று மாதங்கள் அவதிப்பட்டீர்கள்.

''நீங்கள் எந்தக் கிராமத்துக்குப் போனாலும் ஏதோ கொஞ்சம் அறிமுகம் ஆனவர்களைக் கூட தொடர்பு கொள்வீர்கள். 'அவர்களால் என்ன பயன்' என்று உங்களிடம் சந்தேகம் கேட்பேன். 'அவர்கள் நமக்கு ஒரு வேளை உணவு கொடுத்தால் கூட அந்த வகையில் அவர்கள் இயக்கத்துக்கு உதவுவதாகும்' என்று எனக்கு நீங்கள் சொல்வீர்கள். அவர்களை நேரில் பார்க்க முடியாவிட்டால் தொலைபேசியிலாவது தொடர்பு கொள்வீர்கள். தெரிந்தவர்கள் நண்பர்களிடம் எவ்வளவு உயிரோட்டமான உறவை நீங்கள் பராமரிப்பீர்கள்!



**தோழர். புருசோத்தமுக்கு பிறகு ஆந்திர அரசால் படுகொலை செய்யப்பட்ட தோழர் அஜீஸ் அலி.**

''நாம் மெகபூப் நகருக்குக் குடியேறிய போது உங்கள் பொறுப்புகள் பெருகின. உண்மை அறியும் குழுவின் உறுப்பினராக ஏராளமான இடங்களுக்கு நீங்கள் போனீர்கள். நீங்கள் கால் வைக்காத ஒரு கிராமமோ, குடியிருப்போ அந்த மாவட்டத்தில் கிடையாது.

''பெண் குலத்தின் துயரங்கள் குறித்து நீங்கள் உருகிப் போவீர்கள். உங்கள் தாயை நீங்கள் மிகவும் நேசித்தீர்கள். அவளது துன்ப துயரங்களுக்கு ஒரு முடிவே இல்லை என்று கவலைப்படுவீர்கள். எந்த வீட்டுக்குப் போனாலும் பெண்களுடன் கலந்து விடுவீர்கள்; தடையின்றி இயல்பாக அவர்களிடம் பேசுவீர்கள். கொஞ்ச நேரம் கிடைத்தால் கூட அவர்களுடைய பிரச்சினைகள், துயரங்களை விசாரிப்பீர்கள். வீட்டு வேலை என்பது முழுக்கவும் பெண்களுக்கு மட்டுமே பொறுப்பானவை அல்ல; இருவருமே பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று அமைப்புகளில் உள்ள ஆண்களுக்கு உணரவைப்பீர்கள். தன் உணவுத் தட்டை கழுவுவதில் இருந்து வீட்டு வேலைகளை பகிர்ந்து கொள்வதுவரை அவசியம் என்று ஒவ்வொருவருக்கும் அறிவுறுத்துவீர்கள். எதைப் பிறருக்குப் பிரச்சாரம் செய்கிறீர்களோ அதையே கடைப்பிடிப்பது உங்கள் வழக்கம். பெப்பைரில் இருந்தபோது, ஒருமுறை நான் வேலையாகப் போய் இருந்தேன். உள்ளாடை உட்பட என் துணிகளையெல்லாம் நீங்களே துவைத்து விட்டீர்கள். நான் எரிச்சலடைந்தேன்.

''சுவேச்சாவுக்கு மூன்று வயதான போது குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சைக்கு வலியுறுத்தி நீங்கள் செய்து கொண்டீர்கள். அடுத்த ஆண்டு வெர்கோசில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டீர்கள். அதன்பிறகு உங்கள் உடல்நிலை சீர்கெடத் தொடங்கியது.

''ஏற்கனவே சீர்கெட்டிருந்த உங்கள் உடல்நிலை, பிறகு 1997-ஆம் ஆண்டு எதிரிகள் உங்கள் மண்டையைத் தாக்கியதால் மிகவும் மோசமானது. நீங்கள் அவசரச் சிகிச்சைப் பிரிவில் இருந்தீர்கள் உங்களுக்கு இருபுறமும் இருந்த நோயாளிகள் இறந்து போனபோது நான் பதற்றமடைந்தேன். சவங்களோடு சவங்களுக்கு மத்தியில் சகவாழ்வு என்று கிண்டலடித்து என் பதற்றத்தைப் போக்கினீர்கள்.

''இயக்கத்துக்காகவும், மக்களுக்காகவும் கடுமையாக உழைத்த உங்கள் உடல்நிலை மோசமடைந்தது. முதல் தாக்குதலுக்குப் பிறகு முழங்கால் மூட்டுக்களில் நிரந்தர வலி ஏற்பட்டது. உங்களுக்கு மூக்கு அறுவை சிகிச்சை அவசியமென்று மருத்துவர்கள் வலியுறுத்தினார்கள். தாமதமாக உணவு உட்கொண்டால் மயக்கம் வரும். உங்கள் உடலின் எந்த உறுப்பும் சரியில்லை. இந்த மோசமான உடல்நிலையுடன் நீண்ட காலம் வாழமாட்டேன் அதற்குள் அதிக இடங்களுக்குப் போய் கூடுதலாக வேலை செய்ய வேண்டும் என்பீர்கள்.

''நமக்கென்று தனிப்பட்ட வாழ்க்கை கிடையாது. அரசியல் வாழ்வுதான் நமது சொந்த வாழ்வு. அவ்வாறு சொந்த வாழ்க்கையை அரசியல் வாழ்க்கையாக மாற்றுவ

www.padippakam.com

தற்கு முயன்றதாகச் சொல்வீர்கள். புதிதாகப் பழக்கமானவர்களுக்கு வேலைகள் ஒதுக்கி மாற்ற முயலுவீர்கள். அதுபோல ஒரு புதியவருக்கு பிரசுரம் எழுதக் கொடுத்து, அவர் தயங்கிய போது நம்பிக்கையூட்டி செய்வித்தீர்கள். ஆணோ பெண்ணோ யாரைச் சந்தித்தாலும் உடனே பொருத்தமான வேலை தருவீர்கள்.

''ஒவ்வொருவரும் தன்னால் முடிந்த ஏதாவது பணிகளை செய்ய வேண்டும் என்று சொல்வது உங்கள் வழக்கம். உங்களுக்குப் பழக்கமான ஒரு பெண்ணைச் சமீபத்தில் சந்தித்த போது அமைப்புப் பணிகளில் ஈடுபடுமாறு வலியுறுத்தினீர்கள். அவரோ குடும்பப் பொறுப்புகள் காரணமாக வெளி வேலை போக முடியாது வீட்டுக்குள் பணியாற்ற முடியும் என்றார். நான்கு சுவர்களுக்குள் செய்யக்கூடிய எவ்வளவோ வேலைகள் உள்ளன எனக் கூறி செய்தித் துண்டுகளைச் சேர்க்கும்படி பணித்தீர்கள்.

''சுவேச்சாவைப் பள்ளியில் சேர்த்த போது எனது துணைப் பெயரை இணைத்து பன்னூரி சுவேச்சா என எழுதினீர்கள். நாம் ஆணாதிக்கத்தை எதிர்க்கிறோம்; அதனால் தான் தந்தையின் துணைப் பெயரைச் சேர்க்கும் வழக்கத்துக்கு மாறாகத் தாயின் துணைப் பெயரைச் சேர்த்தீர்கள். நீ யார் என்று பிறர் கேட்டால் நான் ஜோதியின் மகள் என்றே பதில் கூறும்படி நமது மகளைப் பழக்கினீர்கள்.

''ரேசன் அட்டையில் குடும்பத் தலைவி என்று எனது புகைப்படத்தை ஒட்டி நீங்கள் பதிவு செய்தது இன்னமும் இருக்கிறது.

''உங்கள் குடும்பத்தில் நீங்களே அனைவரும் நேசிக்கும் பிள்ளை. ஆனால், எனது சாதி காரணமாக சமையலறைக்குள் என்னை உங்கள் குடும்பத்தார் அனுமதிக்கவில்லை. நான் விரக்தியடைந்தேன். சமையலறைக்குள் என்னை அனுமதித்தால்தான் தண்டரப்பாடு கிராமம் வருவேன். இல்லையானால் வரமாட்டேன் என்று உறுதியாகச் சொன்னேன்.

''உடனே உங்கள் பெற்றோருக்கு நீங்கள் கடிதத்தில் நானும் ஜோதியும் வேறு வேறு அல்ல. அவளை சமையலறைக்குள் அனுமதிக்காவிட்டால் உங்களைப் பார்க்க நான் வரமாட்டேன் என்று எழுதினீர்கள். உங்கள் பெற்றோரை மிகவும் நேசித்தபோதும், அவர்கள் உடல்நிலை குன்றியிருந்த போதும் சமரசம் செய்து கொள்ள மறுத்தீர்கள்.

''நீங்கள் நம்பிக்கை கொண்ட கருத்துக்களுக்காக பெற்றோரிடம் மட்டுமல்ல, சகோதரரிடமும் சண்டையிட்டீர்கள். ஒரு மாதம் முன்பு பிற்பட்ட சாதியினரும் பிறரும் தண்டரப்பாடுவில் காந்திசிலை அமைத்தனர். அதனருகே அம்பேத்கர் சிலை வைக்க வேண்டுமென தலித்துகள் விரும்பினர். உங்கள் சகோதரரும் மற்றவர்களும் தலித்துக்களை அடித்து கிராமத்தைவிட்டே விரட்டினர். நீதி கேட்டு தலித்துகள் உங்களிடம் வந்தார்கள். அவர்களுக்கு நம்பிக்கையூட்டி, கிராமத்துக்குப் போய் உண்மை அறிந்த நீங்கள் மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி உங்கள் சகோதரனைக் கைது செய்யக் கோரினீர்கள்.

''மேலும் கிராம மக்கள் கோரிக்கை ஏற்று அம்பேத்கர் சிலையைத் திறந்து வைத்தீர்கள். கூட்டம் நடந்த இடத்திற்கு வந்த உங்கள் தமக்கை வீட்டுக்கு வரும்படி அழைத்தார். உங்கள் தந்தைக்கு உடல்நலம் சரியில்லை என்று கூறி அவள் அழுதாள். ஆனால் உறுதிகுலையாத நீங்கள் நேரடியாகவே சொன்னீர்கள். எனது இலட்சியங்களுக்கு எதிராக நமது சகோதரனே இருக்கும்போது நான் எப்படி அந்த வீட்டுக்கு வர

''ஒரு நாயகன் மரணமடைந்தால் அந்த இடைவெளியை நிரப்புவதற்கு ஆயிரக்கணக்கானோர் பிறப்பார்கள் என்பதுதான் இதன் பொருள். நீங்கள் அரியவர் என்று உங்கள் இறுதிப் பயணம் நிரூபித்து விட்டது. உயிரோடு இருந்த போது மட்டுமல்ல தியாகியான பின்னும் ஆளும் வர்க்கங்களின் நெஞ்சில் பயபீதியை உருவாக்கி விட்டீர்கள்.

முடியும். நீங்கள் போகவுமில்லை. உறுதியான ஈடுபாடு இல்லாமல் இது சாத்தியமில்லை.

''எந்தக் கூட்டமானாலும் பலியாகிப் போனவர்களின் உறவினர்களையும் பேச வைப்பதற்கு முயலுவீர்கள். அவர்கள் இரண்டு மூன்று வாக்கியங்கள் பேசினால் கூடப் போதும் என்பதே உங்கள் கருத்து. போலீசுடன் மோதல் என்ற மோசடி நாடகமாடி ஏழு இளம் பெண்கள் கொல்லப்பட்ட போது நீங்கள் அடைந்த வேதனைக்கு எல்லையே கிடையாது. இம்மாதிரி சிறு வயது, இளம்பெண்கள் கொடூரமான முறையில் கொல்லப்படுவதற்கு எதிராக நாம் எதுவும் செய்ய முடியவில்லையே என்று வருந்தினீர்கள். உங்கள் வார்த்தைகளை எப்போதும் நான் நினைவில் வைத்திருப்பேன். நாம் மேலும் பொறுப்போடு பணியாற்ற வேண்டும் என்ற வேதனையும் துயரமும் தோய்ந்த உங்கள் வார்த்தைகளை நான் மறக்கமாட்டேன்.

''நாரா பிரபாகர் ரெட்டியை மிகவும் நேசித்தீர்கள். அவர் கொல்லப்பட்ட செய்தி கேட்டதும், பிற நண்பர்களுக்குத் தெரிவித்து விட்டு, செயற்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளாமலேயே வாராங்கல் ஓடினீர்கள். அவருக்கு சட்ட அரங்கில் ஒரு நினைவகம் கட்டியதோடு சிவில் உரிமை மற்றும் வழக்கறிஞர் தொழிலில் அவரையே முன் மாதிரியாக ஏற்றீர்கள்.

''மனித உரிமையைத் துச்சமாக மதிக்கும் போலீசுக்காரன்கள் கொல்லப்பட்டவர் உடலைக் கூட உறவினர்களுக்குத் தர மறுத்து விடுவர். இறந்தவர் உடலை எரித்து, பிணத்தின் மீதுள்ள காய அடையாளங்களை அழித்து விட போலீசார் முயல்வர். உறவினர்களிடம் இறந்தவர் உடலை ஒப்படைக்க வேண்டும் என்று வழக்கு மன்றத்தில் ரிட் மனு போடுவீர்கள். நீங்கள் மக்கள் வழக்கறிஞர். சட்டத்தை அமலாக்கும்படி மக்கள் இயக்கங்கள், மக்கள் விருப்பப்படி நிறைவேற்றிய சட்டப்படி அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பீர்கள்.

''ஆண்கள் மட்டுமல்ல அவர்களின் துணைவியர்களும் அமைப்புகளிலும் இயக்கங்களிலும் பங்கேற்க வேண்டும் என்று நீங்கள் சொல்வது வழக்கம். இருவருக்குமிடையிலான உறவு தனிப்பட்டதல்ல. இயக்கத்தால் அது இணைக்கப்பட வேண்டும். இருவரின் வாழ்வும் இயக்கத்துடன் நீக்கமற அங்கமாகி விட வேண்டும் என்பீர்கள். இந்தப் பார்வையுடன் இயக்கத்தில் ஈடுபட எனக்கு நீங்கள் உதவினீர்கள். உங்களைக் கொன்ற அரசாங்கத்தை அந்த உணர்வோடு நான் அம்பலப்படுத்த முயலுவேன். உங்கள் இறுதிப் பயணத்தில் பங்கேற்று உங்கள் இலட்சியங்களைத் தொடர்வதாக சபதமேற்கிறேன். ஒரு புதிய உலகுக்கான உங்கள் கனவை நிறைவேற்றுவேன்.

''தனது கொலைகார அரசியலால் மக்களையும் அணிகளையும் பயபீதியில் தள்ள முடியும் என்று சந்திரபாபு நாயுடு கருதினார். எங்கள் எட்டு வயது குழந்தை கூட அதற்கு அஞ்சவில்லை. புருசோத்தமனின் கொலை சந்திரபாபுவின் சதிதான் என்று அவள் முழங்கினாள். கொலைகளால் இயக்கத்தை முடக்கிவிட முடியாது. சந்திரபாபுவின் பிரமைகளைத் தகர்ப்போம்.

''ஒரு நாயகன் மரணமடைந்தால் அந்த இடைவெளியை நிரப்புவதற்கு ஆயிரக்கணக்கானோர் பிறப்பார்கள் என்பதுதான் இதன் பொருள். நீங்கள் அரியவர் என்று உங்கள் இறுதிப் பயணம் நிரூபித்து விட்டது. உயிரோடு இருந்தபோது மட்டுமல்ல தியாகியான பின்னும் ஆளும் வர்க்கங்களின் நெஞ்சில் பயபீதியை உருவாக்கி விட்டீர்கள்.

● ஜோதி


படிப்பகம்

www.padippakam.com

# பின்னால் ஒரு குரல்

— சிவசுப்ரமணிய ஜெயசேகர்

அலாரம் இல்லாமலேயே அந்த அதி காலை வேளை அரக்கப் பரக்க எழுந்தாள் ராபியத் பீவி. இட்டிலி வியாபாரத்திற்கான இன்றைய வேலைகளை எல்லாம் சீக்கிரம் முடித்துவிட வேண்டும். ஜமாத்துல இருந்து இன்னிக்கு அவள் மகள் பஜ்ஜிரி யாவை காரைக்கால் டாக்டரிடம் அழைத்துப் போக ஒன்பது மணிக் கெல்லாம் தயாராக வேண்டும். அதற்குள் வியாபாரத்தையும் முடித்துவிட வேண்டும். பள்ளி வாசலிலிருந்து இன்னமும் பாங்கோசை எழாதது அவ ளுக்கு நிம்மதியளித்தது.

''இந்த மூணு மூதேவிகளும் அம்மா காரி கஷ்டப்படுறாளேன்னு கொஞ்சமா வது நெனைச்சுப் பாக்குதுங்களா, ஒருத்தி யாவது எழுந்திரிச்சு, உதவிக்கு வர்றாளா பாரு'' எரிச்சலுடன் முணுமுணுத்தவாறு தனது மூன்று மகள்களையும் எரிச்சலுடன் நோக்கினாள் ராபியத்.

நடுமகள் ஜீனத்துல் பஜ்ஜிரியா தனது பாவாடை விலகியது கூடத் தெரியாமல் தூங்கிக் கொண்டிருந்தது. ''ஏ புள்ள! இந்தா முண்ட! இப்டி பாவாட வெலகி தொடை தெரியுமாரியா தூங்குவ'' குனிந்து அவளை உலுப்பினாள். அவள் புரியாது புரண்டு படுத்தாள். தனது தலையில் அடித்துக் கொண்டவாறு அவளது உடை யினைச் சரி செய்துவிட்டு நிமிர்ந்தாள்.

அடுப்பைப் பற்றவைக்க விறகு தேடிய போது வீட்டிற்குள் ஒரு சுள்ளி கூட இல்லை. தனக்குத்தான் பார்வைக் குறைவோ என சந்தேகப்பட்டு மண்ணெண்ணெய் விளக்கை ஏற்றினாள். ஹூம், மருந்திற்குக் கூட ஒரு விறகும் இல்லை. ''இவள்வட்ட எத்தன தாட்டி சொன்னாலும் விளங்கமாட்டேங்குது?'' என்று முணுமுணுத்தவாறு குடிசையின் கத வினைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள் ராபியத்.

தோட்டம் முழுவதையும் வெண்பனி மூடியிருந்தது. தெரு விளக்கு கூட நட்சத் திர ஒளி போல மங்கலாகத் தெரிந்தது. சட்டென்று அந்தப் பனிக் காற்றைக் கிழித்துக் கொண்டு ''அல்லாஹ் அக்பர் அல்லா'' பாங்கோசை பள்ளி வாசல் ஒலி பெருக்கியிலிருந்து கிளம்பி வந்தது.

ராபியத் பரபரப்படைந்தாள். தோட்டத்தின் மூலையில் கிடந்த விறகு களைப் பார்த்ததும் அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. விறகுகள் அனைத்தும் இரவு முழுவதும் பனியில் ஊறிக் கிடந்தன.

''பாவி மவளுவ ராத்திரியே எடுத்து ரெண்டு கட்டைய உள்ள போட்டு வைக்கா மல் என் மானத்த வாங்கறதோட என் உசுர யுமில்ல வாங்குறாளுவ.'' ''யா அல்லா எனக்கு பொழுது நல்லா விடிய உங்கிட்ட துவா செய்ய யாருமே இல்லையா?''

குனிந்து சுள்ளிகளைப் பொறுக்கி நிமிர்ந்தாள். தெருவில் அல்வா ஜலால் மிகவும் சுத்தமாகக் குளித்து முழுகி வெள்ளை வேட்டி, ஜிப்பா தொப்பியுடன் பள்ளி வாசலை நோக்கி நடப்பது தெரிந் தது. அவரைக் கண்டதும் தோளில் கிடந்த முந்தானையை எடுத்து முக்காடிட்டுக் கொண்டாள் ராபியத். ஜலாலும் அவளைப் பார்க்க விரும்பாதவர் போல பட்டுச் சால்வையால் முகத்தைத் துடைத்தவாறு வேறு பக்கம் திருப்பிக் கொண்டார்.

பனியில் நனைந்த விறகுகளுடன் உள்ளே நுழைந்தாள் ராபியத். பழைய துணியில் கொஞ்சம் கிழித்து மண்ணெண் ணெயில் நனைத்து அடுப்பைப் பற்ற வைத்தாள். அவளுடைய மனதைப் போல ஈர விறகும் புகைந்து கொண்டு எரிய ஆரம் பித்தது.

ஒரு வாரத்திற்கு முன்பு வரை வெறும் இட்லிக்கடை ராபியத் பீவியாகத்தான் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தாள். அவளின் வயதுக்கு வந்த மூன்று பெண் பிள்ளைகளையும் எப்படிக் கரையேற்றப் போகிறோம் என்ற கவலை கூட அவ ளுக்கு அதிகம் எழுந்ததில்லை. அன்றாடங் காய்ச்சியான அவளுக்கு அன்றாடக் கவலைகளே பெரிதாக இருக் கும்போது பவுனு, சீர், செனத்தி என்றெல்லாம் கனவு காண முடியுமா என்ன? ராபியத்தின் உறவுக்காரர்கள் பலர் இதே ஊரில் பெரிய பெரிய பணக்காரர்க ளாகத்தான் வாழ்ந்து வருகிறார்கள்.

ராபியத் கல்யாணம் செய்து கொண்ட ஜமால் ஒன்றும் ஓட்டாண்டி இல்லை. கல்யாணத்தின் போது இதே ஊரில் சுமா ரான வாழ்க்கையைத்தான் கவலையின்றி துவக்கினாள் அவள். மூன்று பெண்களைப் பெற்று முடிக்கு முன்னர் புருசன்காரனின் கூடா நட்பு காரணமாக வீட்டில் உள்ள பாத்திரம், பண்டம் உட்பட எல்லா சொத்துக்களையும் இழந்து நின்றாள்.

பெருங்கடனுக்கு பலரிடம் கையேந்தி அவனை வெளிநாட்டுக்குக் கப்பலேற் றினாள். போனவன் போனவன்தான் ஆறு மாதத்திற்குள்ளாக அங்கே ஏதோ தகராறில் கத்தியால் குத்தப்பட்டு அவன் இறந்து விட்டான் என்ற செய்திதான் திரும்பி



வந்தது.

கடனையும் பிள்ளைகளையும் சுமக்க இயலாமல் தடுமாறினாள். துணிந்து இட்லிக் கடை ஆரம்பித்த போது அவள் உறவுகள் விலகி நின்றனர். தூற்றினர். ''நம்ப பொம்பள செய்யற வேலையா இது'' என்று முதுகிற்குப் பின்னே பேசி முகத்தாட்சணியத்திற்காகக் கூட எதிரே உத வாத உறவுகளைப் பின்தள்ளி வாழ்க்கைப் படகை ஓட்டினாள் ராபியத். எப்படியோ கஷ்டப்பட்டு மூன்று பெண் குழந்தைக ளையும் ஆளாக்கி விட்டாள். ஆனால் இன்று இப்படி ஒரு நிலை அவளுக்கு வர அசன் முகமது மச்சான்தான் காரணம்.

● ●

கடையில் வேலையாய் இருந்தவளை முதலில் அழைத்தது அசன் முகமது மச்சான்தான். ''இந்தா ராபியத்து என்னைய லுக்கும் கூத்தாநல்லூர் பொண்ணுக்கும் அடுத்த மாதம் நிக்கா பேசி முடிவாயி ருக்கு; நாளைக்கு பொண்ணு வீட்டுக்கா ரங்க மாப்பிள்ளைக்கு ஜீனி போட வராங்க நாமளும் நல்லவிதமா செய்யணுமில்ல

www.padippakam.com

வீட்ல பொண்டுவ சிரமப்படும். நீ வந்து கூடமாட ஒத்தாசையா இரு.''

''என்னபுள்ள நா பேசுறேன், நீ பேசாம நிக்கற?''

''சரி மச்சான் உங்க பேச்ச தட்ட முடியுமா''

நடுப்பெண் ஜன்னத்துல் பஜ்ஜிரியாவை துணைக்கு அழைத்துக் கொண்டு உதவப் போனாள் ராபியத். தோட்டத்தில் உள்ள கீற்றுக் கொட்டகையில் இரவு முழுவதும் அடுப்புத் தணலின் தகிப்பிலேயே நின்றாள் அவள். இரவு சுமார் பத்து, பதினோறு மணி சுமாருக்கு தோட்டத்தின் மூலையில் இருந்த வைக்கோல் போருக்கு பின்னாலிருந்து ''ஐயோ''! ''அம்மா'' என்ற அழுகுரல் கேட்டுத் திடுக்கிட்டாள். அது பஜ்ஜிரியாவின் குரல். பதைத்துப் போனாள். ஏதாவது பாம்பு கீம்பு தீண்டியிருக்குமோ? ராபியத்தின் கூக்குரல் கேட்டு மேலும் உதவிக்கு வந்தவர்களும் வைக்கோல் போரை நோக்கி ஓடினர். அங்கே ஆட்கள் ஓடிவரும் சத்தம் கேட்டு யாரோ சுற்றுச் சுவர் மீது ஏறிக் குதித்து தப்பியோட முயன்று கீழே விழுந்தது கண்டனர். ஓடிப் போய்ப் பிடித்தால் அது அசன் முகமதுவின் தம்பிஅல்வா ஜலாலின் மகன், பெரியவன் அப்துல்லா.

அவர்களின் பிடியிலிருந்து நழுவ முயன்றான் அவன். அருகிலேயே அரை குறை ஆடைகளுடன் பஜ்ஜிரியா தேம்பியவாறு நின்று கொண்டிருந்தாள். ''அடி பாவி மவளே என்னடி ஆச்சு'' என்று அவளைக் கட்டிக் கொண்டு அழுதாள் ராபியத். விவரம் அறிந்த கல்யாண வீடே அல்லோல கல்லோலப்பட்டது.

அல்வா ஜலால் மகனை பலர் பாதுகாப்பாக அவனது வீட்டுக்கு அழைத்து சென்றனர். ஜலாலும் நிலைமையைத் தனக்கு சாதகமாக்க காச்மூச் என்று கத்தியவாறு இருந்தார். பலரும் அவர் குரலுக்கு எதிர்க்குரல் எழுப்பாமல் அமைதியாகவே இருந்தனர்.

ஜலால் இதே ஊரில் அல்வா கடை நடத்தி பிரபலமானவர். விருந்துகளுக்கும், வெளிநாடுகளுக்கும் பலகாரங்கள் செய்து அனுப்பியே லட்சாதிபதி ஆனவர். எனவே ஊரே அவரை 'அல்வா ஜலால்' எனத்தான் அறியும். அவருடைய செல்வாக்கே அங்கு சொல்வாக்காக இருந்தது.

நிலைமையைச் சீர் செய்ய முன் வந்த இப்ராஹிம் ராவுத்தர் ''நீ அவள இப்ப வீட்டுக்கு அழைச்சிட்டு போம்மா. பொறவு பேசிக்கலாம் எல்லாத்தையும்'' என்றார். ஜமாத்தில் மூத்தவர் அவர். ராபியத் அவரது கட்டளைப்படி அழுத கண்களுடன் அங்கிருந்து வெளியேறினாள். அது முதல் பிரமை பிடித்தவள் போல் நடந்து கொண்டாள் பஜ்ஜிரியா, எது கேட்டாலும் மலங்க மலங்க விழித்தாள். பேசா மடந்தை போல் முடங்கி முடங்கிப் படுத்துக் கொண்டாள்.

இரண்டு நாட்கள் கழித்துத்தான் அவளுக்கு வரச் சொல்லி ஆளனுப்பினார் இப்ராஹிம் ராவுத்தர். அவருடன் அசன் முகமது, ஜலால் மற்றும் சில 'பெரியவர்கள்' இருந்தனர். ராபியத் ஏதும் பேசாமல் நின்றாள்.

''இதப்பாரு ராபியத், சின்னப் பையன் ஏதோ தெரியாத்தனமா தப்பிதமாக நடக்க முயற்சி பண்ணியிருக்கான்; இத இத்தோட விட்டுரு. அவளுக்கு கல்யாணம் காட்சின்னா ஏதாவது நெறய செய்யணுங்கிறார். நீ என்ன சொல்ற?''

ராபியத்திற்கு நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. தசைகள் துடித்தது. பேச நா எழவில்லை. ஒரு வழியாக எச்சிலைக் கூட்டி முழுங்கி, ''இது என்னையா நீதி? எம்மவ ஏதும் அறியா தவ. அவளக் கெடுக்கப் பாத்திருக்கான். இது ஊருக்கே தெரிஞ்சு போச்சு. நான் ஏதும் இல்லாத மூதேவி முண்டனுதான அவன் முயற்சிதான் பண்ணுனான்னு சொல்றீங்க.''

ராபியத்தின் பேச்சு அவர்களுக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருக்க வேண்டும், மற்றவர்கள் பேசாதிருக்க அல்வா ஜலால் குரலை உயர்த்தினார்.

''ஏம்மா என் பையன் உம் பொண்ண மானபங்கப் படுத்திட்டான்னு உன்னால நிரூபிக்க முடியுமா?''



படிப்பகம்

www.padippakam.com

"இது என்னங்க அநியாயம்?" என்றவாறு பெருங்குரல் எடுத்து அழத் தொடங்கினாள் ராபியத்.

"இந்தாம்மா இதபாரு. அழாத. அந்த பையங்கிட்ட நாங்க நல்லா விசாரிச்சுட்டோம்; அங்க ஒண்ணும் நடக்கலியாம். ஏதோ ஆசையில தப்பா நடக்க முயற்சி செஞ்சிருக்கான்; நீயும் ஒம் பெண்ணுகிட்ட நல்லா விசாரிச்சுப் பாரு. அப்புறமா ஒரு முடிவுக்கு வா."

ராபியத்தின் குரலுக்கு அங்கு மதிப்பில்லை. அவள் எதிர்ப்பை மீறி ஜமாத்தின் தலைவர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர்.

"இத பாரும்மா பையன நல்லா விசாரிச்சுட்டோம். ஏதோ ஆசையில அந்த பொண்ணக் கூட்டிக்கிட்டு போயி மார்ல கைய வைச்சிருக்கான், அவ்ளதான். வேற ஒண்ணும் அங்க நடக்கலங்கிறான். அதனால நீ ஒம் பொண்ண அழைச்சிகிட்டு நாளைக்கு காரைக்கால் சுந்தரி டாக்டரம்மா கிட்ட போய் டெஸ்ட் பண்ணிகிட்டு சர்டிபிகேட் வாங்கிட்டு வா பொறவு பேசலாம் போ!"

"செலவெல்லாம் ஜமாத் ஏத்துக்கும் நீ போய் நாளை காலைல தயாராக இரு"

●●

அடுப்பில் தீ அணைந்து போனது கூட தெரியாமல் நடந்தவைகளை அசை போட்டபடி கல்லாக அமர்ந்திருந்தாள் ராபியத். "மாரத்தான் தொட்டுருக்கான் வேணா போய் டாக்டர்கிட்ட சர்டிபிகேட் வாங்கிட்டு வா"

இந்த வார்த்தைகள் தான் அவளைத் தீயாகச் சுட்டது. பொழுது தெளிவாகி விடுவதற்குள் இரண்டு மூன்று முறை இட்லி வேகவைத்து இறக்கினாள் அவள். சட்டினிக்கு தேங்காய எடுத்து கல்லை நெருங்கவும் மூத்தவள் எழுந்து அவளுக்கு ஒத்தாசையாக வந்தாள். ஒன்பது மணிக்குள் அரக்கப் பரக்க வேலைகளை முடித்தாள்.

ஒன்பது மணி சி.ஆர்.சி. ரோட்டைக் கடப்பதற்கும் தெற்கு தெரு கதீஜா பீவி வந்து அவளை அழைப்பதற்கும் சரியாக இருந்தது. ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டிருந்த மகளை துப்பட்டி சுற்றி இழுத்துக் கொண்டு வெளியேறினாள், ராபியத்.

பஜ்ஜிரியாவிற்கு பரிசோதனைகளை முடித்து விட்டு கையுறைகளைக் கழட்டி கழுவிக் கொண்டு இவர்களை வியப்பாக பார்த்துக் கொண்டே பேச ஆரம்பித்தாள் டாக்டர் சுந்தரி.

"இந்தப் பொண்ணுக்கு கன்னித் திரை இன்னும் கிழியல. அதனால் உடலுறவு ஏதும் நடந்திருக்க வாய்ப்பில்ல" ஆனா, எனக்கு என்ன ரொம்ப அதிசயமாக இருக்குன்னா உங்க மதத்தில பொண்ணோட முகம் கூட தெரியக் கூடாதுன்னு கண்ணு மட்டும் தெரியுற மாதிரி மூடிகிட்டு வெளியில போகச் சொல்றாங்க. கால் தெரிஞ்சா கூட கால்ல சுடுவோங்கிறாங்க சில பேரு.

அடுத்த ஆம்பளைக உங்க அழகப் பாக்கக் கூடாதுன்னு சட்டம் போட்டு வச்சிக்கிட்டு இது மார மட்டும் தான் அந்தப் பய தொட்டான்னு பேசுறது என்ன நியாயம்னு எனக்குத் தெரியல. இதுவோ ஒண்ணுந் தெரியாத மண்ணாந்தையா இருந்துருக்கு. என்ன நடந்ததுன்னே தெரியாம மனநிலை வேற பாதிக்கப்பட்டிருக்கு. அதனால இப்ப இவள மன நோய் டாக்டர்கிட்ட வேறு காட்டியாகணும். ஏழ பாழைங்கன்னா எல்லா இடத்திலயும் இதான் கதி போல" என்றவாறு சீட்டில் எழுத ஆரம்பித்தாள்.

**எச்சிலைக் கூட்டி முழுங்கி, "இது என்னையா நீதி? எம்மவ ஏதும் அறியர்தவ. அவளக் கெடுக்கப் பாத்திருக்கான். இது ஊருக்கே தெரிஞ்சுபோச்சு. நான் ஏதும் இல்லாத மூதேவி முண்டனு்தான அவன் முயற்சிதான் பண்ணுனான்னு சொல்றீங்க."**

மாலை ஜமாத் முன்னர் நின்றபோது அல்வா ஜலால் ஆட்கள் குரல் உயர்த்திப் பேச ஆரம்பித்தனர். "பார்த்தீங்களா நாங்க அப்பவே சொன்னோம், ஏதும் தப்பா நடக்கலைன்னு. டாக்டர் அம்மாவே சர்டிபிகேட் கொடுத்திட்டாங்க இப்ப என்ன சொல்றீங்க?" நியாயத்தைப் பேச வேண்டியவர்களும் மௌனம் சாதித்தனர்.

"ஏதோ எங்க பையன் கொஞ்சம் தப்பா நடந்துகிட்டான் ஒத்துக்கிறோம். அதுக்காக பத்தாயிரம் பணம் கொடுத்துடுறோம், வேற என்ன செய்யச் சொல்றீங்க"

இறுதியில் ஜமாத் தலைவர் இப்ராஹிம் ராவுத்தர், "இந்தா ராபியத், இதுல இதுக்கு மேல ஏதும் செய்ய முடியாது. அந்தப் பையன் செஞ்சத நாங்க சரின்னு சொல்லல ஆனா..."

ராபியத் இடிந்து போனாள். அவளால் அதற்குமேல் அங்கு நிற்க இயலவில்லை. மறுநாள் தெற்குத் தெரு கதீஜா பீவி வந்து வற்புறுத்தி அவளிடம் பத்தாயிரம் பணம் கொடுத்து விட்டுப் போனாள். பஜ்ஜிரியாவின் மனநல மருத்துவத்திற்கு அந்த பத்தாயிரம் செலவாகிப் போனது.

இத்தனை நாட்களுக்குப் பின்னர் இப்போதுதான் அவள் நிமிர்ந்து பார்த்து பேசத் துவங்கியுள்ளாள். வாசலில் தனது மக்களுடன் உட்கார்ந்து எதிர்காலத்தைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தாள். அப்போது சாலையில் பெருத்த தாள ஓசைகளுடன் ஊர்வலம் வருவது தெரிந்தது. அசன் முகமதுவின் மகன் மல்லிகைச் சரம் முகம் மறைக்க கோட்டும் சூட்டுமாக ஊர்வலத்தில் வந்து கொண்டிருந்தான். சினிமாப் பாட்டு மெட்டுகளில் மதப் பாடல்களை இசைத்துக் கொண்டு வந்தனர் ஊர்வலத்தினர். ராபியத் ஊர்வலம் நெருங்கியதும் எழுந்து உள்ளே சென்றாள். அசன் முகமது ஊர்வலத்தைத் தாண்டி வேகமாக முன்னே செல்வது தென்பட்டது. நேற்றிரவு அசன் முகமது அவளிடம் வந்து "ராபியத் நீ ஏதும் மனசுல வைச்சுக்கப்படாது. நாள நிக்காவுக்கு நீயும் வந்துரு" என்றார்.

அசன்முகமது பேரில் அவளுக்கு ஒன்றும் வருத்தம் இல்லை. ஊரே அல்வா ஜலால் பின்னே நிற்கும் போது அவர் மட்டும் என்ன செய்வார்? ஊர்வலம் கடந்ததும் துப்பட்டியை எடுத்துப் போர்த்திக் கொண்டு நிக்கா வீட்டிற்கு ஒரு நடை போய் விட்டு வர தீர்மானித்தாள்.

பின்கட்டு வழியாகத் திருமண வீட்டிற்குள் நுழைந்தபோது விருந்து உபசாரம் ஆரம்பமாகியிருந்தது. அலங்கரிக்கப்பட்ட பெரிய ஹாலின் நடுவில் நடுநாயகமாக அல்வா ஜலால் அமர்ந்திருந்தார். அவரருகில் இருந்த ஜவுளிக்கடை வாஹிது, நகைக்கடை ஜின்னா, ஆகியோரையும் பெரிய தட்டிற்கு அருகில் அமர வழி செய்தார்.

வேற்று மதத்தைச் சேர்ந்த அந்த ஊர் டாக்டர் அவர்கள் அருகில் யோசனையுடன் நின்று கொண்டிருந்தார். "என்ன டாக்டர் பாக்குறீங்க, ஒரே தட்டுல எப்படி எல்லாரோட சாப்புடறதுன்னா? இதான் இஸ்லாத்துல, எல்லாம் ஒண்ணு, சமம், சகோதரங்கிறதக் காட்றதுக்குத்தான் இப்படி ஒரே தட்டுல சாப்பாடு, சும்மா யோசிக்காதீங்க வந்து உக்காருங்க" அல்வா ஜலால் குரலை அனைவரும் ஆமோதித்தனர். நகைக் கடை ஜின்னா, டாக்டரின் கைகளைப் பிடித்து இழுத்து அமரச் செய்தார்.

விருந்து கோலாகலமாக ஆரம்பித்தது. காலையிலிருந்து ஏதும் சாப்பிடாத ராபியத்திற்கு அந்த பிரியாணி வாசனையும் பரபரப்பும் ஏதோ செய்தது. வயிற்றைப் புரட்டிக் கொண்டு வந்தது. ராபியத் விடு விடுவென்று பின்கட்டைத் தாண்டி தோட்டத்தை அடைந்தாள். 'ஒவ்'வென்று குமட்டிக் கொண்டு வாந்தியெடுத்தாள்.

●

www.padippakam.com

# பிள்ளை வளர்ப்பு: ஒரு குடும்ப வன்முறை



"பனிரெண்டு வயது சிறுவன் அப்பாவைக் கன்னத்தில் அறைந்து காயம்" என்ற செய்தியை உங்களால் விளையாட்டாக எடுத்துக் கொள்ள முடியுமா? அதிர்ச்சியில் உறைந்து போயிருக்கிறார் எங்கள் பகுதியிருக்கும் அந்த அப்பா. அவர் மாதம் 10,000 ரூபாய் சம்பளம் வாங்கும் ஒரு அரசு ஊழியர். அவரது மனைவியும் ஒரு அரசு ஊழியர்.

இப்படிப்பட்ட பின்னணியில் இருப்பவர்கள் தமது ஒரே செல்ல மகனை சாதாரண லெவலுக்கு வளர்க்க விரும்புவார்களா? பையனுக்கு காலையில் கராத்தே வகுப்பு, பிறகு கான்வெண்ட் பள்ளிக்கூடம், மாலை ஸ்பெசல் டியூசன், பிறகு கம்ப்யூட்டர் வகுப்பு, அதன்பிறகு பாட்டு கிளாஸ் இப்படி 24 மணிநேரமும் பையனை கடிகார முள்ளாய் நகர்த்திக் கொண்டிருப்பவர் அந்த அரசு ஊழியர். ஒரு நாள் மாலை நேரம் பையன் தெருவில் இறங்கி விளையாடப் போய்விட்டான்.

பையனைத் தேடிப்பார்த்த தந்தைக்கு தலைக்கேறியது கோபம். "வீட்லதான் விளையாட கம்பூட்டர் கேம்ஸ் வாங்கித் தந்துருக்கேன்ல, டியூசன் போய்ட்டு வந்து அதுல விளையாடறது, காச கொட்டி சேர்த்துவிட்டா கம்ப்யூட்டர் கிளாஸ் போகாம, கண்ட கண்ட பசங்களோட சேர்ந்துகிட்டு தட்டான் புடிக்கவா போற? போடா கிளாசுக்கு" என்று அவர் கையை ஓங்கி அதட்டியதுதான் தாமதம் இறுகிய முகத்துடன் வீடு திரும்பிய பையன் ஓங்கி ஒரு அறைவிட்டான் அப்பாவை, அதுவும் வாசல்படியிலேயே. பதிலுக்கு விளாசித் தள்ளிவிட்டாலும் அந்த அதிர்ச்சியிலிருந்து அவரால் இன்னும் மீள முடியவில்லை. இது சேருவார் தோஷமா இல்லை செய்வினையா என்று குழம்பித் தவிக்கிறார்.

ஆம்! உண்மையில் இது செய்வினைதான். அதாவது "உன்னைப்பார் உலகத்தைப் பார்க்காதே. போட்டி போட்டு முன்னேறு" என்று முதலாளித்துவ வாழ்க்கை முறையின் ஒருவித செய்வினைதான் என்பதை கொஞ்சம் குழந்தைகள் வளர்ப்பு சமாச்சாரத்தின் உள்ளேபோய்ப் பார்த்தால் ஒத்துக் கொள்ளத் தோன்றும்.

உலகத்தை நெருங்கி, நெருங்கி - அது என்ன? இது என்ன? ஏன் ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு மாதிரி இருக்கின்றன, இயங்குகின்றன என்று - அறியத் துடிக்கும் ஆர்வம் ததும்பும் பிள்ளைப் பருவத்திற்கும், ஒண்ணாந் தேதி சம்பளத்தையும், ஒவ்வொரு நுகர்பொருளும் வாங்குவதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதையும் மட்டும் மனதில் வைத்துக் கொண்டு "அந்த உலகத்தை அறியத் துடிக்கும்" அரசு ஊழியருக்கும் உள்ள இயல்பான முரண்பாட்டின் விளைவே மேற்சொன்ன சம்பவம்.

கொம்பு சீவுவனையே குத்திப்பதம் பார்த்துவிடும் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுக் காளையைப்போல போட்டி உலகின் அவஸ்தை தாங்காமல் குழந்தை வடிவத்தில் இருக்கும் மனிதன், முதலாளிய வாழ்க்கை முறையின் செய்வினைக்குப் பதிலை அப்பாவின் முகத்தில் திருப்பித்தரும் அதிசயமும் சில நேரங்களில் நடக்கத்தான் செய்யும்.

ஒரு ஈடுக்கு எத்தனைக் குஞ்சு பொறிக்கும், அதற்கு என்ன தீவனத்தை போடலாம் என்ற முதலாளியின் கணக்கைப்போல போட்டி மயமான இந்த உலகில் தமது பிள்ளைகள் போணியாக வேண்டுமென்றால் கம்யூட்டர், கேம்ஸ், கராத்தே, வாய்ப்பாட்டு, கருவி இசை என்று எல்லாத் துறைகளிலும் ஒண்ணாம் நம்பரா இருந்தால்தான் ஒரு வசதியான வாழ்க்கையை வாழ முடியும் என்பது உயர் நடுத்தர வர்க்கத்தின் கருத்து.

இப்படி குழந்தைகளுக்கு வகை வகையான தீவனம் போட வசதி இல்லாவிட்டாலும் அவரவர் நிலைமைக்கு ஏற்றவாறு பிள்ளைகளை அடைகாக்க முயற்சிக்கும் பண்பாடு கோழி செல்லைப் போல பெற்றோர்களின் மனதில் அரித்துக் கொண்டிருக்கிறது.

கோழி வியாபாரிக்காவது ஒரு ஈடு பொய்த்து விட்டாலும் அடுத்த ஈடுவரைக்கும் காத்திருக்கும் பொறுமையும், நிதானமும் இருக்கிறது. இப்படிக் குறி வைத்து வளர்க்கும் பெற்றோர்களுக்கோ தன்னுடைய குஞ்சுகள் ஒரே ஈடில் கோழிகளாக சிறகடிக்க வேண்டும் என்ற அவசரமும் அதற்கு ஈடுகொடுக்க முடியவில்லை என்றால் பிள்ளைகள் மேல் ஆத்திரமும் வருகிறது.

ஆனால் குழந்தைகள் உலகமோ இதற்கு நேர்மாறானது. இந்த உலகத்தை உற்றுப் பார்த்தால் - நமக்கு என்ன கிடைக்கும் என்ற தேவையிலிருந்து அவர்கள் பார்வை தொடங்கவில்லை; இந்த உலகில் என்ன இருக்கிறது என்ற தேடலிலிருந்து அவர்கள் பார்க்கத் தொடங்குகிறார்கள்.

முடிவில்லாத மலைத் தொடர்கள், ஓய்வில்லாத அலைகளின் ஓட்டம், இவைகளின் பின்னணியை ஆராயத் தொடங்குகிறது அவர்கள் மனம், மேகத்திற்குள் மறைந்த நிலவு வெளிவரும் வரை தாய் உண்ணக் கொடுக்கும் சோற்றையும் தட்டிவிட்டுவிட்டு நிலவை ஆராய்கிறது பிள்ளை மனம், இப்படி இயற்கையை மட்டுமல்ல மனிதர்களால் தயாரிக்கப்பட்ட பொருள்கள், அவற்றின் இயக்கம், சிலர் கையில் அவைகள் இருப்பதும், பலரிடம் இல்லாததும், கட்டிடங்கள் பக்கத்திலேயே குடிசைகள் இருப்பதும் ஏன், ஏன் என்ற கேள்விகள் பிள்ளைப் பருவத்தின் ஆர்வத்தை அள்ளி வருகின்றன.

தனித்தனியாக காணக் கிடக்கும் இந்த காட்சிகள் குறித்த புரிதலை ஒருங்கிணைந்த முறையில் பெறுவதுதான் குழந்தைகளின் முதல் தேவை. ஆனால் அனைத்தையும் அழித்து தான்மட்டும் வாழத்துடிக்கும் முத லாளித்துவமோ பல சிறுதொழில்களை அழித்தால்தான் பெரிய பன்னாட்டுக் கம் பெனி வாழ முடியும் என்ற தனது பொருளா தாரக் கொள்கையையே, குடும்பத்தின் இலக்கணமாகக் கொண்டுவந்து "உன்னைப் பார், உலகைப் பார்க்காதே," "போட்டி போட்டு முன்னேறு! சகமனிதர்கள் மீதான போட்டியில் வெற்றி பெறு. அதுவே உனது வாழ்க்கை லட்சியம், கனவு" என குட்டி இள வரசர்களுக்கு முடிசூட்டி விடுகிறது.

உயிர்களின் தோற்றத்தையும், பரிணா மத்தையும் இடையறாது ஆராய்ந்து உழைப் பைச் செலுத்திய டார்வினின் பரிணாமக் கொள்கை, தனிமனித முன்னேற்றத்திற்கான ஆராய்ச்சி அல்ல.

ஆனால் (முதலாளித்துவ) சுயநலமனப் கொண்ட குடும்பங்களோ குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்று கண்டுபிடித்து விட டால் குடும்பம் நடத்த முடியுமா? எங்

படிப்பகம்

www.padippakam.com

ளுக்கு டார்வினைப் போல ஆராய்ச்சி மனம் படைத்த ஒரு மனிதன் தேவை யில்லை. கோடீஸ்வரன் முத்திரையைச் சரி யாகப் பயன்படுத்தி கட்டங்கட்டமாகத் தாவி வெற்றி பெறும் ஒரு குரங்கு போதும் என்கின்றனர். அதாவது சமுதாயத்தை ஒண் ணாம் நம்பராக்கும் அறிவு தேவையில்லை; இந்த சமுதாயத்தில் நான் ஒண்ணாம் நம்ப ராகும் வழியைச் சொல் என்கிறது நடுத்தர வர்க்கம்.

குழந்தைகளின் ஆர்வத்தைத் தட்டி எழுப்புவது, அவர்கள் மனம் விரும்பிய விளையாட்டை பழக அனுமதிப்பது, முக்கி யமாக சமுதாய உறுப்பினர்களான சக மனி தர்களுடன் கூடி இயங்க விடுவது என்ற கருத்தெல்லாம் இல்லாமல், 2500 மைல்க ளுக்கு அப்பால் குறி வைத்து ஏவக்கூடிய ஒரு ஏவுகணையைப் போல பெற்றோர்கள் அந்தஸ்தான வாழ்க்கைதரக் கூடிய ஒரு கனவுப் பிரதேசத்துக்கு பிள்ளைகளை ஏவிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் நடக்கிறது.

இதனால்தான் பிள்ளைகள் கல்வி, பொழுது போக்கு, விளையாட்டு ஆகிய வற்றை ஆதாயமல்லாத நோக்கில் பயன் படுத்தும்போது ''இது உருப்படறதுக்கு வழியா!'' என்று அலறித் துடிக்கிறார்கள். இது குழந்தைகளிடமிருந்து குழந்தைத் தனத்தைப் பறித்தெடுக்கும் பலாத்கார நடவ டிக்கையாக மேலோட்டமாகப் பார்த்தால் தெரியும். கொஞ்சம் உள்ளே நுழைந்து பார்த்தால் குழந்தைகளாய் இருக்கும் மனி தர்களிடம் முதலாளித்துவத்திற்குத் தேவை யான வளர்ப்பும், சுரண்டலும் ஆரம்பமாகி விட்டது என்ற அபாயம் புரியும்.

''சரக்கு உற்பத்தியின் போட்டா போட் டியில் கல்வி, பண்பாடு, மனிதர்களையும் கூட முதலாளித்துவம் ஒரு சரக்காக மாற்றி விடுகிறது'' என்று கார்ல் மார்க்ஸ் இந்த அபாயத்தைக் கோடிட்டுக் காண்பித்தார். இரண்டு வழிகளில் இந்த அபாயத்தை முத லாளித்துவம் அரங்கேற்றி வருகிறது. ஒன்று சாதாரண உழைக்கும் மக்களின் கைகளிலி ருந்து கைத்தொழில் சிறு தொழில்களைப் பிடுங்கி எறிந்துவிட்டு அவர்கள் வீட்டுப் பிள்ளைகளின் பிள்ளைப் பருவக் கனவு களை அழித்து அவர்களையும் தனது சுரண் டலுக்கு குழந்தைப் பணியாளர்களாய் மாற்றிவிடுகிறது.

ஒரு நாளைக்கு பதினான்கு மணி நேரம் உணவு விடுதிகளில் மேசை துடைக்கும் சிறு வனின் உள்ளத்திலிருந்து அவனுக்கு விருப் பமான படைப்புணர்ச்சியை பிள்ளைப் பரு வத்திலேயே துடைத்தெறிந்து விடுகிறது முதலாளித்துவச் சமுதாயம். இன்னொரு புறம் மேட்டுக்குடி, நடுத்தர வர்க்க குழந்தை களிடம் இந்தா பிடி சாப்ட்வேர். மேலபடி ஜாவா, ஈகாம் இப்பொழுதே, நல்ல எதிர் காலத்துக்கான திறமையை வளர்த்துக் கொள் என்று அவர்களுடைய பிள்ளைப் பருவத்தையும் தங்கள் சுரண்டலுக்கான அச் சாரமாக மாற்றிக் கொள்கிறது. இதை கோட் பாடாகக் கேட்பதற்கு மிகையாகத் தோன்ற லாம். குடும்பங்களின் நடைமுறையைக் கவ னித்தால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை ஒரு நல்ல 'பொசிசனுக்கு'க் கொண்டுவர அவர்களை வளரும் சரக்காக வளர்த்தெடுக் கும் முறைகளைக் கவனித்தால் இந்த உண்மை புரியும்.

பிள்ளைகளிடம் குழந்தைத்தனம் பறிக் கப்படுகிறது; கல்விச் சுமை ஏற்றப்படுகிறது, குழந்தை உழைப்பு தடுக்கப்பட வேண்டும் என்று கண்டிக்கும் அறிவாளிகள் கூட இவற் றுக்குக் காரணமான முதலாளித்துவச் சுரண் டல் சமூக அமைப்பைத் தூக்கியெறிந்தா லொழிய இந்தப் பிரச்சனையைத் தீர்க்க முடி யாது என்ற உண்மையை ஊருக்குச் சொல் வதில்லை. குழந்தைப் பருவத்தின் தேடல் களைத் தொலைத்துவிட்டு குழந்தையும் சேர்ந்து உழைத்தால்தான் குடும்பத்தில் சோறாக்க முடியும் என்ற சமூக நிலை மையைப் பாதுகாக்கும் அரசை எதிர்த்துப் போராடாமல் ஒருவேளைச் சோற்றுக்கு வயிற்றுப் பிள்ளையையும் தூக்கிக் கொண்டு தீக்குச்சி அடுக்கப் போகும் பெண் களிடம் போய் உங்கள் பிள்ளைகளை வேலைக்கு அனுப்பாதீர்கள குழநதைகளை குழந்தைகளாய் வாழ விடுங்கள் என்று அறி வொளி இயக்கம் நடத்துகிறார்கள் இந்த அறிவாளிகள்.

மாற்றாக மக்கள் சீனத்திலும் சோசலிச சோவியத் ரசியாவிலும் தனியுடைமைச் சுரண்டலை ஒழித்துக் கட்டியதன் மூலம் பிள் ளைகளுடைய கல்வி, வளர்ப்பு அனைத் தும் அரசின் கடமையென உறுதி செய்யப் பட்டதுடன் பிள்ளைகளின் தனிப்பட்ட திற மைகள் இந்தச் சமுதாயத்தையே முன் னேற்றிக் காட்டின. சக மனிதர்களைத் தோற் கடித்து அவனை அழித்தாவது தான் முன் னேற வேண்டும் என்ற முதலாளித்துவ வர்க்க வளர்ப்பு முறையினால் தனது இச் சைக்கு எதிராக இருக்கும் பெற்றோரைக் கூடத் தீர்த்துவிடும் குழந்தைகளை முதலா ளித்துவம் உருவாக்குகிறது.



ஆனால் நாட்டு மக்களின் நலனுக்காக இட்லரை எதிர்த்த போரில் ரசியச் சிறுவர் கள் தன்னிகரில்லாமல் உதவிய 'தஇவான்' நாவலில் பார்க்க முடிகிறது. இப்படி சமூக நோக்கில் குழந்தை வளர்க்கப்பட வேண் டும் என்று சொன்னால் ''எங்கள் பிள்ளை களை எங்கள் விருப்பப்படி வளர்க்கும் உரி மைகூட எங்களுக்குக் கிடையாதா?'' என்று அறிக்கைவிடும் பெற்றோர்களைப் பார்த்து கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை இப்படிப் பேசு கிறது.

''குழந்தைகள் அவர்களுடைய பெற் றோரால் சுரண்டப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்புகிறோம் என்றா எங்கள் மீது குற்றம் சாட்டுகிறீர்கள்? நாங்கள் இந்தக் குற் றத்தைப் புரிகிறவர்கள்தான், ஒப்புக் கொள் கிறோம்... உங்களுடைய கல்வி இருக்கி றதே, அதுமட்டும் என்னவாம்? அதுவும் சமூக முறையிலான கல்விதானே?... கல்வி யில் சமுதாயம் தலையிடுதல் என்பது கம்யூ னிஸ்டுகளுடைய கண்டுபிடிப்பு அல்ல; இந்தத் தலையீட்டின் இயல்பினை மாற்ற வும், ஆளும் வர்க்கத்தினுடைய செல்வாக் கிலிருந்து கல்வியை விடுவிக்கவுமே கம்யூ னிஸ்டுகள் முயலுகிறார்கள்...''

''குடும்பம், கல்வி என்றும், பெற்றோருக் கும் குழந்தைக்குமுள்ள புனித உறவு என் றும் பேசப்படும் முதலாளித்துவப் பகட்டுப் பேச்சுகள் மேலும் மேலும் அருவெறுக்கத் தக்கனவாகி வருகின்றன; ஏனெனில் நவீனத் தொழில் துறையின் செயலால் பாட் டாளிகளிடையே குடும்பப் பந்தங்கள் மேலும் மேலும் துண்டிக்கப்பட்டு, பாட்டா ளிகளது குழந்தைகள் சாதாரண வாணிபச் சரக்குகளாகவும் உழைப்புக் கருவிகளாக வும் மாற்றப்படுகிறார்கள்.''

இப்பொழுது இந்தக் கட்டுரையின் துவக்கத்தில் சொன்ன சம்பவத்தை நினை வுக்குக் கொண்டு வாருங்கள். தனது குழந் தைப் பருவத்தைச் சுரண்டுவதைச் சகித்துக் கொள்ள முடியாமல் ஆளாக்கிய அப்பா வின் கன்னத்திலேயே அறைந்து விட்டான் அந்தச் சிறுவன். சமுதாயத்தையே இந்தச் சுரண்டல் நிலைமைக்கு ஆளாக்கிய அப்ப னான முதலாளித்துவத்தின் கன்னத்தில் நீங் கள் அறையப் போவது எப்போது?

• **துரை. சண்முகம்.**

www.padippakam.com

காட்சி ஊடகத்தில் முதன் முறையாக

**புதிய**
**கலாச்சாரம்**

திரைமுழக்கம் வழங்கும்

# தீக்கொழுந்து

களச்சித்திரம்

இது
தேயிலையின் கதை.

பச்சைத் தேயிலையின்
விலை வீழ்ச்சியை எதிர்த்து
நீலமலை முகடுகளில் போராடிய
சிறு விவசாயிகளின் கதை.

இது
பச்சைத் தேயிலையை கருப்புத் தூளாக்க
நீலமலைத் தோட்டங்களில் பாடுபடும்
தொழிலாளர்களின் கதை.

இது
மலையில் விளையும் பச்சைத் தங்கத்தை
ஏகபோகச் சந்தையின் மூலம்
கொள்ளையடிக்கும்
பன்னாட்டு நிறுவனங்களின் கதை.

இது நடந்து முடிந்த கதையல்ல,
நாட்டையே மீண்டும் காலனியாக்கும்
சதித்திட்டத்தின் உண்மைக் கதை.

இது
நீங்கள் பருகும்
தேநீரின் கதை.

**தீக்கொழுந்து**
நீலமலைத் தேயிலை விவசாயிகளின்
போராட்டம் பற்றிய களச்சித்திரம்

**ஒளிக் குறுந்தகடு**
**விலை: ரூ. 250/-**
**தபால் செலவு ரூ. 20**



## உங்களுக்கோர் ஆயுதம்!

கதை கேட்டு வளர்ந்த நாடு இது. இன்று காட்சி ஊடகம் கதை சொல்வதை மறுக்காமல் கேட்கும் நாடும் இதுவே. பாகவதர் காலம் தொட்டு இளைய தளபதி வரை தமிழ் மனது திரைப்படத்தோடு இரண்டறக் கலந்துவிட்டது. அப்படித்தான் நம்மைப் பழக்கிவிட்டார்கள். திரைப்பட விமர்சனமும் இங்கே கேவலமான ரசனையாக மாறிவிட்டது. பாடல் காட்சியில் புகை பிடிக்க வெளியே செல்லாமல் இருந்தால் அது நல்ல படம் - மதிப்பெண் போடும் குமுதம், விகடன் வகையறாக்களின் அளவுகோல் அப்படி. கதையின் கருத்து தேவையில்லை, காட்சியின் அழகே முக்கியம் என்கிறார்கள் 'கலைப்பட' உபாசகர்கள். கலை இரவில் கூட்டம் சேர்க்க பிற்போக்கு இயக்குர்களுக்கு முற்போக்கு பட்டமளிக்கிறது தமிழக முற்போக்கு எழுத்தாளர் சங்கம்.

ஆயினும் புதிய கலாச்சாரம் மட்டும் திரைப்படங்களைப் பார்த்து பரிசீலித்து, இனம் காணும் சூத்திரத்தை உங்களுக்கு கற்றுத் தருகிறது. 'அஞ்சலி' அனுதாபமல்ல, மணிரத்தினத்தின் ஆதாயமே என்று புரிய வைத்த விமர்சனம், 'ரோஜா' இந்திய அரசின் செய்திப் படம் என்று விளக்கிய விமர்சனம், காதலின் போதையில் மத நல்லிணக்கம் என்று வந்த 'பம்பாய்' வரலாற்றை திரித்து முசுலீம்களை குற்றவாளியாக்கும் 'பம்பொய்' என்று நிருபித்த விமர்சனம், சத்யராஜின் 'தாய்மாமன்' வைகோவின் கனவுலகம் என்று தெளிய வைத்த விமர்சனம், விசுவின் பார்ப்பன நீதி, ராஜ்கிரணின் பெண்ணடிமைத்தனம், 'மகாநதி' கமலின் நடுத்தரவர்க்க ஹீரோத்தனம், 'ஜெண்டில்மேன்' சங்கரின் சாணக்கிய நரித்தனம், 'காதல் கோட்டையில்' காதலின் இலக்கணத்தை உணர்த்திய விமர்சனம், 'டைட்டானிக்கின்' பிரம்மாண்டத்தை வீழ்த்திக் காட்டிய விமர்சனம், வரலாற்று நிகழ்ச்சியை 'தனி மனித நோக்கில்' பார்க்கும் குற்றத்தை எடுத்துக்காட்டிய 'ஹேராம்' விமர்சனம் - இப்படிப் பல

ஆம்

நிழற்படத்தை அறுத்து நிஜத்தைக் காட்டும் புதிய கலாச்சாரம் உங்களுக்கோர் ஆயுதம்.

புதிய கலாச்சாரம். ஆண்டுச் சந்தா ரூ. 60.

''நாங்கள் எயிட்ஸ் நோய் பிடித்த விலை மாதர்களைப் போல நடத்தப்படுகிறோம்...'' ''எங்களுடைய சேவை தேவைப்பட்டபோது அமெரிக்க கம்பெனிகள் எங்களை ராஜாக்களைப் போல நடத்தினார்கள் - இப்போது தீண்டத்தகாதவரைப் போல நடத்துகிறார்கள்...'' ''திடீரென்று ஒருநாள் என்னை அலுவலக வாயிலிலேயே நிறுத்தி திருப்பியனுப்பினார்கள். ஒரு வாரம் கழித்து வேலை நீக்கக் கடிதம் வந்தது.'' ''அமெரிக்கக் குடியுரிமை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் தவணை முறையில் வீடு வாங்கினேன். திடீரென வேலைநீக்க உத்தரவு வந்துவிட்டது. இந்தியா திரும்ப வேண்டும். என்ன செய்வது? மண்டை வெடித்துவிடும் போலிருக்கிறது.''

*மே - 10 அவுட்லுக், மே - 14 இந்தியா டுடே இதழ்களிலிருந்து*

''அமெரிக்காவிலிருந்து 50,000 இந்தியக் கணினி வல்லுனர்கள் திருப்பி அனுப்பப்படுகிறார்கள். அமெரிக்க வேலை வாய்ப்புகள் அடைபட்டுவிட்டன. இந்தியாவிலும் கணினி நிறுவனங்கள் ஆட்குறைப்பு செய்கின்றன. சம்பளத்தை வெட்டுகின்றன. இன்போசிஸ், விப்ரோ, என்.ஐ.ஐ.டி போன்ற நிறுவனங்களின் பங்கு மதிப்புகள் வீழ்ச்சியடைகின்றன...''

- இவையெல்லாம் சமீபத்திய பத்திரிகைச் செய்திகள்.

''இளைஞர்கள் கோடீசுவரனாகலாம், இந்தியா வல்லரசாகலாம்' என்று கணினிக் கனவுகளை உருவாக்கிய பத்திரிகைகள் எதிர்பாராத அதிர்ச்சியைப் போன்று இச்செய்திகளை இப்போது வெளியிடுகின்றன. ஆனால், இந்தக் கனவுகள் பொய்யானவை, ஆசைகள் அநீதியானவை என்பதை ஆதார பூர்வமாக விளக்கும் வெளியீடு **அமெரிக்க மோகம்!** கணினிக் கல்வி, தகவல் தொழில் நுட்பப் புரட்சி ஆகியவை பற்றி உருவாக்கப்பட்டிருக்கும் மாயைகளை தகுந்த ஆதாரங்களுடன் தகர்க்கும் சிறு நூல். விலை: ரூ. 10, தபால் செலவு ரூ. 5/-




**தீக்கொழுந்து ஒளிக் குறுந்தகடு புதிய கலாச்சாரம் சந்தா, அமெரிக்க மோகம் நூல் தேவைப்படுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இரா. சீனிவாசன், 18, முல்லை நகர் வணிக வளாகம், 2-வது நிழற்சாலை, அசோக்நகர், சென்னை - 83.**


படிப்பகம்

www.padippakam.com

# மானம் கெட்டவர்களின் பானம் பெப்சி — கோக்

இந்திய இயற்கை வளத்தின் சராசரி நிறம் எதுவாகவிருக்கும்? செம்மண், கரிசல், வண்டல், பசுமை என நீங்கள் கருதினால் அது தவறு. கடந்த 10 ஆண்டுகளில் பெப்சியும் - கோக்கும் இணைந்து நீலத்தையும் - சிவப்பையும் இந்தியாவின் தேசிய நிறமென மாற்றிவிட்டன. பெட்டிக் கடைப் பெயர்ப் பலகைகள், பிரம்மாண்டமான விளம்பரப் பலகைகள், தொலைக் காட்சி விளம்பரங்கள் எங்கும் எதிலும் பெப்சி - கோக் மயம். மாநகரத் தெருக்களில் கோலாக்களின் லாரிகள் அட்டையாய் ஊர்கின்றன. கோக்கின் விளம்பரத்தைக் கத்தரித்தும், பெப்சியின் மூடிகளை சேகரித்தும் பரிசுப் பொருள் வாங்க அலையும் மேட்டுக்குடி சிறுவர்களுக்கு அது ஓய்வு நேரத் தொழிலாகிவிட்டது.

தற்போதைய இந்திய வாழ்க்கையின் ஆழ்மனதில் பதிந்துவிட்ட பெப்சி கோக்கின் படிமத்திற்கு இணையாக வேறு எதையும் ஒப்பிட இயலாது. கேவலம் இரு குளிர்பான நிறுவனங்களுக்கு அப்படி ஒரு மகிமையா, அது சாத்தியமா என்று நீங்கள் கருதலாம்.

எனில் அவை வெறும் தாகம் தீர்க்கும் குளிர்பானம் மட்டுமல்ல. எதைக் குடிப்பது - உண்பது - உடுத்துவது - பார்ப்பது - படிப்பது - கருதுவது ரசிப்பது நேசிப்பது என்ற அமெரிக்க வாழ்க்கை முறையின் - பண்பாட்டின் சின்னம். அத்தகைய அமெரிக்க தாகத்தை - ஏக்கத்தை ஏற்படுத்தி அடிமைப் படுத்துவதே அதன் முதன்மைப் பணி.

கொக்கோ - கோலாவைப் போல அமெரிக்கப் பண்பாட்டினைப் பிரதிநிதித்துவம் செய்யும் பன்னாட்டு நிறுவனம் வேறு எதுவுமில்லை. ஹாலிவுட், வால்ட் - டிஸ்னி, மெக்டோனால்டு, ஃபோர்டு கார், பாப் - ராக்கிசை என பல அமெரிக்க வகை மாதிரிகளில் கோக் மட்டுமே நெடுங்காலமாய் அமெரிக்காவின் தூதுவனாய் உலகெங்கும் செல்வாக்குடன் இடைவிடாமல் சுற்றி வருகிறது. இத்தகைய அங்கீகாரத்தைப் பெற்றிருக்கும் கோக் அதற்கான சாதனையை முதலில் தான் அவதரித்த திருத்தலத்திலேயே செய்து காட்டியிருக்கிறது.

ஓராண்டில் ஒரு அமெரிக்கன் குடிக்கும் குளிர்பான பாட்டில்களின் சராசரி எண்ணிக்கை 700. இப்போது அமெரிக்க மக்கள் தண்ணீர் அருந்துவதில்லை. தாகம் வந்தால் அவர்கள் நினைவுக்கு வருவது பெப்சி - கோக்கின் கோலாக்கள்தான். இப்படி நீர் குடிக்கும் பழக்கத்தை ஒழித்து, அமெரிக்க மக்களின் இரத்தத்தில் கலந்து விட்ட கோக் வெறும் குளிர்பானம் மட்டுமல்ல. பெப்சி - கோக்கில் அப்படி என்ன தான் இருக்கிறது? அதைவிட அவற்றை மேற்கத்திய வாழ்வின் அங்கமாக ஒரு போதையாக எப்படி மாற்றினார்கள் என்பதே முக்கியமானது. அதில்தான் இரு சோடாக் கம்பெனிகள் பல்லாயிரம் கோடி சொத்துக்களுடன் ஒரு உலக சாம்ராஜ்ஜியம் நடத்தி வரும் சூட்சுமம் அடங்கியிருக்கிறது.



***

1886-ஆம் ஆண்டு, அமெரிக்காவின் அட்லாண்டா மாநிலத்தில் ஜான் ஸ்டித் எனும் மருந்தாளுநர் கோக்கின் சோடா இனிப்பு கோலா கரைசலை உருவாக்கினார். அன்று நாளொன்றுக்கு 9 பாட்டில்கள் தலா 2 ரூபாய்க்கு விற்கப்பட்ட கோக், 2000-ஆம் ஆண்டின் முதல் 4 மாத இலாபமாக மட்டும் 5000 கோடி ரூபாயை அள்ளியிருக்கிறது. மேலும் இன்று தனது சோடாக் கரைசலையும் கோக், கிளாசிக் கோக், காஃபின் இல்லாத கோக், டயட் கோக், செர்ரி கோக், ஃபேண்டா, ஸ்பிரிட், மிஸ்டர் பிப், மெல்லோ யெல்லோ என 25 வகைகளாய் பெருக்கியிருக்கிறது. இன்று அதன் சொத்து மதிப்பு சுமார் 85 ஆயிரம் கோடி ரூபாய்.

1898-ஆம் ஆண்டு பெப்சியின் சோடாக் கரைசலை கால்ப் ப்ராதம் என்ற மருந்தாளுநர் உருவாக்கினார். குளிர் பானம், நொறுக்குத் தீனி, உணவகங்கள் என்று பெப்சியின் பேரரசு 150 நாடுகளில் 4,80,000 ஊழியர்களுடன் நடந்து வருகிறது. சொத்து மதிப்பு சுமார் ஒரு லட்சம் கோடி ரூபாய்.

உலக குளிர்பான சந்தையில் 46 சதம் வருவாய் கோக்கிற்கும், 21 சதம் பெப்சிக்கும் போய்ச் சேருகிறது. இப்படி இரண்டு நிறுவனங்களும் உலகின் தாகம் தீர்க்கும் தேவன்களாக, பல்லாயிரம் கோடி ரூபாயை ஆண்டுதோறும் சுருட்டி வருவது எப்படி சாத்தியமானது? நம்மூரில் தயாரிக்கப்படும் கலர் கோலி சோடாவின் கரைசலை விட பெப்சி - கோக்கின் கரைசல் அப்படி ஒன்றும் உயர்ந்ததல்ல. கார்பன் வாயு, இனிப்பு, வண்ணம், நீர் கொண்டு கலக்கப்படும் இக்கரைசல் தயாரிப்பதற்கு எளிதானதே. அதிஉயர் தொழில் நுட்பமோ, ரகசியமோ எதுவும் கிடையாது.

ஆனாலும் உலகெங்கும் சாதாரணத் தொழிலாக நடத்தி வந்த இத்தகைய சிறு குளிர்பான உற்பத்தியாளர்களை இரண்டு அமெரிக்க நிறுவனங்கள் ஒரு நூற்றாண்டாய் ஒழித்து விட்டன. இந்த இரண்டு கோலாக்களும் ஏதோ சொர்க்கத்தில் தயாரித்து அளிக்கப்படும் அழகான, தரமான அமுது என்ற சித்திரத்தையும் தமது வஞ்சகமான பிரச்சாரத்தால் ஏற்படுத்தி விட்டன.

அதற்கு நமது இந்திய உதாரணத்தையே பார்க்கலாம். 77-இல் ஜனதா அரசால் கோக் வெளியேற்றப்பட்ட பிறகு குளிர்பானச் சந்தையில் பார்லே நிறுவனம் ஆதிக்கம் செலுத்தியது. பார்லேயின் தம்ஸ் அப், லிம்கா, கோல்டு ஸ்பாட் போன்ற பானங்கள் அப்போது பிரபலமாக இருந்தன. 90-களின் ஆரம்பத்தில் 60 சதவீத சந்தையைக் கைப்பற்றிய பார்லே நிறு

www.padippakam.com

வனம் கேம்பா கோலா, த்ரில், டபுள் கோலா போன்ற போட்டி பானங்களை எளிதில் வென்றது. இவை இந்திய அளவில் விற்கப்பட்ட பானங்கள். இது போக, மாநில, வட்டார, உள்ளூர் அளவில் ஏராள மான பானங்கள் இருந்தன.

தமிழகத்தில் காளிமார்க், வின்சென்ட், மாப்பிள்ளை விநாயகர் இன்னபிற நிறுவனங்கள் பிரபலமாயிருந்தன. விருதுநகரில் 1916-இல் பழனியப்ப நாடாரால் துவக்கப்பட்ட காளிமார்க் 80-கள் வரை 30 சதவீத தமிழக சந்தையை வைத்திருந்தது. மேலும் இந்திய அளவில் பழரச பானத்திற்கு கிராக்கி இருந்தது. பார்லேயின் ப்ருட்டி, பயோமா இன்டஸ்ட்ரியின் ரசனா போன்றவை பழரச சந்தையில் ஆதிக்கம் செலுத்தின.

பெப்சி - கோக் வருகைக்கு பிறகு இந்நிலைமை அடியோடு மாறியது. 1980-களில் இருந்தே பெப்சி நிறுவனம் சில இந்திய தரகு முதலாளிகளின் உதவியுடன் இந்தியாவில் நுழைய முயன்று, இறுதியில் 1990-ஆம் ஆண்டு வென்றது. 100 சதவீத பங்குகள் வைத்திருக்கவும், உள்நாட்டு பாட்டில் தொழிற்சாலைகளை வாங்கவும், காய்கனி, டப்பா உணவு ஏற்றுமதி செய்யவும்... என ஏராளமான சலுகைகள் இந்திய அரசால் பெப்சிக்கு வழங்கப்பட்டன. பெப்சியும் வந்த வேகத்தில் 20 சதவீத குளிர்பான சந்தையைக் கைப்பற்றியது.

இங்கிருந்து வெளியேற்றப்பட்ட கோக் 16 ஆண்டுகளுக்குப் பிறகு 1993-ஆம் ஆண்டு மீண்டும் குதித்தது. கோத்ரெஜ், பிரிட்டானியா போன்ற நிறுவனங்கள் கோக்குடன் கூட்டு சேர்ந்தன. சந்திராசாமியின் அரசியல் பினாமியான சந்திரசேகர் தலைமையிலான மைய அரசு கோக்கிற்கு அனுமதி வழங்கியது. இப்படியாக அமெரிக்காவின் இரண்டு சோடாக் கம்பெனிகள் 'வறண்டு போன இந்தியாவைக் குளிப்பாட்டி கொள்ளையடிக்கும் வேலையை ஆரம்பித்தன.

அன்றைக்கு இந்தியாவின் குளிர்பான சந்தை 1200 கோடி ரூபாய் மதிப்பைக் கொண்டிருந்தது. ஒரு இந்தியன் ஓராண்டுக்கு குடிக்கும் பாட்டில்கள் 3 மட்டுமே தனிநபர் சராசரியாக இருந்தது. மொத்தத்தில் வளர்ச்சி விகிதம் 2.5 சதவீதம்தான். இன்றோ வளர்ச்சி விகிதம் 20 சதவீதமாக மாறிவிட்டது. அன்று விற்பனையான குளிர்பான பாட்டில்கள் 276 கோடி. இன்று 350 கோடி பாட்டில்களாக உயர்ந்து விட்டது. இன்னும் 5 ஆண்டுகளில் இதை 1200 கோடி பாட்டில்களாக உயர்த்தப் போவதாக கோக்கும் - பெப்சியும் மார்தட்டி வருகின்றன.

இன்று குளிர்பானச் சந்தையில் ஏகபோகம் வகிக்கும் நிலையை கோக்கும் - பெப்சியும் அடைந்துவிட்டன. புதிய பொருளாதாரக் கொள்கையின் ஆதாயங்களை நேரடியாகவும், சதி, ஏமாற்று, மிரட்டல், கைப்பற்றுதல், பிரம்மாண்டமான விளம்பர இய்க்கம் என மறைமுகமாகவும் பயன்படுத்தி இந்த ஏகபோகம் எட்டப்பட்டது.

கோக் வருகைக்கு முன்பு இங்கே கோலா வகை பானங்களுக்கு வரி அதிகமாகவும், பழரச வகைகளுக்கு குறைவாகவும் இருந்தது. இந்தியாவில் பழவகை விளைச்சல் அதிகம் என்பதால் விவசாயத்துக்கு ஆதரவாக அரசால் இக்கொள்கை பின்பற்றப்பட்டது. பின்னர் காட் ஒப்பந்தப்படி கோலாவுக்கான வரி குறைக்கப்பட்டது. அதன் பின்பே கோலாக்களின் விற்பனை பழரசத்தைவிட உயர்ந்தது. இப்படி அரசால் பெற்ற சலுகைகள் ஏராளம்.



அடுத்து 50% குளிர்பான சந்தையை வைத்திருந்த பார்லே நிறுவனத்தை இந்தியா வந்த ஆறே மாதங்களில் கோக் 123 கோடி ரூபாய்க்கு வாங்கியது. இதன் மூலம் 60 பாட்டில் தொழிலபதிர்களும், 2 லட்சம் சில்லறை விற்பனையாளர்களும் நாடு தழுவிய வலுவான விற்பனை வலைப் பின்னலும் கோக்கிடம் சரணடைந்தன. தம்ஸ் அப்பும், லிம்காவும் கோக்கின் தயாரிப்பு என விற்கப்பட்டன. பார்லே நிறுவனத்தின் அதிபர் ரமேஷ் சவுகானும், கோக்கின் யானை பலத்துடன் போட்டியிட முடியாது எனத் தெரிந்து கொண்டு தனது நிறுவனத்தை அடிமாட்டு விலைக்கு விற்றுவிட்டார்.

மிகப்பெரும் தரகு முதலாளியான பார்லேவுக்கே கதி இதுதான் எனும்போது காளிமார்க் போன்ற சிறு முதலாளிகள் என்ன செய்வார்கள்? தினத்தந்தியின் உள்ளூர் பதிப்பில் விளம்பரம், காடாத் துணி பேனர் விளம்பரம் என்றிருந்த காளிமார்க் - அமெரிக்க சோடாக் கம்பெனிகளின் அதிரடியான வானொளி விளம்பரத்தில் அடித்துச் செல்லப்பட்டது. இப்படியாக கோக் - பெப்சி எனும் அமெரிக்க கழுகுகள் எதிர்க்க ஆளின்றி நாட்டைக் கவ்வ ஆரம்பித்தன.

இவ்விரு பன்னாட்டு நிறுவனங்களும் பிரம்மாண்டமான முதலீடு, மிக விரிவான உற்பத்தி - விநியோக வலைப் பின்னல், குண்டு வெடிப்பைப் போன்ற விளம்பரங்கள் ஆகிய முப்பெரும் அஸ்திரங்கள் கொண்டு இந்தியாவில் வேரூன்றி விட்டன. இன்று குளிர்பான சந்தையில் 53 சதவீதம் கோக்கிடமும், 40 சதவிதம் பெப்சியிடமும் உள்ளன. சந்தையின் மதிப்பு சுமார் 5 ஆயிரம் கோடி ரூபாய்.

தங்களது ஆதிக்கத்தை திணிக்க இவர்கள் சாம, தான, பேத, தண்டம் என சகல வழிகளிலும் போர் நடத்தினர். ஐஸ்வர்யாராய், ஷாருக்கான், தெண்டுல்கர் ஆகியோர் பல்லிளிக்கும் விளம்பரங்களைப் பார்த்து வாய் பிளக்கும் நெஞ்சங்களுக்கு இந்நிறுவனங்களின் கோர முகம் தெரியாது.

பிடித்த பொருள் கிடைக்கவில்லையென்றால் கிடைக்கும் பொருளை வாங்குவது நுகர்வோர் வழக்கம். அதன்படி தமது பானங்களை மட்டுமே கடைக்காரர் விற்க வேண்டும் என்பதை இந்நிறுவனங்கள் தமது வர்த்தகக் கொள்கையாக வைத்திருக்கின்றன. கடைக்காரருக்கு குளிர்பதன பெட்டியை மலிவு விலையில் அல்லது இலவசமாய் வழங்குவார்கள். முதல் மிச்சம் என கடைக்காரர் நினைப்பார். ஆனால் கோக் அல்லது பெப்சி பொருட்களை மட்டுமே வாங்க் வேண்டும், அதை விற்றே கடன் அடைக்க வேண்டும், அதனால் அதிகமாக அந்த பானங்களை இருப்பு வைக்க வேண்டும் என்ற சுழலில் தாம் சிக்குவோம் என்பதை அவர் அறிய மாட்டார். மேலும் பெயர்ப் பலகைகள், சுவர்க் கடிகாரம், பனியன், தொப்பி என்ற பரிசுப் பொருள்கள், 'முதல் கொள்முதல் இலவசம் போன்ற சலுகைகளாலும் கடைக்காரர்களை அவர்கள் அறியாமலே விலை போக வைத்து விட்டனர்.

தமது பானங்கள் போகாத புதிய பகுதிகளுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் குறிப்பிட்ட இலக்கை அடைவதற்கு தாதா ஏஜெண்டுகளை வைத்திருக்கின்றனர். தாதாக்கள் அப்பகுதியைப் பழக்கிய பிறகு நிறுவனங்களின் ஏஜெண்டுகள் சந்தையைத் தொடருவர். உணவகங்கள், பெரும் அங்காடிகள், திரையரங்குகள் போன்ற பெரிய விற்பனையாளர்களுக்கு பெரும் தொகையைக் கொடுத்து தமது

படிப்பகம்

www.padippakam.com

குளிர்பானங்களை மட்டும் விற்க வைக்கின்றனர்.




புது தில்லியில் பி.வி.ஆர். மல்டி பிளக்ஸ் திரையரங்கிற்கு 60 லட்சமும், பம்பாயின் ஸ்டெர்லிங் திரையரங்கிற்கு 30 லட்சமும் கொடுத்த பெப்சி சமீபத்தில் மதுரை மாப்பிள்ளை விநாயகர் திரையரங்கிற்கும் ஒரு பெருந்தொகை கொடுத்து தனது பாட்டில்களை மட்டும் விற்க வைத்திருக்கிறது. கோக், பெப்சி இரண்டும் இதற்காக மட்டும் வருடந்தோறும் 10 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்றன.

குளிர்பான விற்பனையில் பாட்டில்கள் சுழற்சி அதாவது — பாட்டில் தொழிற்சாலை — கடை — மீண்டும் தொழிற்சாலை என இடையறாமல் பயணம் செய்வது முக்கியம். ஒரு வருடத்தில் ஒரு பாட்டில் 10 முறையாவது விற்கப்பட்டால்தான் லாபம். இதில் 30 சதவீதம் பாட்டில்கள் உடைபடும். மீதி சுற்றி வரும். அப்படி சுற்றி வரும் தனது எதிர் நிறுவன பாட்டில்களை முடக்குவதற்கு இந்நிறுவனங்கள் ஏராளமான சதி வேலைகள் செய்கின்றன.

அடுத்து குளிர்பான தயாரிப்பு - விற்பனைக்கான அடிப்படை கட்டுமான வசதிகளுக்காக இந்நிறுவனங்கள் பாதியை மட்டும் முதலீடு செய்கின்றன. மீதியை ஒப்பந்ததாரர்கள் மூலம் முதலீடு செய்ய வைக்கின்றன. பெப்சி - கோக்கின் ரசாயன கரைசல் கூழ் (Essence) மட்டும் அமெரிக்காவிலிருந்து வரும். கூழை நீரில் கலந்து பாட்டிலில் விற்பதற்கென்றே உலகம் முழுவதும் பிராந்திய அளவில் ஏராளமான பாட்டில் தொழிற்சாலைகளை வைத்திருக்கின்றனர். இந்தியாவில் கோக்கிற்கு 60, பெப்சிக்கு 26 தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றில் கோக் மட்டும் பாதியை சொந்தமாகவும் மீதியை ஒப்பந்ததாரர்கள் மூலமாகவும் வைத்திருக்கின்றது.

இத்தகைய பாட்டில் தொழிற்சாலைகளின் அதிபர்கள் கோக் கோருகின்ற அளவு முதலீடு செய்ய வேண்டும். கோக் பானங்களை மட்டும் தயாரிக்க வேண்டும். தேவைப்பட்டால் தொழிற்சாலையை விரிவுபடுத்த வேண்டும். இவையெல்லாம் ஒப்பந்த விதிகள். தற்போது இத்தொழிற்சாலைகளை அடிமாட்டு விலைக்கு மிரட்டி வாங்கி வருகிறது கோக். சிலரை பாதி பங்குகள் தருமாறு கட்டளையிடுகிறது. கோகின் மிரட்டலை எதிர்த்து 23 அதிபர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கின்றனர். 'எங்களை அதிக முதலீடு செய்ய வைத்துவிட்டு, இப்போது ஒப்பந்தத்தை ரத்து செய். அல்லது விற்றுவிடு' என்று கோக் மிரட்டுவதாக பூனா பாட்டிலிங் தொழிற்சாலை அதிபர் தனது வழக்கில் கூறியிருக்கிறார்.

அதேபோன்று மொத்த வியாபாரிகளும் கோக்கினால் அச்சுறுத்தப்படுகின்றார். தமிழக நுகர்பொருள் மொத்த வியாபாரிகள் சங்கத் தலைவர் கணேஷ், ''கோக்கின் அநீதியான வர்த்தகப்படி எங்களுக்கு மாதம் 2000 ரூபாய் நட்டம் ஏற்படுகிறது. எதிர்த்துக் கேட்டால் வேறு வணிகர்களை நியமனம் செய்வோம் என்று மிரட்டுகிறார்கள்'' என்கிறார்.

இது போக பெப்சியும் கோக்கும் தங்களுக்குள் அடித்துக் கொள்வார்கள். தனது நிர்வாகிகளை கோக் விலைக்கு வாங்குவதாக பெப்சி வழக்குத் தொடுத்திருக்கிறது. இதில் பெப்சிக்கு ஆதரவாக வாதிட்ட வழக்கறிஞர் தேசபக்த ஆர்.எஸ்.எஸ்.இன் அருண் ஜெட்லி (தற்போது செய்தி ஒளிபரப்பு அமைச்சர்). ''2000 கோடி முதலீடு செய்திருக்கும் பெப்சிக்கு இழைக்கப்படும் அநீதி'' என்று நீதிமன்றத்தில் உருகினார். ''இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி ஒரு ஊழியர் எங்கு வேண்டுமானாலும் வேலை செய்யும் உரிமையை தடை செய்ய முடியாது'' என்று கோக் திருப்பியடித்தது. பெப்சியும் கோக்கின் பானங்களைத் தயாரித்து வந்த குஜராத், கோவா பாட்டில் தொழிற்சாலைகளை விலைக்கு வாங்கியிருக்கிறது. இப்படி இருவரும் தங்களது வியாபார மோசடிகளுக்காக இந்தியாவில் மட்டும் 300 கோடி ரூபாய் ஒதுக்குகிறார்கள்.

**பெப்சி - கோக் தாகம் தீர்க்கும் குளிர் பானங்களல்ல. எதைக் குடிப்பது - உண்பது - உடுத்துவது - பார்ப்பது - படிப்பது - கருதுவது - ரசிப்பது - நேசிப்பது என்ற அமெரிக்க வாழ்க்கை முறையின் - பண்பாட்டின் சின்னம். அத்தகைய அமெரிக்க தாகத்தை - ஏக்கத்தை ஏற்படுத்தி அடிமைப் படுத்துவதே அதன் முதன்மைப் பணி.**

இப்போது குடிநீர் என்றாலே 'மினரல் வாட்டர்' என்றாக்கி விட்டார்கள். இந்தியாவின் மினரல் குடிநீர் சந்தை மதிப்பு 1250 கோடி ரூபாயாகும். வருடந்தோறும் 100 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருக்கும் இத்துறையையும் அமெரிக்க சோடாக் கம்பெனிகள் விட்டு வைக்கவில்லை. கோக் - கின்லே, பெப்சி - அக்வாபினா எனும் குடிநீர் பாட்டில்களை அறிமுகப்படுத்தி அதை மட்டுமே விற்குமாறு தமது விற்பனையாளர்களை மாற்றி வருகின்றனர். தற்போது குடிசைத் தொழில் போல நடந்துவரும் இத்தண்ணீர் வியாபாரமும் அவர்களால் வெகு விரைவில் ஒழிக்கப்படும்.

இதற்கு மேல் பல மாநிலங்களில் பல ஏக்கர் நிலங்களை வாங்கியிருக்கின்றனர். ஆய்வகம், சரக்கு லாரி கட்டும் பணிமனை, பழரச உற்பத்தி, காய் - கனி பண்ணை, நொறுக்குத் தீனி, டப்பா உணவு ஏற்றுமதி என ஏராளமான திட்டங்களையும் வைத்திருக்கின்றன. இந்தியாவின் 15 கோடி நடுத்தர வர்க்க மக்களைக் கொண்ட வலுவான சந்தையைக் கைப்பற்றுவதை தமது நோக்கமாகக் கொண்டுள்ளன. மாத சம்பளம் வாங்கும் நடுத்தரக் குடும்பம் ஒரு மாதம் சில நூறு ரூபாய்களை தங்களுக்கு மொய் எழுத வேண்டும் என்பதே அவர்களது இலக்கு.

கனவில் வாழும் நடுத்தர வர்க்கத்தைக் கள் ஊற்றி மதி மயங்க வைக்கும் வித்தைக்காக பல விளம்பர படைப்பாளிகள் பெப்சி - கோக்குக்காக உழைக்கின்றார். விளம்பர நிறுவனங்களுக்கு மட்டும் இரு நிறுவனங்களும் தலா 50 கோடியை கட்டணமாகக் கொடுக்கின்றன. இது போக வானொளி, ஏனைய விளம்பரங்களுக்காக பல கோடி ரூபாய் செலவழிக்கப்படுகின்றன. ஷாருக் கான், டெண்டுல்கர், ஐஸ்வர்யாராய் போன்ற நிழலுலக நட்சத்திரங்களுக்கு கோடியில் சம்பளம் தரப்படுகின்றது.

'உலக அளவில் கொள்ளையடிக்க - உள்ளூர்க்காரனாக வேடம் போடு' என்பது

www.padippakam.com

பன்னாட்டு நிறுவனங்களின் சுரண்டும் செயல் திட்டம். அதற்கேற்ப தங்களது விளம்பரங்களுக்கு அந்தந்த மாநில நடிகர்களை ஒப்பந்தம் செய்ய ஆரம்பித்திருக்கின்றனர். கோக் ஆந்திராவில் சிரஞ்சீவியையும், தமிழ்நாட்டில் விஜயையும், பெப்சி தமிழகத்தில் மாதவனையும், தெலுங்கில் கல்யாணையும் (சிரஞ்சீவியின் தம்பி) விளம்பரங்களில் இறக்கியிருக்கின்றனர். இனி இன்பத் தமிழிலும், சுந்தரத் தெலுங்கிலும் 'என்ஜாய் கொக்கோ-கோலா!' ஏ தில் மாங்கே மோர் - ஆஹா'வும் கவிதையாய் பொழியும்.

இதுவும் போக டி-ஷர்ட், தொப்பி, கிரிக்கெட் - சினிமா ஸ்பான்சர், மூடி சேகரிப்பு, ஹாலிவுட் - மல்யுத்த நட்சத்திரங்களின் ஸ்டிக்கர்கள், அறிமுக விலை தள்ளுபடி, சென்னையில் இட்லிக்கு கோக் இலவசம், பம்பாயில் சப்பாத்திக்கு இலவசம், பெங்களூரில் பிஸ்ஸா வாங்கினால் பெப்சி கேன் இலவசம் என மேட்டுக்குடியைக் கவர ஏராளமான மினுக்குத் திட்டங்கள்.

இது அமெரிக்காவின் குளிர்பானக் கம்பெனிகள் இந்தியாவில் தொடுத்திருக்கும் ஆக்ரமிப்பு போர்.

3 ஷிப்ட்களில் 150 தொழிலாளிகள் வேலைபார்த்த காளிமார்க்கின் விருதுநகர் பாட்டில் தொழிற்சாலையில் இன்று 20 பேர் ஒரு ஷிப்ட் மட்டும் வேலை செய்கிறார்கள். தென்மாவட்டங்களில் இன்று காளிமார்க்கை பரிதாபமான ஓரிரு பெட்டிக் கடைகளில் மட்டும் காணலாம். திருச்சியில் வின்சென்ட் குளிர்பான அலுவலகப் பெயர் பலகை பாழடைந்து சவக்களையுடன் காணப்படுகிறது. மதுரை மாப்பிள்ளை விநாயகர் குளிர்பானம் தமது திரையரங்குகளில் கூட விற்க முடியாத அவல நிலையில் இறந்து வருகிறது. காஞ்சிபுரத்தின் புகழ்பெற்ற பன்னீர் சோடா நிறுவனங்களை இனி தொல்பொருள் ஆராய்ச்சியில்தான் தேட வேண்டும். மோரும், இளநீரும், போஞ்சியும், பானகமும் அருகி வருகின்றன. நீராகாரம் என்பது என்னவென்றே நகர்ப்புற இளைஞர்களுக்குத் தெரியாது.

10 ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான இந்திய குளிர்பான நிறுவனங்களும், இலட்சக்கணக்கான தொழிலாளிகளும் வேலையிழந்திருக்கின்றனர். நமது விவசாய பொருளாதார - தட்ப வெப்பநிலைக்கு பொருத்தமான மரபு வகை பானங்களை மறந்துவிட்டோம். அமெரிக்காவின் கார்பன் வாயு கலந்த ஆல கால விடத்தை குடிக்க பழக்கப்படுத்தப்படுகிறோம். பெப்சியும், கோக்கும் தமது எசன்ஸை மட்டும் அமெரிக்காவில் இருந்து அனுப்பி, உள்ளூர் பாட்டில் தொழிலதிபர்களை வைத்து நீர் கலந்து, ஏஜெண்டுகளை வைத்து விநியோகித்து, விளம்பரங்களுக்கு நுகர்வோரிடமே பிடுங்கிக் கொண்டு, ஏராளமான சொத்துக்களை வாங்கிக் கொண்டு, டப்பா உணவு ஏற்றுமதி - கோலா விற்பனை என இரண்டிலும் சில ஆயிரம் கோடிகளை கொள்ளையடிக்கின்றனர்.

இந்தியா மட்டுமல்ல முழு உலகும் இந்தக் கொள்ளையிலிருந்து தப்பவில்லை. அமெரிக்காவுக்கு கீழே இருக்கும் மெக்சிகோ நம்மைப் போன்ற ஏழை நாடுதான். அங்கேயும் ஆண்டுக்கு ஒருவர் 500 பாட்டில்களை குடிக்கும் அளவுக்கு தனி நபர் நுகர்வை ஏற்றி விட்டார்கள்.

**வருடா வருடம் ஒரிஸா, ராஜஸ்தான், குஜராத்தில் பிளந்து கிடக்கும் மண்ணுக்கும், மக்களுக்கும் அந்த நீரின் அருமை தெரியும். தண்ணீர் நமது உடலில் இரண்டறக் கலந்தது. நமது பண்பாடு. விவசாயத்தின் உயிர். அத்தகைய நீரை நமது சிந்தனையில் இருந்து அழிக்கிறார்கள் என்றால் எவ்வளவு கொடூரம்.**

எங்கெல்லாம் அமெரிக்க இராணுவம் நுழைந்ததோ அங்கெல்லாம் பெப்சியும் - கோக்கும் நுழைந்தன. பின்னர் இராணுவம் திரும்பினாலும் கோலாக்கள் திரும்பவில்லை.

ஜப்பான், கொரியா, ஹாங்காங், சிங்கப்பூர், தாய்லாந்து இங்கெல்லாம் கோலாக்கள் அம்மக்களின் ரத்தத்தில் கலந்து விட்டன. சிங்கப்பூரில் ஒரு ஓட்டலுக்கு சென்றால் முதலில் குடிநீர் வைக்க மாட்டார்கள், கோக் தான் தருவார்கள். இப்படி தண்ணீர் குடிக்கும் பழக்கம் ஒழிக்கப்பட்டு வருகிறது.

தொன்மையான புகழ் பெற்ற நாகரிகங்களெல்லாம் நதிக்கரையில் தோன்றின. மனித குல நாகரிகத்தில் நீரின் பங்கு அத்தகையது. இன்றும் நல்லநீர் கிடைக்காமல், மழை பெய்யாமல் ஆப்ரிக்காவிலும், ஆசியாவிலும் ஏராளமான நாடுகள் உள்ளன. வருடா வருடம் ஒரிஸா, ராஜஸ்தான், குஜராத்தில் பிளந்து கிடக்கும் மண்ணுக்கும், மக்களுக்கும் அந்த நீரின் அருமை தெரியும். தண்ணீர் நமது உடலில் இரண்டறக் கலந்தது. நமது பண்பாடு. விவசாயத்தின் உயிர். அத்தகைய நீரை நமது சிந்தனையில் இருந்து அழிக்கிறார்கள் என்றால் எவ்வளவு கொடூரம்.

பெப்சி - கோக்கின் ரசாயனக் கலவையில் என்ன இருக்கிறது என்பது யாருக்கும் தெரியாது. வியாபார ரகசியம் என்ற உரிமையால் பாதுகாக்கப்படும் அந்தக் கலவையின் தீங்கை மேற்குலகிலேயே பலர் அம்பலப்படுத்தியிருக்கின்றனர். பெப்சி - கோக் சமீபத்தில் அறிமுகப்படுத்தியிருக்கும் 'டயட்' என்ற பானத்தில் (கலோரி இல்லாத இனிப்பு நீர்) உள்ள 'ஆஸ்பார்ட்டாம்' என்ற ரசாயனப் பொருள் உடலுக்கு நேரடித் தீங்கை விளைவிக்கக் கூடியது என அமெரிக்காவில் எதிர்ப்பு இயக்கம் கிளம்பியிருக்கிறது. ஆனால் அதிகார வர்க்கத்தைச் சரிக்கட்டிய கோக் தொடர்ந்து அதை விற்கிறது.

பிரான்சில் மக்கள் அருந்தும் பானமும், ஏற்றுமதி செய்யப்படுவதும் 'ஒயின்'தான். பிரெஞ்சு நாடு திராட்சை உற்பத்தியில் முன்னணியில் இருக்கும் நாடு. அந்த விவசாய பொருளாதாரத்தை வைத்து இந்த பானம் அவர்களிடையே மரபு வகை பழக்கமாக உள்ளது. கோக் பெப்சியின் வருகையால் பிரெஞ்சு விவசாயிகள் பாதிக்கப்பட்டு எதிர்த்துப் போராடுகின்றனர்.

இப்படி உலகம் முழுவதும் அந்தந்த மக்களது வாழ்க்கை, பண்பாடு, பொருளாதாரம் மூன்றும் அமெரிக்காவின் ஆக்ரமிப்பு நுகர்வுப் பண்பாட்டால் அழிக்கப்படுகிறது. பிஸ்ஸா, பர்கர், எம்.டி.வி., ஹாலிவுட், துரித உணவகம், பேரங்காடி டபிள்யூ.டபிள்யூ.எப், நைக், மெக்டோனால்டு போன்றவையே நீங்கள் எப்படி வாழ வேண்டும் என்பதைத் தீர்மானிக்கின்ற, கற்றுக் கொடுக்கின்ற தேவன்களாக மாறிவிட்டன.

உழைப்பாளிகளின் பானமான தேநீரை நடுத்தர - மேட்டுக்குடி இளைஞர்களிடம் கொண்டு செல்ல நெஸ்லேயும் - கோக்கும்; பெப்சியும் - (ஹிந்துஸ்தான்) லீவரும் இணைந்து ஐஸ்.டீ, ரெடிமேடு டீ போன்றவைகளைத் தர இருக்கிறார்கள். கோக், பெப்சி இரண்டும் உலகம் முழுவதும், ஏன் கழிப்பறைகளில் கூட கிடைக்க வேண்டும் என்பது வரை போய்விட்டன. சமீபத்தில் போன் செய்தால் கோக் டின் கொட்டும் 'டயல் எ கோக்' என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இப்படி இந்தக் கொள்ளையடிக்கும் உத்திக்கு முடிவு கிடையாது.

இது வெறும் குளிர்பானம் அல்ல. உங்களை உங்கள் மண்ணிலிருந்து பிடுங்கி எறியும் ஒரு வெடிகுண்டு. பெப்சி - கோக் காசு குடித்து குடிப்பது தாயைக் கூட்டிக் கொடுப்பதைவிடக் கேவலமானது. இந்த மண்ணையும், மக்களையும் உதறித் தள்ளி அமெரிக்க நாய்களுக்கு அடிமையாக இருப்போம் என்பவர்கள்தான் கோக் குடிக்க முடியும். ஆம். பெப்சி - கோக் மானங் கெட்டவர்களின் பானம்.

● வேல் ராசன்



படிப்பகம்

## நூல் அறிமுகம்:

# 1084-ன் அம்மா

"பள்ளி சென்று திரும்பிய என்குழந்தை
அந்த கிராமம் எங்குள்ளதென வினவுகையில்
நான் கலவரம் கொள்கிறேன்.
அதனை வரைபடத்தில் காண இயலாது.
ஏனெனில்,
அது ஒரு கிராமத்தின் பெயரல்ல.
அது இந்த தேசத்தின் பெயர்".


("நக்சல்பரி - அது ஒரு கிராமத்தின் பெயரல்ல - RSU வெளியீடு")

ஆம், நக்சல்பரி - அது ஒரு கிராமத்தின் பெயரல்ல. இந்த தேசத்தின் பெயர்! இந்த தேசத்தின் உண்மையான வரலாறு! எந்தப் பெயரால் இந்த நாட்டின் இருண்ட மூலைகளிளெல்லாம் நம்பிக்கையின் வெளிச்சம் பரவியதோ, எந்தப் பெயரால் ஒடுக்கப்பட்ட மக்களும், கம்யூனிசப் புரட்சியாளர்களும் விடுதலையின் கீதத்தை இசைத்தார்களோ, எந்தப் பெயர்கேட்டு ஆளும் வர்க்கமும், போலிக் கம்யூனிஸ்டுத் துரோகிகளும், காவல் நாய்களும் அஞ்சி நடுங்கினவோ, அந்தப் பெயர்தான் நக்சல்பரி!

ஆனால், இன்றளவும் நக்சல்பரிப் பாரம்பரியத்தைத் தொடர்ந்தெழும் போராளிகளை வன்முறை வெறியர்களென்றும், பயங்கரவாதிகளென்றும், தேசத் துரோகிகளென்றும், விரக்தியுற்ற வேலைவாய்ப்பற்ற இளைஞர்களென்றும் அவதூறுப் பிரச்சாரங்கள் தொடர்கின்றன. நக்சல்பரி எழுச்சியை, "விடுதலைப் பத்தாண்டு" (The Decade of Liberation) என அறிவிக்கப்பட்ட கொந்தளிப்பான எழுபதுகளின் இரத்தம் தோய்ந்த வரலாற்றை மறைக்கிறார்கள்; திரிக்கிறார்கள். இருந்த போதிலும், உண்மைகள் மடிந்து விடுவதில்லை. அந்தக் காலகட்டத்தின் முக்கியத்துவத்தை நம் கண்முன்னே நிறுத்தி கேள்விகளை எழுப்புகிறது மகாசுவேதா தேவியின் "1084-ன் அம்மா".

வங்க இலக்கியத்தில் மகாசுவேதா தேவியின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. ஒடுக்கப்பட்ட மக்களின், பழங்குடி மக்களின் அரசியல் சமூகப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு பல ஆண்டுகளாக எழுதி வரும் மகாசுவேதா தேவி, பழங்குடிமக்களுக்காக ஒரு பத்திரிக்கையும் நடத்தி வருகிறார். (அம்மக்களின் உரிமைகளுக்காக இடையறாது போராடி வருகிறார்.) அவருடைய "1084 - ன் அம்மா" என்ற இந்நாவல் "ஹஜார் சௌராஸி கீ மா" என்ற பெயரில் கோவிந்த் நிஹ்லானியால் இந்தி மொழியில் திரைப்படமாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது.

எழுபதுகளில், கல்கத்தாவில் வாழும் ஒரு பணக்காரக் குடும்பம். அதன் குடும்பத் தலைவியான சுஜாதா எனும் பெண்மணிதான் இந்நாவலின் மையக் கதாபாத்திரம். அவருடைய நினைவோட்டங்களாக, சிந்தனைகளாக விரிகிறது இந்நாவல். ஒரு ஒழுக்கங்கெட்ட கணவன், பெருங்குடிகாரனும் செலவாளியுமான மூத்த மகன், காமவெறி பிடித்த மூத்த மகள், பணத்தாசையும் ஆடம்பர வெறியும் கொண்ட இளைய மகள் இவர்களுடன் தன்னுள் ஒடுங்கி ஒரு மவுன வாழ்க்கை நடத்துகிறார் சுஜாதா. இந்த குடும்பம் சமூகத்தில், 'ஒரு கௌரவமான கண்ணியமான குடும்பம்'. எதிர்பாராத விதமாக அவர்களின் 'கண்ணியத்திற்கு' ஒரு நெருக்கடி ஏற்படுகிறது.




சுஜாதாவின் இளைய மகன் ப்ரதீ கல்கத்தாவின் 1084 வது நக்சலைட்டாகக் கொலை செய்யப்படுகிறான். அவனுடைய மரணத்திற்கு ஓர் ஆண்டிற்குப் பிறகான அவனுடைய பிறந்தநாளில் சுஜாதாவிற்கு ஏற்படும் எண்ண ஓட்டங்களே இந்தக் கதை.

ப்ரதீயின் மரணம் மற்ற குடும்ப உறுப்பினர்களைப் பாதிக்கவில்லை. தங்களுடைய 'கவுரவமான'வாழ்க்கையையும் அந்தஸ்தையும் அவனுடைய மரணம் பாதிக்காத வண்ணம், அவனுடைய மரணம் குறித்த செய்தி கூட பத்திரிக்கைகளில் வெளிவர விடாமல் தடுக்கிறார்கள். காலம் நகர்கிறது.

சுஜாதாவை ஒரு கேள்வி உலுக்குகிறது. "சிறு வயதில் எதற்கெடுத்தாலும் பயப்படக் கூடிய ப்ரதீ, எப்படி சாவை பயமின்றி ஏற்றுக் கொண்டான்? எது அவனை வழிநடத்தியது? எதன் பொருட்டு அவன் கொலை செய்யப்பட்டான்?" ஒழுக்கங்கெட்ட குடும்பத்தின் அனைத்து ஆபாசங்களையும் சகித்துக் கொண்டு வாழ்க்கையில் ப்ரதீ மட்டுமே சுஜாதாவின் அன்பிற்கும், நம்பிக்கைக்கும் உரியவனாக இருந்தான். இப்போது அவனும் இல்லை.

ப்ரதீ அந்த வீட்டில் வாழ்ந்த போது கூட அன்னியனாகவே வாழ்கிறான். குடும்பத்தினருடைய மதிப்பீடுகளை ஏற்க மறுக்கிறான். தர்க்கம் புரிகிறான். வெறுக்கிறான். விலகி நடக்கிறான். ஆனால், சுஜாதாவோ எதையும் தட்டிக் கேட்பதில்லை. ஏனெனில், அவரே சொல்வது போல், அவர் 'அப்படித்தான் பழக்கப்படுத்தப்பட்டிருக்கிறார்'

ப்ரதீயின் இன்னொரு முகத்தை, சொல்லப்போனால் உண்மையான முகத்தைத் தேடுகிறார் சுஜாதா. ப்ரதீ எந்தத் தோழர்களோடு கொல்லப்பட்டானோ, அவர்களில் ஒருவனான சமுவின் தாயைச் சந்திக்கிறார், அவளுடைய

www.padippakam.com

புலம்பல்களின் வழியாக, தன்னுடைய மகனைத் தேடுகிறார்.

ஒரு இளைஞனின் சாவு, குறிப்பாகச் சொன்னால் ஒரு நக்சலின் சாவு அவனுடைய குடும்பத்தைச் சின்னாபின்னப் படுத்திவிடுவதைக் கண்கூடாகக் காண்கிறார். கண்முன்னே மார்க்சிஸ்ட்டு கட்சிக் குண்டர்களாலும், போலீசு வெறியர்களாலும் மகன் கொல்லப்பட்ட வேதனை தாங்க முடியாமல் அவனுடைய தந்தை இறந்துபோகிறார். சமூவின் அக்கா வேலைக்குச் செல்கிறாள். ஆனால், தொடர்ந்து மார்க்சிஸ்ட்டு கட்சி குண்டர்களின் தொல்லைக்கு ஆளாகிறாள். அந்தக் குடும்பம் வறுமையில் எரிகிறது.

ஆனால், தன் மகனின் சாவு தன் குடும்பத்தை ஏன் அழிக்கவில்லை? குண்டர்கள் ஏன் தங்களை தொல்லைப் படுத்தவில்லை? போலீசு ஏன் மரியாதையோடு நடந்துகொண்டது என எண்ணிப் பார்க்கிறார். சமூவின் அம்மா எளிதில் புரியவைக்கிறாள். "நீங்கள்லாம் பெரிய இடம்..." வர்க்க அரசியல் புரியத் துவங்குகிறது.

ப்ரதீ நேசித்த நந்தினி என்னும் பெண்ணைச் சந்திகிறார். நந்தினியும் நக்சல் போராளிதான். சிறை கொடுமைகளினால் ஒரு கண்ணே குருடாகி உடலளவில் உருக் குலைந்து நிற்கிறாள். ஆனால் அவளுடைய சொற்கள் தீக்கங்குகளாகத் தெறிக்கின்றன. சென்ற தலைமுறையின் மீதும், அவர்கள் கட்டிக்காக்கும் சமூக அமைப்பின் மீதும், அந்த அமைப்பின் இரக்கமற்ற கொலைவெறித்தாண்டவங்கள், தூக்கி நிறுத்தப்படும் போலியான மதிப்பீடுகள் அனைத்தின் மீதும் அவளுக்கு இருக்கும் முழுமையான வெறுப்பை உணர்கிறார்.

ப்ரதீ, அவனுடைய தோழர்கள், நந்தினி, அவர்களைப்போன்ற எண்ணற்ற இளைஞர்களின், அந்தப்புதிய வகையினரின் எண்ணவோட்டங்களைத் தன்னால் எட்ட முடியுமா, அவர்களைப் போன்று உண்மையைத் தொடர்ந்து பற்றவும், பொய்மைகளைத் தூக்கி எறியவும் தன்னால் இயலுமா என ஏங்குகிறாள். அவர்களின் வீரியம், சுவர்கள் அனைத்தையும் உடைத்து மீறும் கோபம், நம்பிக்கை... அவரை வியப்பும் வேதனையும் கொள்ள வைக்கிறது. 'கல்கத்தாவின் மண் இன்னும் எத்தனையோ இரத்தத்தைச் சுவைக்கக் காத்திருக்கிறது, தன்னைப்போன்ற தாய்மார்களின் ஓலங்களுக்காக வழிசமைக்கிறது' என்பதை அறியும் போது, அவரின் மனம் துடிக்கிறது.

**''சமூகத்தின் மனசாட்சிகள்— இளைஞர்கள், அறிவுஜீவிகள் ஏன் மௌனம் சாதிக்கிறார்கள்? கிழக்கு வங்காள்த்தில் (பங்களா தேஷ்) பாக் இராணுவம் நடத்தும் கொலை வெறியாட்டம் குறித்து கூச்சல் போடும் இவர்கள், சொந்த நாட்டில் இளைஞர்களும், யுவதிகளும் நாய்களைப் போலச் சுட்டுக்கொல்லப் படுவதை ஏன் காண மறுக்கிறார்கள்? ஏன் வாய் திறக்க மறுக்கிறார்கள்?''**

''சமூகத்தின் மனசாட்சிகள்- இளைஞர்கள், அறிவுஜீவிகள் ஏன் மௌனம் சாதிக்கிறார்கள்? கிழக்கு வங்காளத்தில் (பங்களாதேஷ்) பாக் இராணுவம் நடத்தும் கொலை வெறியாட்டம் குறித்து கூச்சல் போடும் இவர்கள், சொந்த நாட்டில் இளைஞர்களும், யுவதிகளும் நாய்களைப் போலச் சுட்டுக்கொல்லப்படுவதை ஏன் காண மறுக்கிறார்கள்? ஏன் வாய்திறக்க மறுக்கிறார்கள்?'' கேள்விகள் எழும்புகின்றன. அறிவு ஜீவிகள் என்று போற்றப்படுபவர்களின் பொய்த் தோற்றங்களையும், ஆளும் வர்க்கத்தின் முகமூடிகளையும் மெல்லப்புரிந்து கொள்கிறார்.

| | |
|---|---|
| **நூலின் தலைப்பு** | : 1084-ன் அம்மா |
| **ஆசிரியர்** | : மகாசுவேதா தேவி |
| **மூலம்** | : வங்காளி |
| **ஆங்கிலம் வழி தமிழில்** | : சு. கிருஷ்ணமூர்த்தி |
| **விலை** | : ரூ. 45.00 |
| **வெளியீடு** | : தமிழ்ப் புத்தகாலயம், சென்னை |
| **கிடைக்குமிடம்** | : கீழைக்காற்று வெளியீட்டகம், 10, ஔலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை-600 002. |

அன்று மாலையில் வீட்டில் தான் என்றும் எதிர்த்துப் பேசாத கணவனை எதிர்த்துப் பேசுகிறார். மகள், மருமகள்களின் ஆடம்பரத்தைக் கண்டு வெறுக்கிறார். சமூவின் தாயாரையும், அக்காவையும் எண்ணிப் பார்க்கிறார். மகளுடைய திருமண நிச்சயதார்த்தத்திற்காக வருகை தரும் விருந்தினர்களின் ஆபாசங்களும், அருவெறுக்கத்தக்க போலி முகங்களும் அவரை மூச்சு முட்டச் செய்கின்றன. இவர்களனைவரையும் வெறுத்தொதுக்கிய ப்ரதீ, ஹேம் என்னும் முதிர்ந்த தன் வீட்டு வேலைக்காரியிடம் மட்டும் ஏன் பாசத்தோடு இருந்தான் என்பது இப்பொழுது சுஜாதாவுக்குப் புரிகிறது. அவருடைய மனம் மகனின் நினைவில் தவிக்கிறது. சவங்களாக வாழும் மனிதர்களைக் கண்டு வெதும்புகிறது.

''இந்த உலகம் சவங்களுக்காகவே படைக்கப்பட்டிருக்கிறதா? சாப்பிட்டு, சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டு, பேராசையில் வெறி பிடித்து அலையும் சவங்கள்'' (பக் - 132)

''இவர்களெல்லோரும் கருவிலேயே கெட்டுப்போனவர்கள். ப்ரதீயும் அவனுடைய சகாக்களும் அடையாளம் மிஞ்சாமல் அழித்துவிட எண்ணிய சமூகம் பலருடைய வயிற்றுச்சோற்றைப் பறித்து இவர்களை ஆடம்பரமாக வாழச் செய்திருக்கிறது. இந்தச் சமூகத்தில் செத்தவர்களுக்குத்தான் வாழ்க்கையில் உரிமையுண்டு. உயிரோடு இருப்பவர்களுக்கல்ல...''(பக் - 144)

இறுதியாக, வேதனையின் விளிம்பில் வெகுநாட்களாய் அவர்களைத் துன்புறுத்திய **'அப்பெண்டிக்ஸ்'** வெடிக்கிறது. அவருடைய மௌன ஓலம் திக்கெட்டும் பரவித் தெறிக்கிறது. உடல் வலியினாலன்றி, உண்மைகள் தந்த வலியினால் பிறந்த அந்த மௌன ஓலம் எங்கும் நிறைந்து பரவி ஒலிக்கிறது.

● ●

மக்சீம் கார்க்கியின் தாய் 'பெலகேயா நீலவ்னா'வும் மகாசுவேதா தேவியின் 'சுஜாதாவும்' கற்பனைப்பாத்திரங்களல்ல; பாவெலும், ப்ரதீயும் புனைந்துரைக்கப்பட்ட கதாநாயகர்களல்ல. யதார்த்தத்தின் வகைமாதிரிகள் அவர்கள்! அவர்கள் சாதாரண மனிதர்களின் இலக்கிய உருவகங்கள். உங்களில் இருக்கும் பாவெலையும், ப்ரீதீயையும், நீலவ்னாவையும், சுஜாதாவையும் முன்னெடுத்து அடியெடுங்கள்.

• அரசு

படிப்பகம்

www.padippakam.com

# இரண்டு இந்தியா ஒரு மனிதாபிமானம்

திரும்பத் திரும்ப நினைவூட்டப்படுகிறது
குஜராத்தின் பூகம்பம்.
திட்டமிட்டே மறைக்கப்படுகிறது
காட் ஒப்பந்தம்.

மனிதர்கள் போல் இல்லை
தனது சமன்நிலை குலைக்கப்படும்போது
பொறுத்துக் கொள்வதில்லை பூமி
பூகம்பமாய் வெடிக்கிறது

மனிதர்கள் போல் இல்லைதான்
பூமி பொறுப்பேற்றுக் கொள்கிறது.

குஜராத்தின் கட்டிடக் காண்ட்ராக்டர்கள்
தலைமறைவாகி விட்டார்கள்.
தனியார்மயம் - தாராளமயத்தால்
நாட்டை நடுங்க வைக்கும்
பாராளுமன்ற தரகர்களோ
பவனி வருகிறார்கள்
தோல்தல் திமிருடன்.

குஜராத்தின் சோகத்திற்கு
பூகம்பம் காரணம் என்றால்,

நிலைகுலையச் செய்யும்
இறக்குமதிக் கொள்கையின்
கோரச் சாடசிகளுக்கு
யார் காரணம்?

இரண்டையுமே
பரிசீலித்துப் பாருங்களேன்.

●●●

ஒரு குழந்தையின் சிரிப்பைக்
கொலை செய்ய
உங்களுக்கு மனம் வருமா?
சிதைந்து கிடக்கும்
அதன் உதடுகளை நசுக்கும் செங்கல்
யாருடைய இதயம்?

தூக்கத்திலும் தனது தாயை
சரியாக இனங்காணும்
அந்தச் சிறுவனால் இப்போது
அம்மாவின் பிணத்தைக் கூட
அடையாளம் காட்ட முடியவில்லை.

முடிவிலாது அழுது தேம்பும்
அவனது குரலில் நடுங்குகிறது
பார்ப்பவர்களின் இதயம்.

துண்டுத் துண்டாய் அழுகும் கைகளில்
தனது அருவருப்பான தாகத்தைத்
தணித்துக் கொள்ள மனமின்றி
ஈக்களும் இடம்பெயர்ந்து செல்கின்றன.

செத்துப் போனவர்களின்
மவுனத்தைப் பார்த்து
இருப்பவர்களின் வலி ஏங்குகிறது.

சுவாசிப்பவர்களைத் தேடி அலைந்து
பிணங்களில் இட்றி விழுகிறது காற்று

இடிபாடுகளுக்கிடையே ஏங்கித் தவித்து
சிறுநீர்குடித்துச் சிறிது பிழைத்து...
பசியின் தனிமையில் மாட்டிக் கொண்டு
மிச்சமிருக்கும் இரத்தத்தை
முலைப்பாலாய் ஊட்டி
குழந்தையைக் காப்பாற்றிய குஜராத் தாய்...

இப்படிப் பிழைப்போமா என
அணு அணுவாய்ச் செத்துப்
பிழைத்தவர்களின்
ஒப்பாரியையும்...

செத்தவர்களின் நிணவாடையையும்
கண்டுணர்ந்த அதிர்ச்சியில்
நடுங்கிச் சில்லிட்டு
நெளிகிறது நர்மதை .

●●●

ஆடிப்போன அஸ்திவாரங்கள்,
பொய்த்துப்போன மனித நம்பிக்கைகள்...
குஜராத்தில் மட்டுந்தானா?

நாடு முழுக்க அணு அணுவாய்ச்
செத்துக் கொண்டிருப்பவர்களின்
அபயக் குரல்
உண்மையிலேயே
உங்களுக்குக் கேட்கவில்லையா!

இடிபாடுகளின் இன்னொரு பக்கத்தை
அல்லவரிசைகளில் காட்ட மறுக்கும்
செயற்கைக் கோளைத் தாண்டி



**இது பூகம்பமல்ல. புது தில்லியை அழகுபடுத்த இடிக்கப்பட்டச் சேரிகள்.**

www.padippakam.com

செலுத்திப் பாருங்கள்
உங்கள் மனிதாபிமானத்தை.

கைத்தறி நெசவுக்கு நூல் வாங்கிய
கடனை அடைக்க
சிறுநீரகங்களை விற்றும்
ஈடு செய்ய முடியாமல்

இறந்துபோன குடும்பத்தவரின்
பிரேத பரிசோதனைக்கு
நூல்வாங்கித் தர தவித்து
நொறுங்கிப் போகும்
ஈரோடு நெசவாளிகளின் சோகம்
எந்த வகையிலும்
குஜராத் சோகத்திற்குக் குறைவா
குமோ!

கட்டிய வீடே சமாதியான
புஜ் நகரின் சோகத்துக்குப் பின்னே
போகும் மனிதாபிமானம்
வாங்கிய பூச்சி மருந்தே
வாழ்க்கையை முடித்து வைத்த
பருத்தி விவசாயிகளின் பக்கம்
வர மறுப்பதேன்?

கரும்பு வெட்டி இந்த முறையாவது
கண்ணைப் பார்த்துக் கொள்ளலாம்
என நம்பி
வாங்குவதற்கு ஆலைகள் மறுத்தால்
பயிரோடு வயிறும் காய்ந்து சோடையாகி
வாழ்க்கை துண்டாய்ப் போனவர்களின்
மீட்புப் பணிக்கு
மீள்வதெப்போ உங்கள் மனிதாபிமானம்?


பிள்ளைக்குப் பால்கொடுக்க மறந்தாலும்
வயலுக்கு நீர்பாய்ச்ச மறக்காத
வறிய விவசாயிகளின்
அறுவடைக் கனவுகள் மீது
விலைபோகாத நெல் மூட்டைகள் சரிந்து



**பஞ்சாப் விவசாயிகளிடமிருந்து நெல் மூட்டைகளை வாங்க மறுக்கும் அரசு.**

தரைமட்டமாகும் சோகத்தை
உங்களால் தாங்கிக் கொள்ள முடியுமா?

ஆடு வளர்த்து, கோழி வளர்த்து
பால் விற்று, தீக்குச்சி அடுக்கி
காப்பாற்ற யாருண்டு என
அணு அணுவாய்ச்
செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கும்
சிறு தொழிலாளர்களின் வாழ்க்கைப்
பரப்பை
வெளிநாட்டுப் பொருட்களின்
இறக்குமதி
விபத்துக்குள்ளாக்கும் சோகத்தை மட்டும்
பார்த்துக் கொண்டிருக்கலாமா
உங்கள் பரந்த உள்ளம்?




**பம்பாய்: இருப்புப் பாதையில் வாழும் சேரிகள்.**

ஒரு வேளை
பால்கனிகள் இடிந்து விழுவது
தான்
பாதிக்குமோ உங்களை?

குடும்ப பாரம் தாங்காமல்
குடிசைகளுக்குள் நசுங்கிக் கிடக்கும்
இதயங்களுக்கு
உங்கள் இரக்கத்தை ஈர்க்கும்
கவர்ச்சி இல்லை போலும்.

குஜராத் பிணங்களின் மீது
கொட்டும்
மனிதநேய மழையின்
சாரல் கூட
மானிய வெட்டால் மடியும்
மக்கள் மீது தெறிக்காத
மர்மம் என்ன?

நிவாரண நிதி தந்தோரின் பட்டியல்
கருணாநிதி குடும்பத்தின்
சன் டி.வி.யில் ஓடுகிறது.
நிராதரவாக்கப்பட்ட
மக்களின் பட்டியல்?

குஜராத்தின் அதிர்வுகள்
ரிக்டர் கருவியில் பதிவாகியுள்ளன.
கோடிக் கணக்கான தொழிலாளர்களைக்
கோரச் சாவுக்குத் தள்ளும்
தனியார்மயத்தின் அதிர்வுகள்
எந்தக் கருவியில் பதிவாகும்?

நிலம் நடுங்காமலேயே
மதுரை விவசாயிகள்
திருப்பூருக்குத் தூக்கி வீசப்படுகிறார்கள் —
கூலித் தொழிலாளர்களாக.

நிலமற்ற விவசாயிகளோ
நாடெங்கும் விசிறியடிக்கப்படுகிறார்கள்
திக்கற்றவர்களாக.

நிலம் நடுங்காமலேயே
ஆலைகள் சரிகின்றன
நொறுங்கிய கற்களாய்த்
தொழிலாளர்கள்.

தென்னையும், ரப்பரும்
வேரோடு பிடுங்கியெறியப்படுகின்றன
நீலமலை நடுங்குகிறது —
நிலநடுக்கத்தினால் அல்ல.

நில நடுக்கத்தைப் பாாத்து
"இந்தியாவே இரண்டாகப்
பிளந்து விடுமோ" - என
அதிர்ச்சி தெரிவிக்கும் அன்பர்களே.

உற்றுப் பாருங்கள்...
ஏற்கெனவே
இந்தியா இரண்டாகத்தானிருக்கிறது.

**• துரை. சண்முகம்**

படிப்பகம்

www.padippakam.com

# எது நீதி?

— இலட்சுமணப் பெருமாள்

வெள்ளாமை யில ஆட்டை விட்டான் மாட்டை விட்டான் அழிம்பு ஜாஸ்தி அப்படின்னாத்தான் ஒரு பகடையை விட்டு தப்பு அடிச்சி ஊர் சாட்ட விடுவாங்க. அப்படி பிராது ஒண்ணுங் கிடையாது. ஊர்க் கூட்டமெல்லாம் ஒண்ணுங் கெடையாது. இருந்தாலும் ஊர் சம்சாரிக ஆள் தவறாம களத்து மேட்டுக்கு வந்திருந்தாங்க.

தாத்தையா நாயக்கர் வந்து உட்கார்ந்திருந்தார். அவரை நேரடியா பாத்தா மூக்கும் முழியும் குடைக்காதும் முழங்காலுக்குத் தொங்குற கைகளும் நெசம்மா காந்தி மாதிரியே இருப்பார். அவரு வீட்டுக்குள்ளே சிமெண்டு பச்சை கலர்லே உயரத்துல காந்தி, நேரு, படேல், ராஜாஜின்னு வரிசையாக கண்ணாடி போட்டோவாக மாட்டியிருக்கும். தாவ்ரத்தில் நின்று தவசம் வாங்க வந்த கூலியாளுக, இந்தப் படங்களைப் பாத்து தாத்தையா நாயக்கருக்கு இவங்கள்ளாம் தாயாதிக்காரங்கன்னு நெனச்சிக்கிடுவாங்க.

இவரு ஜாஸ்தியா பேசமாட்டார். யாராவது பேசுனா பக்கத்திலிருக்கிறவர் அவரு என்ன பேசுறார்னு இவருகிட்டெ எடுத்துச் சொல்லுவார்.

தாத்தைய நாயக்கர் வீட்டுல மாடு மேய்க்கிற பயிட்டன் பகடைதான் அன்னக்கி குத்தவாளி. குத்தமுன்னா குத்தம் லேசுப்பட்ட குத்தமில்லே. அதான் தாக்கல் சொல்லாமலே அன்னக்கி அவ்வளவு கூட்டம்.

''இப்பத்தான் வேலக்காரங்க காலமாய்ப் போச்சே. அவனை எதுவும் சொல்ல முடியுதா. சம்சாரிக்கி எங்க மதிப்பிருக்கு?'' காலை கூந்தரிப்பிலேயே வியர்க்க ஆரம்பித்துவிட்ட உடம்பை மேல் துண்டினால் விசிறியவாறு எல்லோருக்குமான ஒரு தத்துவத்தை உதிர்த்தார் முச்சந்தி பண்ணை முதலாளி. 'ஆமாமா' 'சம்சம்' 'கலிமுத்திப் போச்சி' என்று நாலுபேர் வழிமொழிய தாத்தையா நாயக்கர் முச்சந்திய பாத்து லேசா தலைய ஆட்டி மூக்குமுனியில சிரிச்சி பாஸ்மார்க் போட்டார். இன்னும் மொதலாளிகிட்டெ நூத்துக்கு நூறு வாங்குற கைகளெல்லாம் கூட்டத்திலிருக்கிறார்கள்.

''இப்பளித்தாங்...!'' வாயில் ஒதுக்கியிருந்த வெத்தலை புகையிலை கலவையோடு பேச ஆரம்பித்த ஒவுரெட்டி பக்கவாட்டில் புளிச்சின்னு எச்சியைத் துப்பிவிட்டு ஹ்ம்ம்..... என்று தொண்டையைச் செருமி, 'இப்படித்தான்....!' என்று பழைய படி ஆரம்பித்தார்.

'என்னடா பயிட்டா! மொதலாளியவுகளுக்கு என்ன மொகாந்திரஞ் சொல்றே!' ஒவுரெட்டியின் பேச்சில் குறுக்கிட்டு விவகாரத்தை ஆரம்பித்தார் ராமானுஜ நாயக்கர்.

''சாமியவுக உத்தரவு எந்தலைக்கு மேலே.'' பழைய கிழிந்த சேலையை கோவணமாய்க் கட்டி கற்கால மனிதன் குடைந்து தங்கிய பொந்தினைப் போல் வயிறு கொண்ட பயிட்டன் நெருஞ்சாண் கிடையாகக் கும்பிட்டு விழுந்தான். கண் இடுக்குகளில் பீழை தள்ளி நடுமூக்கின் இருபுறமும் நீர் இறங்கி காய்ந்திருந்தது. தள்ளாத வயதாகையால் விழுந்தவன் எழுந்து நிற்க ரொம்ப சிரமப்பட்டுக் கொண்டிருந்தான். இந்த இடைவேளையில் சுதாரித்த ஒவுரெட்டி, ''நல்லா நாஞ்சொல்ற கதையை கேளுங்க.....'' என்று தொடர்ந்தார்.

''ஐயா ஐயா நா வல்லநாட்டுலருந்து வாரேன். ஆடு கன்னு மேப்பேன். மூணு தேறமும் கஞ்சித்தண்ணி மட்டும் ஊத்துனாப் போதும்''னு சொல்லிக்கிட்டு ஒருத்தன் வந்தான். நீங்க கூட பாத்துருப்பீக ஒரு ஒஞ்சட்டப்பய'' ஆள்காட்டி விரலை நட்டமாய் நிறுத்தி கூட்டத்திலெ எல்லோருக்கும் காண்பித்தார். சரின்னு சொல்லி ஆடுகளை மேச்சி அடச்சிக்கிட்டிருந்தான். ஒரு ஒரு மாசம் போகவும் பய கொஞ்சம் உடம்பு வச்சி மெழமெழன்னு வந்தான். வீட்லருந்த மிச்ச மீதியத் தின்னு கொஞ்சம் தண்ணி ஊறிக்கிடிச்சி.

''அப்பொ இருளாயி இருளாயின்னு ஒரு கொஞ்ச வயசுல தாலி அத்தவ நம்ம வீட்ல சட்டி பானைகளை கழுவிக்கிட்டிருந்தா. ஆளு பாத்தீகன்னா நல்லா.... டேங்கப்பா... அரபுக் குதிர மாதிரி உடம்பு. சும்மா கல்லுக் கட்டடம் போல கிண்ணின்னு இருப்பா.''

ரெண்டு கையையும் மடக்கி புஜம் வரையிலும் ஏத்தி இறக்கி பறவை போல அடித்து காண்பித்தார். சம்சாரிக் கூட்டமெல்லாம் அரை வாயைத் திறந்து புருவத்தை மேலே ஏற்றி ரசனை முகபாவத்தோடு தலையை ஆட்டி சுவராஸ்யமானார்கள்.

ஏறு வெய்யிலின் உக்கிரம் பயிட்டனின் உடம்பில் சுர்ரென்று பரவ, யாரையும் ஏறிட்டுப் பார்க்காமல் தலை கவிழ்ந்திருந்தான். எழுபதைத் தாண்டிய வயது. பற்களில்லாத வாயின் மேல் நாடியும் கீழ் நாடியும் ஜப்பென்று ஒட்டியிருந்தது. மூக்கிலிருந்து தொங்கிய கள்குடி மீசை நாடிக்கு கீழே கூரைத் தாவாரம் போல தொங்கியிருந்தது. குதிகாலும் விரல் பதிவுகளும் ஒட்டை விழுந்து தேய்ந்த இடதுகால் ரப்பர் செருப்பும், வலது காலில் இழுபட்டு அறுந்து போன பழைய இடதுகால் தோல் செருப்பும் அவனைப் போலவே ஒதுங்கி தூரத்தில் கிடந்தது. ஆணும் பெண்ணுமாக சக்கிலிக் குடியிலிருந்து கொஞ்சப் பேர் நின்று கொண்டிருந்தார்கள்.

''அந்த மட்டுலெ அந்தப் புள்ளையெ பாக்கும்போதெல்லாம் இந்தப் பய அய்யின்னுக்கிடறதும் புய்யின்னுக்கிடறதுமாயிருந்தான். ஒருநா நான் கண்ணார தொழுவுல வச்சி பாத்து பிடிச்சிட்டேன்'' என்று சொன்ன ரெட்டியாரை ராமானுஜ நாயக்கர் மறித்தார்.

''நீரு தொடுப்பா வச்சிருந்ததை அந்த இளவட்டப்பயல் வசப்படுத்திக்கிட்டான். ஒங்கிட்டெ அவ போக்குவரத்து கொறஞ்சதும் ஏழெட்டு உருப்படிகளைக் காணோம்னு போலீஸ்ல பிராதுகொடுத்து அவன உள்ள வச்சிட்டு பழையபடி நீயி போய் படுத்து எந்திரிக்கியாக்கும். அதுக் குத்தான் இந்தக் கூட்டம் போட்டுருக்கா?'' மடையடியில் தண்ணீர் பாய்ச்சுவதில் ரெண்டு பேருக்கும் இருக்கிற தாவாவை மனசிலெ வ்வத்து, ராமானுஜ நாயக்கர் பழி தீர்த்துக் கொள்ளவும், ரெட்டியார் வாயடைத்துப் போய் மிரண்டு திருதிருன்னு பார்த்த மட்டுலெ இருந்தார்.

''காவக்கார மன்னாரு எங்கெய்யா?''

''இந்தா இருக்கேன் மொதலாளி.''

''வாய்யா வந்து பிராதைச் சொல்லு.''

''கூட்டத்தின் மத்தியில் வந்து நின்ன காவல்காரருக்கு படபடவென்று உத்தரவு போட்டார் ராமானுஜம்.

காவல்காரர் சொல்ல ஆரம்பித்தார். ''தை மாசப் பிறப்பன்னைக்கி தாத்தையா மொதலாளி வீட்டுலெ ஒரு ஆடு கரை குட்டி போட்டிருச்சி. நல்ல நாளும் பொழுதுமா சம்சாரி வீட்டுலெ குறை மாத குட்டி ஈண்டா ஆகாது - மேக்கொண்டு இந்த வருசம் ஆடுகள் பலுகாதுன்னு பயிட்டனை விட்டு புதைச்சிட்டு வரச்

www.padippakam.com

சொன்னோம். அன்னைக்கே குழிப்பாலும் ஊத்துனோம். மறுநா கரிநாளைக்கி மொதலாளி வீட்டுக்கு இரண்டு கிலோ கறியை வாங்கி கொடுத்துட்டு நானும் ரெண்டு வாய் வீட்டுல போய் அள்ளிப் போட்டுக்கிட்டு சுடுகாட்டுப் பிஞ்சைப் பக்கமாப் போவோம்னு போனேன். அப்பொ மழை புசுபுசுன்னு தூரிக்கிட்டிருந்திச்சு.''

''இடுகாட்டுப் பாலத்துக்கு நேரா போகவும் பாலத்துக்குள்ளிருந்து புகையா வந்தது. உள்ள மெல்ல எட்டிப் பாத்தேன். நல்லா மூணு கல்லு வச்சி, கொள்ளிக்குடம் ஒடச்சி போட்டிருப்பாங்கள்ல அதுலெ நல்லா தூறு உள்ளதா பாத்து நல்லா உலை மூடி சைசுக்கு எடுத்து கல்லுல வச்சி தீ மூட்டி என்னமோ அவிச்சுக்கிட்டிருந்தான். பக்கத்துல கிடங்கு தண்ணீ வாய்ப்பா கெடந்தது. கொஞ்சநேரஞ்செண்டு கட்டியிருந்த கோவணத்தை அவுத்தான். இந்நேரம் சுடுகாட்டுப் பாதைக்கு நல்ல நாளும் பொழுதுமா யாரு வரப் போறா? சட்டியெ கீழே இறக்கி வச்சதும் பழையபடி கோமணத்தை கட்டுனதுதான் தாமசம், சட்டிக்குள்ள கையவிட்டு சாவகாசமா எடுத்து திங்க ஆரம்பிச்சான். நானும் அரவமில்லாம கண்டுக் கிடாம யோசனை பண்ணிகிட்டே போனேன். அப்பத்தான் ஞாபகம் வந்து மாலோடைக்குப் போய் பாத்தேன். கரைகுட்டி புதைச்ச இடம் தோண்டிக் கிடந்தது.''

கூட்டம் அமைதியாயிருந்தது.

''ஏண்டா பயிட்டா வாஸ்தவந்தானா? இந்தச்சோலி ஆகுமா?'' பொதுக்குமைனர் நாயுடு கேட்டார். ''என்னமோ மொதலாளி, வயித்தாத்திரம். ஏதோ வாய் செத்துப் போயி செய்துட்டான். நீங்கதான் பெரிய மனசு பண்ணனும்'' பேசாமல் தலை கவிழ்ந்திருந்த பயிட்டன் சார்பாக அவன்வகையறா கும்பலில் இருந்து பதில் வந்தது.

''என்னப்பா வாயி அப்படிக் கேக்கு. மாத்தப் பிறப்பு, தைப்பூசம். குறைமாசக் குட்டின்னு குழிப்பால் ஊத்துறதெல்லாம் ஆடு பலுகாம போயிறக் கூடாதுன்னு தானே.''

''ஆமா மொதல்லாளி, நாங்க செத்த மாடும் செத்த ஆடும் இன்னக்கித்தான் புதுசா திங்கிறமாக்கும்'' பயிட்டன் சார்பில் ஒரு இளவட்டம் பொறுமை இழந்து நுழைந்தது.

''ஏய் கூட்டத்திலிருந்து எந்தப் பய முண்டை பேசுறது. பேசுற நாயி எதுக்க வந்து பேசு. இன்னுமே மொதலாளி வீட்டுக்கு இவன் மாடு, மேய்க்க வேண்டாம்.''

''சரி மொதலாளி எங்கயாவது போய் ரெண்டு வீடு வாங்கி குடிச்சிக்கிடட்டும். கெழவனுக்கு இன்னயோட விடுதலை கொடுத்திருங்க.''

''அந்தா... அந்த வாய் பேசுறவனப் பிடி. எவன்டா இப்ப பதிலுக்கு பதில் பேசுனது? அவன் பயிட்டன் வாங்குன கடன கட்டிட்டுப் போ. மன்னாரு பிடி அவென.''

''மொதலாளி யாரையும் புடிக்க வேண்டாம். எல்லாம் இங்கதான் நிக்கிறோம். என்ன? கடன் பத்திரத்தை கொண்டு வாங்க நியாயமா பேசுவோம்.''

''பத்திரங் கிடையாது ஒரு மயிரும் கிடையாது. எத்தனைதலைமுறையா அந்தக் கடன் இருக்குன்னு அவனயே கேளு.''

சம்சாரி கூட்டத்துலெ இருக்கிறவர்களுக்கும் சக்கிலி குடியிலிருந்து வந்திருக்கிற ஆணு பெண்ணு முக்கால் வாசிக்கு மேலே இந்தக் கடனப் பத்தி தெரியாது.

''அப்பொ பயிட்டனுக்கு நாலு அஞ்சு வயசுக்குள்ளதான் இருக்கும். அப்பனில்லாத பய. அவனுக்கே இப்ப ரொம்ப அரிச்சலாத்தான் ஞாபகமிருக்கு. அப்பொ நாட்டுல சட்டக்காரங்க தாட்டீகம் (வெள்ளைக்காரன் ஆட்சி). அப்பொ ஆந்திரா பக்கமிருந்து காளகஸ்தி சாகிபுகள் துணி வியாபரத்துக்கு வருவாங்க. சுட்ட செங்கல் நெறத்துலெ, புருவமெல்லாம் செம் பட்ட பாஞ்சி, பருத்த பட்டன்போட்ட கோட்டும் கைலியும் கட்டி தலையில தொப்பியும் எலிவால் மீசையும் உயரமுமில்லாம குட்டையுமில்லாம இமுத்த தொந்தியோட தூரத்துல வரும் போதே செண்டு வாசன்ன தூக்கி அடிக்கும்.

''உருதும் தெலுங்கும் கலந்து கொஞ்சம் கொஞ்சம் தமிழும் பேசுவான். பெரிய பெரிய ஜமீன்களையே நீ வான்னுதான் பேசுவான். அவுக வீட்டு பொம்பள பிள்ளைகளை அவா இவான்னுதான் பேசுவான். அவுகளும் இதைப் பெரிசா எடுத்துக்கிடறதில்லை.

''ஒரு தடவை வந்து துணிமணிகள் கடனாய்ப் போட்டு பழைய பாக்கியை தவசமாய் பயறு பச்சை மிளகாய் வசூல் பண்ணி பொதிகளாய் குதிரையிலேத்தி கொண்டு போவான். பழையபடி ஆறு மாசம் கழிச்சுத்தான் வருவான். கடனக்கட்டாத புள்ளிகளை தெருவுல நின்னு மானத்த வாங்குவான். கர்லை கையை ஒதறி உருதுல என்னமோ அவயம் போடுவான். அது என்னமோ அசிங்கமான வார்த்தைன்னு மட்டும் புரியும். எப்பேர்பட்ட ஆளுக்கும் தாட்சண்யம் கிடையாது.

''வெள்ளாமை விளைச்சல்கள் இல்லாத வருஷத்தில் மேற்கே செங்காத்து கிளம்பி வானத்துக்கும் பூமிக்கும் மாம்புலி கொளுத்துன மாதிரி தெம்மேலு மூலையிலே அடச்சி வீச ஆரம்பிச்சவுடன் காளகஸ்தி சாகிபு வர்ற காலமாய்ப் போச்சுன்னு வீட்டை பூட்டிட்டு ஊரவிட்டு ஓடுவாங்க.

ஆந்திராவிலிருந்து வந்து வசூல் பண்ண முடியாத ஆத்திரத்துல பூட்டுண வீட்டை ஆங்காரமா போய் மிதிப்பான். பூணு வச்ச கம்பாலே சடேர் சடேர்னு அடிச்சி ஊரெல்லாம் பாத்து பதறுகிற மாதிரி ரகளக்காடு பண்ணுவான். இதை அடுத்தவன் பாத்து லொங்கிப் போய் தவசத்தோடு வந்து மரக்காலால அளந்து




படிப்பகம்

www.padippakam.com

கொடுத்துட்டு குதிரைக்கும் நாத்து கூளமும் கழிதண்ணியும் போட்டி போட்டுக் கொண்டு வந்து குமிப்பான்.

''காளகஸ்தி சாகிபுன்னா பச்ச ரத்தம் குடிக்கிறவன். கங்கு மாதிரி கனகனன்னு சிவந்த கண்ணால உருட்டிப் பாத்தாலே வீடு விளங்காது. அவன் வாயில விழப்ப டாதுன்னுல்லாம் சனங்க மத்தியில பெரிய அரட்டி இருந்தது. அவன் பிரவேசமான நாள்லருந்து திரும்பி போற நாள் பூராவும் ஊரு மயானம் போல வெறிச்சோடிக் கிடக்கும். முக்காதுட்டு கூட அவன் முத லைத் திங்கெ விடமாட்டான். ஆறு மாசம் கழிச்சு வரும்போது அவன்கிட்ட கடன்பட் டவன் செத்துப் போயிட்டான்னா வாரிசா இருக்கிறவனோ தூரத்து சொந்தமோ வலியப் போய் அந்தக் கடன கட்டியா கணும். இல்லேன்னா ஊர் நாயெல்லாம் பின்னாடி விரட்ட, சனமெல்லாம் வேடிக்கை பாக்க சுடுகாட்டுல போய் சாம்பல கூட்டி வச்சி ரத்து ரத்துன்னு பூணு வச்ச கம்பாலே சாம்பலை புரட்டி புரட்டி அடிப்பான்.

''அப்படி சாம்பலான பிறகும் அடி வாங்குறவன் வளசலுக்கு அது எம்புட்டு கேவலம்? இதைப் பார்த்தவன் எவனும் சாகிபு துட்டெ திங்கெ நினைப்பானா?''

''ஆனானப்பட்ட சம்சாரிகளே அப்பாடு படையிலெ பயிட்டனோட ஆத்தா குஞ்சரி என்ன மயித்துக்கு அவங் கிட்டெ கடன் வாங்கணும், ஒரு வாரத் துக்கு களத்துல ராப்பகலா நின்னு தூத்து பரசி பொடச்சி தூத்தி அம்பாரமா குமிச்சி வச்சான்னா சின்னப்படிக்கு ஆறுபடி பொலி ஒதுக்குவாங்க, ரெண்டு நாளக்கி கஞ்சியா காய்ச்சி குடிக்கலாம். இந்தப் பொழப்புல சாகிபுகிட்டெ பன்னிரெண்டு ரூபாய் ஆறணாவுக்கு ஒத்த சேலை யெடுத் திட்டு நாலு முறை காலமா, வருசக் கணக் குக்கு ரெண்டு வருசா வரும்போ தெல்லாம் பஞ்சங்கூறி சால்ஜாப்பு சொல்லி கும்புட்டு கூத்தாடுனா.

''இந்த வட்டம் அவன் விடலை. குஞ்ச ரியப் பாத்ததும் காச்சு மூச்சுன்னு கத்திக் கிட்டே ஓங்குன கை மாறாம நல்ல சீருக்கு அடிவாங்கினா. ரத்தம் சொளு சொளுன்னு தலையிலிருந்து ஒழுகுனாலும் அவன் விடுறதாயில்லை. அவளை முட்டி போட்டு குனிய வச்சி மேலே குதிரை ஏறி உட்கார்ந்து ஊரை வலம் வரச்சொல்லி அடிச்சான். அப்படியே வீட்டு வீட்டுக்கு தானியத்தை வசூல் பண்ணி அதையும் அவள் பொடதியில் ஏத்துனான். முட்டியி லேயும் உள்ளங் கையிலேயும் ரத்தங் கொப்பளிக்க ஆத்தாள ரவுண்டு விடுறதப் பாத்த நாலு வயசு பயிட்டன், அம்மா அம்மான்னு பின்னாடியே அழுது ஓடித் திரிஞ்சான். ஊருசனம் யாரும் பக்கத்து லெயே வரலெ.''

''அப்போதான் தாத்தையா முதலாளி யோட தகப்பனார் சாத்தூரப்ப நாயக்கர் அந்த பன்னிரெண்டு ரூபா ஆறணாவ கொடுத்து அதுக்கு ஈடா பயிட்டனை பண்ணைக்கு மாடு மேய்க்க வச்சிக் கிட்டார்.''

''சரி இப்ப அந்த பன்னெண்டு ரூபா ஆறாணாவை வாங்கிடுறீகளா?''

''ஙா... எவன்டா அவன் வொப்பன ஒதைக்கிற பயலே! பன்னெண்டு ரூபாய்க்கா கூட்டம் போட்டுருக்கோம்? வருசமென்னாச்சி வட்டியென்னாச்சி?''

''சரி மொதலாளி. அந்த மனுசனுக்கும் இப்ப வயது எழுபத தாண்டுது. ஒரு கல்யாணம் காட்சியில்லாமெ ஒங்களயே தஞ்சமுன்னு ஒழச்சிருக்கு. அந்த விசுவா சத்தை மெச்சாமெ வட்டி குட்டிங்கிறீகளே. அப்படிப் பாத்தா இன்னக்கி தேதிக்கு ஒரு முழுத்த ஆம்பளக்கி சம்பளமென்ன?''

''அன்னக்கி சம்பளமுன்னு பேசி மாடு மேக்கெ வந்தானா?''

''பன்னெண்டு ரூபா ஆறணாவுக்கு வட்டின்னு எழுதி வாங்குனீகளா?''

''அப்பொ அன்னக்கி சொளையா எண்ணிக் கொடுத்தவன் கிறுக்கனா?''

''பின்னே அறுபது வருசமா ஒரு பிர யோசனமுமில்லாம மாடு மேச்சவன் பேப்பயலா?''

சம்சாரிக கூட்டம் ரோசமானது. ''யோவ் ஒவுரெட்டி எந்திரிய்யா ஒரு கை பாத்துருவோம். ஏ. மன்னாரு அந்த வேல்கம்பை கொஞ்சம் கொடுத்து வாங்கு.''

ராமானுஜம் எந்திரிச்சார். சக்கிலியர் கூட்டமும் ஆணும் பெண்ணும் இருக்க இருக்க கூட ஆரம்பிச்சது. கையில கம்பை வாங்கின ராமானுஜமும் ஒவுரெட்டியோட நாலஞ்சு பேர் சேர்த்து, ''ஏண்டா! சிரிக்கி முண்டைகளெ பேசனும்னே திட்டம் போட்டு கூப்பட்டு வந்தீகளா? இப்படியே அடிச்சி கால ஒடிச்சி விட்டா யாருடா கேப்பா?''

நெரு நெருன்னு முன்னேறிப் போனாங்க.

''முதலாளி! சொன்னாக் கேளுங்க. முத லாளி! இது நல்லாயில்லே நாலும் யோசன பண்ணி செய்யுங்க. பேச்சு பேச்சா இருக் கட்டும். இந்த அடிக்கிற வேலையெல்லாம் வேண்டாம்.''

''என்னத்தடா புடுங்குவீக மயிர்களப் பூரா ம்.. ம். அடிச்சா என்ன புடுங்குவீக!''

''புடுங்க மாட்டோம். செய்ய மாட்டோம். எதுக்கு கம்பு கட்டுவோம்'' பதட்டமில்லாம சொல்லிட்டு வேட்டியை மடிச்சு கட்டுனாங்க.

இதை எதிர்பார்க்காத சம்சாரிக கூட்டம் ''சரி சரி நம்ம ஆளுக இப்படி வாங்கப்பா. இப்படி வாங்க. அவுங்க எவங்கொடுத்த தைரியத்திலெயோ இப்படிப் பேசுறாங்க. டவுனுகளுக்குப் போயி மீட்டிங்குகளெ கேட்டுட்டு தலைப்புரட்டு பிடிச்சி ஆடிட்டுத்திரியுறாங்க. விடிஞ்சி எந்திரிச்சி நம்ம நிலத்துலெதான் மிதிக்கணும்கிறதை மறந்துட்டாங்க... வந்திடுங்கப்பா...''

''அடிக்க அடிக்க கையேந்துற சாதிப் பய புள்ளெக எம்புட்டு தூரம் பேசுறான்.'' பெரிய மனுசங்க கூட்டம் பூராம் ஏதோ இடி விழுந்த வீட்டிலெ உட்காந்திருந்த மாதிரி உட்காந்திருந்தாங்க. ஒரு நடுவுள்ள சம்சாரி பரமுக்கோனு போய், சமாதானம் பேசுனார். ''ஏம்ப்பா நாளப்பின்னே சம்சாரிக தயவு வேண்டாமா?''

''ஒண்ணும் வேண்டாம். அவங்க நெலத்துலெ மிதிக்கக் கூடாதுன்னாங்க. மிதிக்கலை. எந்தச் சோலிக்கும் எங்கள கூப்பிடாமயிருந்தா போதும். உலகம் ரொம்ப பெரிசு முதலாளி. அந்த யான தலை யில குருவி உக்கார எடமில்லாமலா போகும்? தயவு வேணுமாம் தயவு, என்ன சம்மந்தமா பண்ணப் போறோம்?''

''ஏய் பரமு அவங்ககிட்ட ஒண்ணும் வாக்கொடுக்காதெ பேச்சு ரொம்ப ஓவரா போகுது'' பரமுக்கோன பாத்து சத்தமா சொல்லிவிட்டு ''ய்ப்பா பயிட்டா நீ கெட்டிக்காரனாயிட்டெ. மொதலாளி வீட்டுக்கு மாடு மேச்சது போதும். மேச்சக் கம்பை கூட்டத்துலெ ஒப்படைச்சிட்டு போப்பா... போ. மொதலாளிக்கு... அதுவும் இவ்ள நா ஆதரித்த மொதலாளிக்கு ரொம்ப மருவாதி கொடுத்தே... நீயும் உன் கூட்டமும் அழிவை தேடிக்கிட்டீங்க, அவ்ள்தான் சொல்லுவோம்''

மேச்ச கம்பை கையிலெடுத்த பயிட்டன் பின்புஜங்களில் படுக்கை வசமாய்ப் போட்டு ரெண்டு கைகளையும் அதில் படர விட்டான். கூட்டத்திலிருந்து வெளி யேறினான்.

சம்சாரிக தரப்பிலிருந்து ஏதேதோ அதட்டல் கேட்டது. சம்பிரதாயப்படி கம்பை ஒப்படைத்துப் போக வேண்டும். ஆனால் அதை மீறி பயிட்டன் போய்க் கொண்டிருந்தான். அந்த தள்ளாத வய திலும் அவன் தீர்மானமாக முடிவு செய்தி ருந்தான். இனிமேல்தான் கம்புக்கு வேலை இருக்கிறது.

●

www.padippakam.com

# ?

"விண் முட்டும் மலைகள்,
குன்றுகள், பாறைகளைப் பார்த்தால்
உனக்கென்ன தோன்றும்" என்றாய்!

என்னவெல்லாமோ தோன்றியது

வெறுமனே கல்லாக...
தடைக் கல்லாக...
வாயிற்படிகளாக...
சிலைகளை
மறைத்து வைத்திருக்கும் அற்புதமாக...
சாபம் பெற்ற அகலிகைகளாக...
திறந்திருக்கும் புதையலாக...
மேகப்பறவை வந்தமரும் கிளையாக...
கவிதையாக...
காலத்தின் இருக்கையாக...
கம்பீரமாக... பிரம்மாண்டமாக...

அமைதியாகச் சிரித்தாய்!
ஒரு வரியில் சொல் என்றாய்.

எப்படிச் சொல்வது?
குன்று முட்டிய குருவியானேன்.

உனக்கு வேடிக்கைதான்
மெல்ல முறுவலித்து

காப்புக் காய்த்த உள்ளங்கை உயர்த்தி
பொம்மைக்கள் என்றாய் பார்.

கல்லானேன்.

• தீபன்



# இப்போதே இக்கணமே...

அன்பார்ந்த மாணவர்களே

ஒரு மனிதனின் வாழ்க்கையில் மாணவப் பருவம் எத்தனை துடிப்பானது தெரியுமா? மூளையின் கற்கும் திறன் மங்கிய முதுமையில்தான் அந்த அருமை பலருக்கும் புரிகிறது.

ஆனால் ஆளும் வர்க்கத்திற்கு உங்களின் துடிப்பும், திறமையும் நன்கு தெரியும். உங்கள் படிப்பையும் வளர்ப்பையும் அவர்கள் தீர்மானிக்கிறார்கள்.

பெற்றோருக்கு
நீங்கள் படித்து வேலைதேடிக் காப்பாற்றும் கடமையைச் செய்கின்ற ஒரு கருவி. தவறினால் ஒரு சுமை.

பள்ளிகளுக்கு
நீங்கள் கட்டணம் தரும் வருவாய்

அரசுக்கு
நீங்கள் கலகம் செய்வதை மறக்கவேண்டும். அதற்காகவே தூர்தர்சனில் உபதேசம், சன் டி.வி.யில் அரட்டை, எம்.டிவில் ஆட்டம், பெப்சி—கோக்குடன் கிரிக்கெட் ஆட்டம், கனவுக்கும் நனவுக்கும் இடையில் நீங்கள் பந்தாடப்படுவது தெரிகிறதா?

ஆம். நீங்கள் குப்பையில் வீசப்பட்ட மாணிக்கம். பிறந்தோம், வளர்ந்தோம், படித்தோம், மணந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்று மந்தைகளைப் போல உங்கள் அத்தியாயம் முடிந்து விடுகிறது இல்லையா?

ஆம் என்றால் குப்பையிலிருந்து எழுந்து வாருங்கள். எங்களோடு இணையுங்கள். மாணிக்கத்தை பட்டை தீட்டும் பணியினை ஒரு தாயாகச் செய்கிறோம்.

நீங்கள், உங்கள் குடும்பம், சொந்தம், நட்பு, காதல், சினிமா, கிரிக்கெட், அரசியல்,வரலாறு, இலக்கியம் இவற்றினை உண்மையான பொருளில் தெரிந்து கொள்வீர்கள். இயற்கை — மனித சமூக வரலாற்றைப் புரிய வைக்கும் மார்க்சியக் கல்வி உங்களுக்கு புதிய உலகை — சிந்தனையை — வாழ்வைத் திறந்து விடும். அது உங்கள் ஆளுமையைத் தூண்டி, மனித குலத்திற்கு தொண்டாற்றத் தேவையான அறிவு, திறமை, பொறுப்பினைக் கற்றுக் கொடுக்கும்.

நமது பள்ளியில் கற்பதற்கு முடிவே கிடையாது. களிப்பும், துடிப்பும், சாகசமும், சவால்களும் இந்த வாழ்க்கையில் ஏராளம்.

வாருங்கள். ம.க.இ.க.வில் இணையுங்கள். தியாகமும், பெருமிதமும் ஒளிவீசும் கம்பீரமான வாழ்க்கையை வாழந்து பாருங்கள். காத்திருக்க நேரமில்லை. இப்போதே... இக்கணமே.

ம.க.இ.க.வில் இணைய விரும்பும் மாணவர்கள்
புதிய கலாச்சாரம்,
18, முல்லைநகர் வணிக வளாகம், 2-வது நிழற்சாலை,
அசோக்நகர், சென்னை - 83.
என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

படிப்பகம்

www.padippakam.com

**மக்களுக்கான அரசியலை தெரிந்து கொள்ள, போராட**
**மக்களுக்கான பண்பாட்டை புரிந்து கொள்ள, வாழ்ந்து காட்ட**
**ம.க.இ.க. பேச்சு-பாடல் ஒலிப்பேழைகள்**
**வீட்டிலும் சிந்தனையிலும் இடம்பெற வேண்டிய பேழைகள்**

## இருப்பு

1. 'தேர்தல் சூதாட்டம்' - 1996-ஆம் ஆண்டு தேர்தல் புறக்கணிப்பிற்காக தோழர். மருதையன், மாநிலச் செயலர், ம.க.இ.க. ஆற்றிய உரை, விலை: ரூ. 25/-
2. 'சாதி - தீண்டாமை ஒழிப்பு' - தோழர். கதிரவன், மாநில செயற்குழு உறுப்பினர். விலை: ரூ. 25/-
3. 'போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்- மக்கள் சர்வாதிகார மன்றங்களைக் கட்டியமைப்போம்' - 1999-ஆம் ஆண்டு தேர்தல் புறக்கணிப்பிற்காக தோழர். காளியப்பன் மாநில இணைச் செயலர், ம.க.இ.க. ஆற்றிய உரை. விலை: ரூ. 25/-
4. 'நாட்டை மீண்டும் காலனியாக்காதே' 'மரணக்குழியில் மக்களை தள்ளாதே' - 2000-ஆம் ஆண்டு தருமபுரியில் நடந்த மே-நாள் பேரணியில் தோழர். மருதையன் ஆற்றிய உரை. இரண்டு பேழைகள் - விலை : ரூ. 50/-

## புதிய பேழைகள்

2001-ஆம் ஆண்டு தமிழ் மக்கள் இசை விழா கருத்தரங்க - கலை நிகழ்ச்சிப் பேழைகள்.

1. ஏகாதிபத்தியப் பண்பாட்டினை வேரறுப்போம்' தோழர். கதிரவன் விலை: ரூ. 25/-
2. 'ஓய்வு - பொழுது போக்கு - இசை ரசனை' - தோழர் மருதையன்விலை : ரூ. 25/-
3. 'திரையிசையமைப்பும், இசைக் கலைஞனின் அக எழுச்சியும்' - திரு. இசைவாணன், திரையிசையமைப்பாளர் விலை: ரூ. 25/-
4. 'தமிழிசைக் கருவி வகைகளும் - அவற்றின் உலகளாவிய ஒருமை நிலையும்' - முனைவர் இ. அங்கயற்கண்ணி, தமிழ்ப் பல்கலைக் கழகம் மற்றும் 'சிதம்பரம் - புதிய இரகசியம்' முனைவர் அரங்கராசன், சிக்கையா நாயக்கர் கல்லூரி, முனைவர். இராசு. (மூவரது உரைகளும்) விலை: ரூ. 25/-
5. 'ஊழல்புராணம்' - வில்லுப்பாட்டு - ஆத்தூர் கோமதி குழு மற்றும் நாட்டுப்புறப் பாடகர்களின் களத்துப் பாடல்கள் விலை: ரூ. 25/-

## மறுகாலனியாதிக்க எதிர்ப்பு மாநாட்டு உரைகள்
### ஒலிப்பேழை வடிவில்

ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., ஆகிய அமைப்புகளின் சார்பில் கோவையில் கடந்த ஏப்ரல் 22, 23 தேதிகளில் நடைபெற்ற மறுகாலனியாக்க எதிர்ப்பு மாநாட்டில் கீழ்க்கண்டோர் ஆற்றிய உரைகள் விற்பனையில் உள்ளன.

1. தோழர். கதிரவன், ம.க.இ.க., 2. தோழர். மாறன், வி.வி.மு., 3. தோழர். காளியப்பன், ம.க.இ.க., 4. தோழர். மருதையன், ம.க.இ.க., 5. தோழர். தங்கராசு, பு.ஜ. தொ.மு., 6. டாக்டர். எம்.ஆர். சிவசாமி, தமிழக விவசாயிகள் சங்கம். 7. பேரா. சிவகுமார், மாநிலக் கல்லூரி, சென்னை. 8. வழக்கறிஞர் சி. பாலன், கர்நாடக உயர்நீதி மன்றம், பெங்களூர். 9. மாக்சிமன் அரக்கல், விவசாயிகள் முன்னேற்றச் சங்கம், கூராசுண்டு, கேரளா. 10. ஜெ. தேவதாஸ், கோவில்பட்டி தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்கம். 11. சி.பி. சண்முக சுந்தரம், கோவை வெட்கிரைண்டர் மற்றும் உதிரிப் பாகத் தயாரிப்பாளர் சங்கம். 12. வி.டி. அரசு, சிறு விசைத்தறி உற்பத்தியாளர் சங்கம், பள்ளிப் பாளையம்.

சில பேச்சாளர்களின் உரைகள் தனிப் பேழைகளாகவும், ஓரிரு பேச்சாளர்களின் உரைகள் ஒரே பேழையிலுமாக வெளியிடப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் 60 நிமிட ஒலிப் பேழை. விலை: ரூ. 30/- மற்றும் பாடல் ஒலிப்பேழைகள்

தேர்தல் வந்து தீர்ந்தது என்ன - ரூ. 35, இருண்ட காலம் - ரூ. 35, அசுர கானம் - ரூ. 35, அடிமைச் சாசனம் - ரூ. 35, அண்ணன் வர்றாரு - ரூ. 35, காவி இருள் - ரூ. 35, ஓட்டுப் போடாதே புரட்சி செய் - ரூ. 35, ஆண்ட பரம்பரையா - அடிமைப் பரம்பரையா - ரூ. 35, வசந்தத்தின் இடி முழக்கம் - ரூ. 35, பாரதிதாசன் பாடல்கள் - ரூ. 40 ஆகியவையும் கிடைக்கும்.

ஒலிப்பேழை தேவைப்படுவோர் நேரில் வரலாம். இரா. சீனிவாசன் பெயருக்கு பணவிடை அனுப்பி தபாலிலும் பெறலாம். தபால் செலவு தனி.

**தொடர்பு கொள்க:**
*புதிய கலாச்சாரம், இரா. சீனிவாசன், 18, முல்லை நகர் வணிக வளாகம், 2-வது நிழற்சாலை, அசோக் நகர், சென்னை - 600 083.*

| அலுவலக நேரம் காலை 10.00 முதல் 2 வரை | 'கீழைக்காற்று' வெளியீட்டகத்திலும் கிடைக்கும். |
|---|---|


''புதிய கலாச்சாரம்'' உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள்
படிவம் IV (விதி-8)

| | | |
|---|---|---|
| 1. வெளியிடும் இடம் | : | 3, நான்காவது தெரு, செகந்நாதபுரம், சேத்துப்பட்டு, சென்னை - 600 031. |
| 2. வெளியிடும் காலம் | : | மாதம் ஒருமுறை |
| 3. அச்சிடுபவர் பெயர் | : | இரா. சண்முகராசு, |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | எழில் பிரிண்ட்ஸ், 110, 2-ஆம் தளம், 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024. |
| 4. வெளியிடுபவர் பெயர் | : | வி. வில்லபேசன் |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 3, நான்காவது தெரு, செகந்நாதபுரம், சேத்துப்பட்டு, சென்னை - 600 031. |
| 5. ஆசிரியர் பெயர் | : | வி. வில்லபேசன் |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 3, நான்காவது தெரு, செகந்நாதபுரம், சேத்துப்பட்டு, சென்னை - 600 031. |

வி. வல்லபேசனாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

(ஒ-ம்) வி. வல்லபேசன்
வெளியிடுபவர்.


**அன்பார்ந்த வாசகர்களே!**

கோவை மாநாடு மற்றும் குறும்படத் தயாரிப்பு வேலை காரணமாக மார்ச், ஏப்ரல் இதழ்கள் வெளிவரவில்லை. மன்னிக்கவும்.

'ஓய்வு, பொழுது போக்கு, இசை ரசனை' கட்டுரையும், 'சிறுபான்மையினருக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.இன் பொய்யும் புரட்டும்' தொடர் கட்டுரையும் அடுத்த இதழில் இடம் பெறும்.

இரு மாத இடைவெளி காரணமாக வாசகர் கடிதம் இடம் பெறவில்லை. அடுத்த இதழிலிருந்து மீண்டும் இடம் பெறும். கருத்துக்களை அனுப்புமாறு வேண்டுகிறோம்.

தோழமையுடன்,
ஆசிரியர் குழு.

www.padippakam.com

2-ம் பக்கத் தொடர்ச்சி

எது நடந்தாலும் நடக்கட்டும் என்று ஒதுங்கும் போக்கை எந்தப் பாடத்திட்டத்திலும் மாணிக்கம் படித்து அறிந்ததில்லை. மக்களிடம் அரசியல் வேலை செய்யவந்த அந்தக் கணத்திலேயே ஒரு சமூக விஞ்ஞானியைப் போல், சரியாக இனங்காண மாணிக்கத்தைப் பயிற்றுவித்தது எது?

''தேவனே! தான் செய்வது என்னவென்று தெரியாமல் செய்யும் இவர்களை மன்னித்து விடும்'' என்று கூறும் ஏசு நாதரின் வாரிசுகள் அல்ல அந்தச் சிறுவர்கள். மக்களை தமக்கு வழக்கமான பிற்போக்குச் சிந்தனையில் வாழ அனுமதிக்காத லெனினுடைய வழித் தோன்றல்கள் அவர்கள்.

பத்தாம் வகுப்புப் படிக்கும் வெண்ணிலாவின் அனுபவத்தைக் கேளுங்கள் ''தனியார்மயத்தாலே பலருக்கும் பாதிப்பு, தாராளமயத்தாலே நம்ம நாட்டுத் தொழில்கள் அழியும் அப்படின்னு பிரச்சாரம் பண்ணப்ப ஒருத்தர் வெளிநாட்டுக் கம்பெனியெல்லாம் வந்தாத்தான் நல்ல நல்ல பொருள் கிடைக்கும். ஏ கிளாஸ் பொருள்லாம் கிடைக்கும் அப்படின்னு சொன்னாரு. அதெல்லாம் சரி எல்லாரும் வாங்க முடியுமா? நம்ம நாட்டுத் தொழிற்சாலையெல்லாம் மூடி பல குடும்பம் தெருவுல நிக்குமே அப்படின்னதுக்கு, நிக்கறவன் நிக்கட்டும் அதெல்லாம் பார்த்தா நாடு முன்னேறுமா? அப்படின்னு எரிச்சலா பேசினாரு''.

சக மனிதன் செத்தாலும் சாகட்டும் தான் மட்டும் சவுகர்யமாக வாழ வேண்டும் என்ற வெறித்தனத்தை இந்த நாட்டு விவசாயிகளும் தொழிலாளர்களும் இனியும் அனுமதிக்கப் போவது இல்லை. புரட்சி என்பது ஆளும் வர்க்கங்களுக்கு எதிரான போராட்டம் மட்டுமல்ல. ஆளும் வர்க்கக் கருத்துக்களால் நிரப்பப்பட்டு இருக்கும் மக்களின் நிகழ்காலச் சிந்தனைக்கும் எதிரான போராட்டம் தான் என்பதை செயலில் காட்டி வருகிற இளம் தோழர்களில் ப்ளஸ் 2 மாணவி மீனாவின் அனுபவம் இது:

''நாங்க தனியார்மயத்தை ஏன் கூடாதுன்னு விளக்கிப் பேசறப்ப ஒருத்தரு அதெல்லாம் கிடையாதும்மா! தனியார் மயம் வரணும் அப்படின்னாரு'' ''சரி நாங்க ஏன் வேணாம்னு விளக்கம் சொன்னோம் ஏன் ஆதரிக்கிறீங்கன்னு நீங்க விளக்கம் சொல்லுங்க'' அப்படின்னு கேட்டதுக்கு ''காரணம் தெரியாது. ஒரு முறை தனியார்ட்ட விட்டுத்தான் பாப்போமேன்னு சொல்றாரு. விளக்கத் தெரியல'' இந்தியாவின் பாராளுமன்ற அரசியல் மக்களை வெறும் பார்வையாளராகவே நீண்ட காலமாக வைத்திருக்கும் அபாயத்தின் உச்சக் கட்டம் இது.

''அய்யய்யோ உங்கள்ட்ட பேச முடியாது போல இருக்கே''

ஆம். இந்தநாட்டு நடப்புகளை இந்த நாட்டை மீட்கும் உண்மையான அரசியல் வழியைப் பெண்கள் தெரிந்து கொண்டு விட்டால் நாட்டுப்பற்றே இல்லாத பிழைப்புவாதிகள் எப்படிப் பேச முடியும்? சிறுவர்கள், பாக்கியராசுக்கும், ஊர்வசிக்கும் முந்தானை முடிச்சுப் போடும் தவக்களைகளாக தாவிக் குதித்தால் சகித்துக் கொள்ளும் இந்தச் சமுதாய அமைப்பும் அரசும், பன்னாட்டுக் கம்பெனிகளுக்கும் ஓட்டுக் கட்சிகளுக்கும் உள்ள முந்தானை முடிச்சை அவிழ்த்து அரசியல் பேசினால் அனுமதிக்குமா?

பிரச்சாரம் செய்யக் கூடாது என்று காவல்துறை சிறுவர்கள் அனைவரையும் காவல் நிலையத்திலேயே முடக்கி வைத்த போதும் அவர்கள் பிரச்சாரம் ஓயவில்லை. ''எங்களை ஏன் கைது செய்தீர்கள்? நாங்கள் செய்த தவறு என்ன? எங்களை நாட்டுக்காக வேலை செய்ய விடுங்கள்'' என்று அடுக்கடுக்காக அரசியல் பேச அடிமைத்தனத்தை மட்டுமே அதிகாரமாகக் கொண்ட காவல்துறை கலங்கிப் போனது.

சிறுவர்களின் முகத்தில் பயத்தையும் பதட்டத்தையும் ஏற்படுத்த முயன்று தோற்றுப் போன காவலர்களுக்கு நாட்டுப் பற்றின் மிடுக்கை முதன்முறையாக இந்தச் சிறுவர்களிடம் தரிசிக்க வாய்ப்புக் கிடைத்தது.

''போலீசைக் கண்டு எங்களுக்குப் பயமில்லை, வாடி போடி என்று பேசின ஒரு பொம்பள போலீசை 'மரியாதையாகப் பேசு' என்று நாங்கள் திரும்பத் திட்டினோம், அடித்தால் திருப்பி அடிக்கலாம் என்ற ஆத்திரம் இருந்தது'' இது பிரச்சார இயக்கத்தில் ஈடுபட்ட சிறுவர்களின் மனநிலை. மறுகாலனியாதிக்கத்திற்கு எதிராக, காட் ஒப்பந்தத்தின் கயமைத் தனத்திற்கு எதிராகச் சிந்திக்கும் ஒவ்வொருவரும் பெற வேண்டிய உணர்வு இது.

பிரணவ மந்திரத்தின் ரகசியத்தை அப்பனுக்குப் பாடம் சொன்னதாக போற்றப்படும் முருகப் பெருமானின் மகிமை காட் ஒப்பந்தத்தின் ரகசியத்தை இந்த நாட்டு மக்களுக்கே போட்டுடைக்கும் இந்தச் சிறுவர்களின் செயல் கீர்த்திக்கு முன் எம்மாத்திரம்? வயதான காலத்தில் தனக்கு ஆதரவாக இருந்த ஒரே மகனை போருக்குச் சென்று வா என்று அனுப்பிவிட்டு புளகாங்கிதத்தோடு இருந்தாளாம், புறநானூற்றுத் தாய் ஒருத்தி.

''நாடு மறுகாலனியாவதை எதிர்ப்போம்'' என்ற இந்தப் பிரச்சார இயக்கத்திற்குத் தங்களது பிள்ளைகளை அனுப்பி வைத்த பெற்றோர்களின் பொறுப்புணர்வும் நாட்டுப் பற்றும் புறநானூற்றை விஞ்சி நிற்கிறது. பல்வேறு ஊர்களில் இருந்து வந்து ஒன்று கூடி நாட்டை மீட்கப் போராடும் இந்த இளம் ரத்தங்களை அரசின் அடக்குமுறையால் மட்டுமல்ல, சிலரின் அலட்சியத்தாலும் முடக்கி விட முடியாது. அவர்கள் பிடிவாதக்காரர்கள். வெறும் இனிப்பு வார்த்தைகளாலோ, மிட்டாய்களாலோ அவர்களைச் சரிக்கட்ட முடியாது, அவர்களுக்கு இந்த நாடு முழுவதும் வேண்டும். அவர்களது தேவை இந்த நாடு. ஆம், உழைக்கும் மக்களின் இந்தியா. பேராசான் மாசேதுங் சொன்னது போல இறுதியில் இந்த நாடு இளைஞர்களுடையது. ஏன்? உங்களுடையதும் தான்.

**பேட்டி, தொகுப்பு: சுடர்விழி.**

**மறுகாலனியாதிக்க எதிர்ப்பு மாநாட்டிற்கான பிரச்சார இயக்கத்தில் பங்கு பெற்ற இளந்தோழர்கள்.**

1. மீனா, +2, திருச்சி
2. தீபா, +2, விருத்தாச்சலம்
3. வெண்ணிலா, 8-ம் வகுப்பு, காரப்பட்டு
4. கார்க்கி, 10-ம் வகுப்பு, திருச்சி
5. அரிகிருஷ்ணன், 10-ம் வகுப்பு, காரப்பட்டு
6. ஜெயந்தி, 10-ம் வகுப்பு, காரப்பட்டு
7. பகத்சிங், 9-ம் வகுப்பு, கோவை
8. பரமேஸ்வரி, 10-ம் வகுப்பு, காரப்பட்டு
9. சாருமதி, 10-ம் வகுப்பு, காரப்பட்டு
10. மகாலட்சுமி, 10-ம் வகுப்பு, காரப்பட்டு
11. விஜய், 8-ம் வகுப்பு, கோவை
12. தமிழ்ச்செல்வன், 8-ம் வகுப்பு, திருச்சி
13. ராஜகுரு, 7-ம் வகுப்பு, திருச்சி
14. தினேஷ், 8-ம் வகுப்பு, திருச்சி
15. செரபண்டராஜு, 7-ம் வகுப்பு, திருச்சி
16. ரமேஷ், 8-ம் வகுப்பு, திருச்சி
17. மாணிக்கம், 8-ம் வகுப்பு, கோவை


ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

PUTHIYA KALACHARAM
(TAMIL MONTHLY)

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS
FOR INDIA UNDER NO.42647/87

Regd No. TN/Chief PMG-303 / 2000

www.padippakam.com




உலக வர்த்தகக் கழகத்தை மூடு.
ஆஸ்திரேலிய மாணவர்களின்
மே நாள் எழுச்சி




ஆஸ்திரேலியா:
ஒலிம்பிக் நடந்த சிட்னி அல்ல
பங்குச் சந்தையை முற்றுகையிடும்
தொழிலாளர்களின் சிட்னி



ஐரோப்பாவெங்கும் போலீசுடன்
தெருச்சண்டையில் இறங்கும் தொழிலாளர்கள்





சைக்கிளில் செல்லத் தடை
செய்யப்பட்ட லண்டனின்
மையப் பகுதியை
முற்றுகையிடும்
தொழிலாளர்களின்
சைக்கிள் படை.

# உலக முதலாளித்துவத்திற்கு எதிராக உலகத் தொழிலாளர்களின் போர்!

படிப்பகம்